விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


Valampurii
website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 30 வியாழக்கிழமை (16.10.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 301

# வைக்கோலை பொசுக்கியதாலேயே அரசின் மீது ஜெனிவாவில் விசாரணை!

## ஜனாதிபதிக்கு முதலமைச்சர் சாட்டை



(யாழ்ப்பாணம்) நாட்டின் பொறுப்பு வாய்ந்த ஜனாதிபதி, எங்கள் கோரிக்கைகளை ஆராயாது வடக்கு மாகாண சபையை வைக்கோல் பட்டடை நாய் என்று விமர்சித்துள்ளார். நாங்கள் வைக்கோல் பட்டடை நாய்கள்தான், எங்கள் வைக்கோல் பட்டடையின் ஒரு பகுதியை ஜனாதிபதியின் ஒரு சகோதரர் தீ வைத்துப் பொசுக்கியதால்தான் ஜெனிவாவில் விசாரணை நடக்கின்றது. மற்றைய சகோதரர் வைக்கோல் பட்டடையைப் பராமரிப்போம் பத்தும், இருபதும், முப்பதும் தாருங்கள் என்று கேட்டு வருகின்றார். இந்நிலையில் நாங்கள் நாயாக இருந்து வைக்கோல் பட்டடையின் நலம் காக்காது விட்டால் நமக்காக அவரா அல்லது அவரின் குடும்பத்தாரா நன்மை செய்யப் போகின்றார்கள்? நாயாக உழைக்கப் போகின்றார்கள்? இவ்வாறு கேள்வி யெழுப்பியுள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

வடமாகாண நீரியல் ஆய்வு மையத் திறப்பு விழா தொண்டைமானாறு நீர்ப்பாசன திணைக்கள வளாகத்தில் நேற்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந் 19 ஆம் பக்கம் பார்க்க....

## பிரிட்டன் பிரதித் தூதுவர் சபாபதி முகாமுக்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)
சர்வதேச நாடுகளினாலும் நாம் புறக்கணிக்கப்பட்டுள்ளோம். பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் உள்ளிட்ட பல வெளிநாட்டுத் தலைவர்களும் பிரதிநிதிகளும் எம்மை வந்து பார்த்து விட்டு 19 ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கிற்கு செல்வதற்கு அனுமதி பெற வேண்டும்!

### இராணுவ பேச்சாளர் தெரிவிப்பு



(கொழும்பு)
வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்திருப்போர் வடக்கிற்கு செல்ல வேண்டுமாயின், அதற்கு பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டும் என்று படைத்தரப்பின் குரல்தரவல்ல அதிகாரியும், அமைச்சின் ஊடக மையத்தின் பணிப்பாளருமான பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் வடமாகாண விஜயத்தை முன்னிட்டு வெளிநாடடவர்கள், வெளிநாட்டு கடவுச்சீட்டை கொண்டிருப்பவர்கள் இலங்கையின் வடபகுதிக்கு செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.


இந்நிலையில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் 19 ஆம் பக்கம் பார்க்க....

## தீர்ப்பு



(15 ஆம் பக்கம் பார்க்க..)

## இலங்கை பயணத்தை ஒத்திவைத்தார் மோடி



(புதுடில்லி)
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ள இருந்த திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று இந்திய ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் உரிய முறையில் பிரதமர் மோடி தெரியப்படுத்தியுள்ளார் என்றும் அந்தத் தகவல்கள் கூறுகின்றன.

இலங்கையில் ஜனவரிமாதம் ஜனாதிபதித் தேர்தலை நடத்த திட்டமிட்டுவருவதை அடுத்தே அவர் தனது பயணத்தை ஒத்தி வைத்துள்ளார் என்றும் தெரி 20 ஆம் பக்கம் பார்க்க....

O/L
மாதிரி வினாத்தாள்
க.பொ.த (சாதாரண) தர
மாணவர்களுக்கு...
கொழும்பு கல்வி வலயத்தால்
தயாரிக்கப்பட்ட
மாதிரி வினாத்தாள்
உள்ளே

## பிரித்தானிய தூதுவர் ஆயருடன் சந்திப்பு

(லண்டன்)
பிரித்தானிய உதவி உயர்ஸ்தானிகர் லோரா டேவிட்ஸ் மற்றும் யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இடையில் யாழ. ஆயர் இல்லத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

பிரித்தானிய உயர்ஸ்தானிகராக பதவியேற்ற 19 ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த வெற்றிபெற சீனா முயற்சி

(கொழும்பு)
ஜனாதிபதித் தேர்தலில் அரசாங்கத்தின் வெற்றியை உறுதிப்படுத்துவதில் சீனா அக்கறை காட்டி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதைய நிலையில் சீன அரசாங்கத்தின்பெருமளவான முதலீடுகள் இலங்கை 19 ஆம் பக்கம் பார்க்க....

## கைதிகளுக்கு தொலைபேசி



(கொழும்பு)
இலங்கையில் சிறைக் கைதிகளுக்கு தொலைபேசி வசதிகளை செய்து கொடுப்பதற்கான திட்டம் ஒன்றை இலங்கைச் சிறைச்சாலைகள் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

இந்தத் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டதாக இலங்கையின் சிறைச் 20 ஆம் பக்கம் பார்க்க....

## நிறைவேற்று அதிகாரத்தை எதிர்க்கும் கட்சிகளுடன் பேச நடவடிக்கை !

### சோபித தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)
நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை எதிர்க்கும் சகல அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த கோட்டை நாகவிகாரையின் நகராதிபதி மாதுலுவாவே சோபித தேரர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவது தொடர்பில் மாதுலுவாவே சோபித தேரர் உள்ளிட்ட பிரதான எதிர்க்கட்சிகள் பல முயற்சிகளை தொடர்ந்து



கொண்டு வரும் நிலையில் அவர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பில் பேசுவதற்கு கோட்டை நாகவிகாரையின் நகராதிபதி மாதுலு வாவே சோபித தேரர் அழைப்பு விடுத்தால் பேசத் தயார் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட பல கட்சிகள் தெரிவித்துள்ளன. 20 ஆம் பக்கம் பார்க்க....

மேலும் 3 பேர் 3 மாதங்களுக்குள்
3 வருட விசா வென்றனர்!
வருமானத்துடன் கூடிய ஹொட்டேல் பயிற்சியில்
ஒக்டோபர் 27இல் இணைகின்றனர்
வெறும் 30,000/- ஐ முதலில் செலுத்தி
UK, Australia, New Zealand, Canada, Switzerland, Singapore and Malaysia
விரும்பிய எந்த நாட்டிலும் படிக்க - உழைக்க - குடியேற
சிகரம் தரும் தெரிவுகள்!
விபரங்களுக்கு 2ம் பக்கம் பார்க்க...
(C-8768)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட கும்பல் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 11 பேர் கொண்ட கொள்ளை கும்பல் ஒன்றை தாம் கைது செய்து நீதிமன்று ஊடாக விளக்கமறியலில் வைத்துள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.ஏ.டி.றொஹான் மகேஸ் தெரிவித்தார்.

குறித்த கொள்ளைக் கோஷ்டியிடமிருந்து ஒரு கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதியில் திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்ட யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை, பழம் வீதியை சேர்ந்த சந்தேகநபர் ஒருவரை கடந்த செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரிடம், புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் சந்தேகநபர் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற பல திருட்டுக்களுடன் தொடர்புடையவர் என்பது தெரியவந்தது. இதனையடுத்து, புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்படி சந்தேகநபரை மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

குறித்த சந்தேக நபரை தடுத்துவைத்து விசாரணை செய்வதற்கான பாதுகாப்பு அமைச்சின் 90 நாள் அனுமதி பெறப்ப ட்டு சந்தேகநபர் விசாரணை செய்யப்பட்டார். இதன்போது, மானிப்பாய் பொலிஸ் பிரிவில் 20, யாழ்ப்பாண பொலிஸ் பிரிவில் 12, சுன்னாகம் பொலிஸ் பிரிவில் 02, வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் 03, கோப்பாய் பொலிஸ் பிரிவில் 05, தெல்லிப்பழை பொலிஸ் பிரிவில் 01 மற்றும் இளவாலை பொலிஸ் பிரிவில் 03 ஆகிய திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட இவருடன் இணைந்து மேலும் சிலர் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்தது. இதனையடுத்து, திருட்டுடன் ஈடுபட்ட ஏழாலை பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவர் கடந்த 13ஆம் திகதி கைது செய்யப்பட்டார். இருவரிடமிருந்தும் 36 மோட்டர்கள், 61 பவுண் நகைகள், 01 காஸ் சிலிண்டர், 01 நீர்இறைக்கும் இயந்திரம், 01 கமரா, 12 புடைவைகள், 03 தொலைபேசிகள், 01 தொலைக்காட்சி, 03 மேசை உள்ளிட்ட பல பொருட்கள் மீட்கப்பட்டன. அத்துடன், கொள்ளையடித்த நகைகளை வங்கியில் அடைவு வைத்து அதன்மூலம் பெற்ற பணத்தை கொண்டு கொள்வனவு செய்யப்பட்ட படி ரக வாகனமும் மீட்கப்பட்டது. தொடர்ந்து, இருவரும் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் மேலும் 7 பேர் கைது செய்யப்பட்டனர். அத்துடன், முதலாவது பிரதான சந்தேகநபரின் மனைவி மற்றும் மகள் ஆகியோரும், கொள்ளை நடவடிக்கைக்கு உடந்தையாக இருந்தனர் என்று கூறிக் கைது செய்யப்பட்டனர். அனைவரையும் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று புதன்கிழமை முற்படுத்திய வேளை அனைவரையும் நீதவான் ஜோய் மகிழ் மகாதேவா எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (எ-11)

# விபத்தில் இருவர் காயம்

(சாவகச்சேரி)

பளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணம் செய்த கன்ரர் மற்றும் கூலர் வாகனங்கள் ஒன்றுக்கு பின் ஒன்று பின்னால் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் கன்ரரில் பிரயாணம் செய்த இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் கொடிகாமம் அ.த.க பாடசாலை முன்பாக மாலை 5.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் கரவெட்டியை சேர்ந்த மாணிக்கம் மாசிலாமணி (வயது 57), தொண்டைமானாறினை சேர்ந்த இளையதம்பி பாலகுரு (வயது 65) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு கூலர் வாகன சாரதியையும் கைது செய்துள்ளனர். (எ-29,85)

# மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி

மாம்பழம் பறிக்க மரத்தில் ஏறியவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை காலை கல்முனையில் இடம்பெற்றுள்ளது. கல்முனை-03, குறிச்சி மாதவன் வீதியை சேர்ந்த நல்லதம்பி ஜேசுதாஸன் (வயது - 46) என்பவரே மின்தாக்கி உயிரிழந்தவராவார்.

நேற்று காலை 8.45 மணிக்கு தனது வீட்டுமுற்றத்திலுள்ள மாமரத்தில் மாம்பழம் பறிக்க ஏறியபோது அருகில் இருந்த 33 ஆயிரம் வற்ஸ் உயர் அழுத்தம் கொண்ட மின்னிணைப்பு கம்பியில் மாங்காய் பறிக்கப் பயன்படுத்திய இரும்புக் கம்பி தவறுதலாகப் பட்டதில் இவர் மின்தாக்கி மரத்திலிருந்து கருகியநிலையில் வீழ்ந்து மரணமடைந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக கல்முனை பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். சம்பவ இடத்துக்குச் சென்ற பதில் நீதிபதி ஏ.எம்.பதுறுத்தீன் விசாரணைகளை மேற்கொணடதுடன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல உத்தர விட்டுள்ளார். (எ-11)



## அன்பொளி கல்வியகம்


யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2014

சித்தியடைந்த மாணவர்களுக்கான

**பரிசளிப்பு நிகழ்வு**

எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 19.10.2014 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நாச்சிமார் கோவிலடி (ராஜா கிறீம் ஹவுஸ்) சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இயக்குநர்

(சி-8764)

## கிளிநொச்சி மாவட்ட அழகக உரிமையாளர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும்

23.10.2014-ம் திகதிக்குப் பின்பு அனைத்து அழகக நிலையங்களும் காலை 7.00 மணிமுதல் இரவு 8.30 மணி வரையுமே திறந்திருக்கும். அத்துடன் எதிர்வரும் தீபாவளியை முன்னிட்டு 19.10.2014 ஞாயிறு அன்று அனைத்து அழகக நிலையங்களும் திறந்திருக்கும்.

நிர்வாகம்-அழகக தொழில்
முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம்
கிளிநொச்சி.

(சி-8766)

## Vacancies

எமது யாழ்.நகர் பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Course Counselor - Female**

பாடநெறிகள் பற்றிய விளக்கங்களை மாணவர்களுக்கு அளிப்பதுடன் மாணவர் தொடர்பு அலுவலராக பணிபுரிய உயர்தரம் மற்றும் கணனி டிப்ளோமா கற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். கொழும்பு தலைமை காரியாலயத்தில் ஆரம்ப பயிற்சிகள் அளிக்கப்படும். (age 20-25)

**Assistant Center Manager - Male**

The applicant should posses a computer Degree qualification for Higher Diploma from Government Institution (age 24-30)

**Lecturer for Java, C, C++ - Male / Female**

**Management Trainee - Male / Female**

**Instructor for Tally & QB - Male / Female**

சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பிவைக்கவும்

**ASIAN COMPUTER EDUCATION**

e-mail : asianedu@dialogsl.net

(சி-8763)

விரும்பிய எந்த நாட்டிலும் படிக்க - உழைக்க - குடியேற

## சிகரம் தரும் தெரிவுகள்!

| கனடா | பிரித்தானியா |
|---|---|
| 3 வருட Multiple Entry Visa | வேலைவாய்ப்புடன் படிக்க, உழைக்க 4 வருட விசா |
| **நியூசிலாந்து** | **அவுஸ்ரேலியா** |
| நிரந்தர குடியுரிமை (PR) ஏற்பாட்டுடன் படிக்க உழைக்க | வங்கிப்பண வைப்பு இன்றி மாணவர் விசா அனுமதி |
| **சுவிற்சர்லாந்து** | **கனடா, அவுஸ்ரேலியா** |
| 3 இலட்சம் வருமானத்துடன் ஹொட்டேல் பயிற்சி | Skilled Migration நிரந்தர குடியுரிமை |

**மலேசியா**

ஒரு இலட்சம் வருமானத்துடன் ஹொட்டேல் பயிற்சி & வேலை

Visit Visa, Work Visa & Visa Rejection Appeal

SIKARAM
Education Abroad & Visa Solutions

Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0773616798 / 021 222 00 11

எமது சேவைகள் பற்றி முழுமையான விபரங்களை
www.sikaram.lk இணையத்தில் பார்வையிடுங்கள

(சி-8767)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியில் யாழ்.புகையிரத நிலையத்திற்கு அண்மையில் 1 பரப்பு 7 குளி கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
0779845854

(8071)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## அறிவித்தல்



1963ம் ஆண்டு முதல் 1995ம் ஆண்டுவரை
வெலிங்டன் சந்தியில் இயங்கிவந்த

## மொறாயஸ் மூக்குக் கண்ணாடியகம்

07.10.2014 முதல் மீண்டும் அதே இடத்தில் இயங்கி வருகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்

கிளை: மொறாயஸ்
516, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7893

முகாமையாளர்

(C-8762)



## 7ம் ஆண்டு நினைவு நாள்

அமரர் சச்சிதானந்தம்
நிமலநாதன் (சசி)



குடும்பத்தின் ஒளி விளக்காய்
குலத்தின் விருட்சமாய்
பாசமிகு தந்தையாய் பண்புமிகு கணவனாய்
கவிபாடும் கவிஞனாய் கண்ணியமான மனிதனாய்
மழலைகளின் மகிழ்ச்சியாய் மனிதருள் மாணிக்கமாய்
உற்றவர்க்கு உண்மையாய் பூமிக்கோளின் சரித்திர நாயகனாய்

மறைந்தும் மறையாது எம்மனதில் நிறைந்திருக்கும் நித்திய புன்னகைக்கு இன்றுடன் ஏழாண்டுகள். ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சாயி துர்க்கையை பிரார்த்திக்கின்றோம்

தகவல்:
மனைவி - வினோ
பிள்ளைகள் - அர்ச்சனா, அபிநயா
குமரன் (ஜேர்மனி), தமயந்தி (ஜேர்மனி)

லேன்,
கோக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(8075)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் விளம்பர தொடர்பு
021 221 7603, 021 567 1532
valampurii@yahoo.com
valampuriijaffna@gmail.com

# இலவச சினைப்படுத்தல் ஊசி ஏற்றப்படும்

கரவெட்டி கால்நடை வைத்திய அலுவலகங்களுக்குட்பட்ட கால்நடை வளர்ப்போர் தமது மாடுகளுக்கு இலவசமாக சினைப்படுத்தல் ஊசியை ஏற்ற முடியும் என்று கரவெட்டி கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

கரவெட்டி கால்நடை வைத்திய அலுவலகத்திற்குட்பட்ட ஒவ்வொரு பண்ணையாளர்களும் தமது கால்நடை வைத்திய அலுவலகத்திற்கு வருகை தந்து வினாக் கொத்து அடிப்படையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்து தரப்படல் வேண்டும் என கால்நடை வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-60)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்வன் பாஸ்கரதாஸ் பாநிலவன்**

கிளி/ முருகானந்தா ஆரம்ப வித்தியாலயத்தின் தரம் 3 இல் கல்வி கற்கும் செல்வன் பாஸ்கரதாஸ் பாநிலவன் அவர்கள் மாகாண மட்ட சித்திரப் போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார். இவர் மேலும் கல்வியில் பல பரிசில்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மம்மா, பெரியம்மா, அன்ரி, தங்கை றொபினா மேசி
ஸ்கந்தபுரம்.


## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நிகழ்வு

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையும் கொக்குவில் பொது சன நூலகமும் இணைந்து நடத்தும் English-A Window to the world நிகழ்வு இன்று வியாழக்கிழமை மதியம் 12.30 மணியளவில் கொக்குவில் பொதுசன நூலகத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆங்கிலப் புத்தக கண்காட்சி இடம்பெறவுள்ளதோடு ஆங்கிலத்தின் முக்கியத்துவம் எனும் தலைப்பிலான உரையினை பலாலி ஆசிரியர் பயிற்சி கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் எஸ்.பத்மநாதன் ஆற்றவுள்ளார். (இ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2014 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 183 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து எமது பாடசாலைக்கு பெருமையை தேடித்தந்த மாணவன்

***செல்வன் திலீபன் கஜலோன்***

அவரைப் பாராட்டுவதோடு 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களான சி.லக்ஷி- 157, வே. கபிஷ்னா- 124, ரா.மதுமிதன்- 114, த. அரணிகா- 112, சி. அனுசன்- 103 ஆகியோரையும் வாழ்த்துகின்றோம்.

யா/ கம்பர்மலை வித்தியாலயம்.
கொம்மந்தறை, வல்வெட்டித்துறை. (சி-8671) அதிபர், ஆசிரியர்கள்.



## மரண அறிவித்தல்



# கந்தையா நயினார்

**(முன்னாள் அம்பாள் பஸ் உரிமையாளரும், அம்பாள் பழைய பாட்ஸ் கடை உரிமையாளரும்)**

இல 5, 5ம் ஒழுங்கை, அரசடி வீதி நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நயினார் 14.10.2014 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அமிர்தவாசகம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி, சில்வேஸ்திரி ஆகியோரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி, சாமியார், திருநாவுக்கரசு, இராசம்மா, கண்மணிப்பிள்ளை சண்முகராசா மற்றும் சதாசிவம், பிள்ளையம்மா, மங்கையற்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரணிஸ்குமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - வேலணை), டிலிஸ்குமார், அகிலா, அஞ்சுலா (கனடா), அலெஸ்ரெலா, அனிலா (உதவி கணக்காளர் - BCAS Jaffna), நிரேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், லேக்குமார் (சுதன்), சசிகலா (ஆசிரியர்-யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க. பாடசாலை), விஜயகாந் (கனடா), ஜெசீலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சங்கவி, சங்கீத், நிகிதா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற இராசமணி மற்றும் மகாலட்சுமி, காலஞ்சென்றவர்களான, மகேஸ்வரி, அருள்ராசா, நடராசா மற்றும் ஜெயராணி, முத்தம்மா, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், செல்வரட்ணம், தேவராசா மற்றும் யேசுராசா, துரைராசா, செல்வராசா, யோகராசா, யோகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(8067)



## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவில்

அவனியில் 29 12 1934 — ஆண்டவனடியில் 16 10 2013



### அமரர் யோசேப் ஜேமிஸ்

(முன்னைநாள் மூப்பர்- புனித வளனார், ஆலயம், புதுக்குடியிருப்பு)

நீ இன்றே என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பாய் (லூக்: 23:43)

புனித வளனாரின் காலடியே சரணாகதி என்று வாழ்ந்து
ஆண்டு ஒன்று கடந்தாலும் ஆறவில்லை எம் துயரம்
ஆலமரமாய் இருந்து அன்பான அறிவுரைகள் கூறி
எம்மை ஏணியாக உயர்த்தி வைத்த எங்கள் அப்பாவே
கனவுகள் கலைந்து போகலாம் ஆனால் உங்கள்
நினைவுகள் என்றும் எம்மை விட்டு அகலாது.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 18.10.2014 அன்று புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியில் பங்குகொண்டு செபிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

9 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு. (8052)

சகோதரி ஆரோக்கியம் (றோக்கு)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## இராசி பலன்

16.10.2014
(புரட்டாதி 30, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை- 5.57மணிக்கு
அட்டமி பிற்பகல்-4.11 மணிவரை
புனர்பூசம் பிற்பகல்-1.52 மணிவரை
இராகுகாலம்-1.32-3.02 மணிவரை
சுபநேரம்-7.32-9.02 மணிவரை
அட்டமி-நவமி

வளவன்

**மேடம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்:** உடல நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்:** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், கரைந்த சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், தொழிலில் உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

**கடகம்:** வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள்.

**சிம்மம்:** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், திடீர் பயணங்கள் உருவாகலாம், தொழிலில் அதிக பிரயாசை எடுக்க வேண்டிய நாள், சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**கன்னி:** யோகமான நாள், இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறும், பொருளாதார நிலை உயரும், தொலைதூரப் பயணங்கள் கைகூடும்.

**துலாம்:** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**விருச்சிகம்:** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், அன்றோர் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**தனுசு:** எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, தொழில் போட்டிகள் அதிகரிக்கும், போஜன சுகமுண்டு, புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**மகரம்:** சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, நட்பு வட்டம் விரிவடையும்.

**கும்பம்:** கடன் பிரச்சினையை சாமர்த்தியமாக பேசி சமாளிப்பீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், பெண் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

**மீனம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பிள்ளைகளால் பெருமை காண்பீர்கள், வருமானம் திருப்திதரும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட தேவைகள்சார் பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரல்


(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடத்தினால் நடத்தப்படும் விசேட தேவைகள் சார் பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்கான விண்ணப்பங்க்ள் கோரப்பட்டுள்ளன.




அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்று 19.11.2013 இற்கு முன்னர் நியமனம் பெற்று ஆசிரியர்களாக, அதிபராக, ஆசிரிய ஆலோசகர்களாக, ஆசிரிய கல்வியிலாளாராக சேவையாற்றுபவர்கள் இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் படிவங்களை 15.10.2014 முதல் 20.11.2014 வரை பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாமென யாழ். பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)




## நிறுவுநர் நாளும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யா/ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 19 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு கல்லூரி அதிபர் கு.விமலன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவன் இ.விஜயகுமார் மற்றும் முல்லைத்தீவு கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரும்கல்லூரியின்பழைய மாணவருமாகிய இ.விஜயகுமார் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச. சிவானந்தராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட உதவிப்பதிவாளர் இ.சர்வேஸ்வரா நினைவுப் பேருரையினை வழங்கவுள்ளார். (இ)

# கரவெட்டியில் கால்வாய் நோய் முற்றாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி கரவெட்டி பிரதேசத்தில் பரவிய கால்வாய் நோய் முற்றாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக கரவெட்டி பிரதேச கால்நடை வைத்தியதிகாரி சகுந்தலா மகேந்திரராசா தெரிவித்தார்.

இதேவேளை, மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவதற்கு கடந்த 10ஆம் திகதி முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமராட்சி கரவெட்டி பிரதேசத்தில் உள்ள கிளான், குடவத்தை, துன்னாலை கிழக்கு, துன்னாலை தெற்கு, கப்பூது ஆகிய பிரதேசங்களிலுள்ள மாடுகளுக்கு கடந்த ஜூலை மாதம் முதல் கால்வாய் நோய் தாக்கம் ஏற்பட்டது

இதனால் மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் பால் சேகரித்தல், கால்நடைகளை வேறு இடங்களுக்கு கொண்டு செல்லல், எரு சேகரித்தல், இறைச்சிக்காக வெட்டப்படுதல் என்பன முற்றாக தடை செய்யப்பட்டிருந்தது.

தொடர்ந்து, கால்நடை வைத்தியதிகாரி பணிமனையால் மேற கொள்ளப்பட்ட தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனையடுத்து, நோய்த் தாக்கம் பிரதேசத்தில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

அத்துடன், மாடு சம்பந்தமான அனைத்து செயற்பாடுகளுக்கும் அனுமதி வழங்கியுள்ளதுடன், இறைச்சிக்காக மாடுகள் வெட்டுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த சில மாதங்களுக்கு முன்பு வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மன்னார், மாவட்டங்களில் கால்வாய் நோய்த் தொற்று ஏற்பட்டு பல கால நடைகள் இறந்திருந்தன.

இந்நிலையில் கால்நடைகளை குறிப்பாக மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்து என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## முன்பள்ளிகளுக்கான நடமாடும் சேவை

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் மீசாலை பொது நூலகத்தினரால் நூலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளுக்கான நடமாடும் நூலக சேவை இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.


எனவே அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மீசாலை பொதுநூலக நூலகர் திருமதி தயாநிதி பரலச்சந்திரன் அறிவித்துள்ளார். (இ-29)

## புதிய படைப்புலகம் நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தேவி பரமலிங்கத்தின் புதிய படைப்புலகம் எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்தில் குருநகர் நாட்டுக் கூத்து மன்ற தலைவர் கலாபூஷணம் கிறகரி கிறிஸ்தோபர் தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ







வடக்கிற்கு மூன்று நாட்கள் பயணமாக வருகை தந்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பல்வேறு நிகழ்வுகளில் பங்கு கொண்டார்.இதில் யாழ். நெல்லியடி மத்திய கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடத்தை திறந்து வைத்ததுடன் இலவச கல்வித் தந்தை கலாநிதி சீ.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கராவின் 130 ஆவது ஜனன தின நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு நாடெங்கிலும் உள்ள 54 மத்திய மகா வித்தியாலயங்களில் கல்வி கற்று உயர்பதவிகளை வகித்த கல்விமான்களுக்கு விருதுகளையும் நினைவுச் சின்னங்களையும் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண் டனர். (படங்கள் கரணவாய் செய்தியாளர்)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதி நிர்வாக வலயத்துக்கான சமாதான நீதவானாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிலிப்பையா ஜெனிபேட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ். மாவட்ட நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் கடந்த செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் தற்போது யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

## நீர் விநியோகத்தடை தொடர்பான அறிவித்தல்

யாழ். பருத்தித்துறை வீதி மற்றும் வேம்படி வீதி, பருத்தித்துறை வீதி சந்திக்கும் இடையில் பிரதான தாங்கிக்கு நீரேற்றும் 12 நீர்க் குழாயில் உடைவு ஏற்பட்டு நீர் விரயமாகிக் கொண்டிருகின்றது. அதனை சீர்செய்யும்வேலைகள் உடனடியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எனவே மறு அறிவித்தல் வரை பிரதான தாங்கியின் கிழக்கு மேற்கு பகுதிகளிற்கான குடிநீர் விநியோகம் தடைப்படும் என யாழ். மாநகராட்சி நீர் வேலைப் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ

# ‘சிறு ஒளி பெரு வெளிச்சம்’ வீதி நாடகம்

## தீபாவளி தினத்தன்று யாழில்

(கொழும்புத்துறை)

தீபாவளி தின சிறப்பு நிகழ்வாக சமாதானத்திற்கும் நல்லிணத்திற்குமான பணியகத்தின் அனுசரணையில் யாழ். நாவற்குழி மகிந்த புரம் குடியிருப்பில் வசிக்கும் மக்களின் நடிப்பில் உருவாகியுள்ள சிறு ஒளி பெருவெளிச்சம் எனும் தெருவெளி நாடகம் யாழ். நாவற்குழி மகிந்த புரம் குடியிருப்பு சனசமூக நிலைய வளாகத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை தீபாவளி பண்டிகை தினத்தில் மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளதாக சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தைச் சேர்ந்த த. தர்மராஜா தெரிவித்துள்ளார்.

வங்கிக்கடன், லீசிங் சமாதானம் போன்றவற்றை மையமாக வைத்து மேற்படி தெரு வெளி நாடகம் உருவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இத்தெருவெளி நாடகத்தை யாழ்.திருமறைக்கலா மன்றம் நாடக நெறியாளர் ஜோ. ஜெஸ்ரின் எழுதி நெறியாள்கை செய்துள்ளார்.

மேலும் இத் தெருவெளி நாடக ஆற்றுகையானது யாழ்ப்பாணம், மன்னார் போன்ற பிரதேசங்களில் தற்போது மேடையேற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-51)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உணர்வழி மருத்துவம்

## ANAESTHESIA ஒருபார்வை

உலக உணர் வழிதினம் முதலாவது வெற்றிகரமான ஈதர் மூலமானஉணர் வழிப் பைநினைவு கூர்வதற் காக ஒவ்வொருஆண்டும் ஒக்டோபர் 16 ஆம் திகதி கொண்டாடப்படு கின்றது. இந்தஈதர் மூலமான உணர்வழிப்பு 1846 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி அமெரிக்கா விலுள்ள மசாசூசெட்ஸ் பொதுவைத்தியசாலையில் நிகழ்த்திக் காண்பிக் கப்பட்டது.

இது மருத்துவ வர லாற்றில் ஓர் முக்கிய நிகழ்வாக இடம்பெறு கின்றது. ஏனெனில் இந்தக் கண்டுபிடிப்பு நோயாளிகள் வலி வேதனையின்றி சத்திர சிகிச்சைக்கு உட்ப டுத்துவதற்குவழிவகுத்தது.

**அனஸ்தீசியா (ANAESTHESIA) என்றால் என்ன?**

அனஸ்தீசியாஎன்ற சொல்லின் கருத்து உணர்வை இழப்பதாகும். (Loss of sensation)

உணர்வை இழக்கச் செய்வதனாலேயே சத்திர சிகிச்சையின் போதுவலி வேதனை போன்றவற்றை நோயாளர்கள் உணரமுடி யாதுள்ளது. மருத்துவது றையில் உணர்வை இல்லாமல் செய்தல் சம் பந்தமான துறை உணர் வழியியல் (ANAESTH ESI OLOGY) என்று அழைக்கப்படும்,

உணர்வைநீக்கும் மருந்துகள் (ANAES THE TIC DRUGS) மூளைக்கு உணர்வு களை கடத்திச் செல்லும் நரம்புகளை தற்காலிக மாக தொழில் இழக்கச் செய்கின்றன. இந்த மருந்துகளின் அளவு உடம்பில் குறைவடையத் தொடங்கும்போது நோயாளர்கள் மீண்டும் உணர்வுகளைப் படிப்ப டியாகமீளப்பெறுவர்.

உணர்வழித்தலை பலமுறைகளில் மேற் கொள்ளலாம்.

**அவையாவன**

★ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் உண ர்வைநீக்குதல். (LOCAL ANAESTHESIA)

★உடலில் ஒருபாகத் தின் உணர்வைநீக்குதல். (REGIONAL ANAESTHESIA) உதாரணமாக கையில் சத்திரசிகிச்சை செய்யும் போதுஅந்தக்கையின் உணர்வைமட்டும் இல்லாமல் செய்தல்.

★முழு உடலையும் உணர்விழக்கச் செய்தல். (GENERAL ANAESTHESIA) இதன்போது நோயாளர்கள் நினைவிழந்து இருப் பார்கள் மேற்கூறப்பட்ட மூன்றுவகையான உணர் வழித்தல் முறைகளை விரிவாகப் பார்ப்போம்.

**★LOCAL ANAESTHESIA** என்றால் உடலின் ஒரு சிறிய பகுதிக்கு உணர்வை நீக்கும் மருந்தை (LOCAL ANAESTHE TICS) விசிறுவதன் மூலமோ (SPRAY), பூசுவதன் மூலமோ (OINTMENT), அல்லது ஏற்றுவதன் மூலமோ (INJECTION) அந்தப் பகுதியில் மட்டும் நரம் புகளை தொழில் இழக்கச் செய்து உணர்வை இழக்கச் செய்யலாம்.

**★REGIONAL ANAESTHESIA** இது உடலின் ஒருபகுதியின் உணர்வை இழக்கச் செய்தல் ஆகும். இதன் போது உணர்வைநீக்கும் மருந்தைபெரியநரம்புக்கட் டுகளிற்கு (BUNDLES OF NERVES) கிட்ட ஏற்றுவதன் மூலம் அல்லது முள்ளந்தண்டிற்கு அண் மையாக ஏற்றுவதன் மூலம் நரம்புகளை தொழில் இழக்கச்செய்து உணர் வழித்தலை ஏற்படுத்திக் கொள்ளலாம். SPINAL ANAESTHESIA என்றுசொல்லப்படும் முள் ளந்தண்டு நரம்புகளை தொழில் இழக்கச் செய்து பெறப்படும் உணர்வழித்தல் அதிகமான சத்திர சிகி ச்சைகளின் போது பயன்படு த்தப்படுகின்றது.

உதாரணமாகசிசேரியன் எனப்படும் மகப்பேற்று சத்திரசிகிச்சையின் போது SPINAL ANAES THESIA என்ற உடலின் கீழ்ப்பகுதியை உணர் விழக்கச்செய்தல் முறையே பயன்படுத்தப்படு கின்றது.


உடலின் ஒருபகுதியை உணர்விழக்கச் செய்யும் போதுநோயாளிவலியை உணர முடியாது.ஆனால் சுயநினைவுடன் இருப்பார்.

**★GENERAL ANAESTHESIA** என்றால் நோயாளியின் நினைவை முற்றாக இழக்கச்செய்தல் ஆகும். இதன்போதுநோயாளி ஒன்றையும் உணர முடியாது. உணர்வழித்தல் மருந்துகளை நாளத்தி னூடாக ஏற்றி மூளை உணர்வுகளை பெற்றுக் கொள்வதை நிறுத்துவதன் மூலம் இந்த GENERAL ANAESTHESIA எனப்ப டும் உணர்வழித்தல் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

சிலசத்திரசிகிச்சைகள் முற்றாக உணர்வை நீக் கியே செய்யப்பட முடியும். சத்திரசிகிச்சையின் போதுஉணர்வழித்தல் (ANAESTHESIA) செயற்பாடுகளை மேற் கொள்பவர்கள் உணர் வழி யியல் மருத்துவர் களாவர். (ANAESTH ESTIST)

**உணர்வழியியல் மருத்துவர்கள் (ANAESTHESTIST) என்றால் யார்?**

இவர்களும் ஏனைய மருத்துவர்களைப் போல் மருத்துவக் கல்லூரிகளில்



பயிற்சிபெற்ற மருத்து வர்களாவர். இவர்கள் ஒருவருடஉள்ளகப் பயிற்சியின் பின்பு உணர் வழியியலில் ஆறுமாத அடிப்படைபயிற்சி நெறியை (BASIC ANAESTH ESIA TRAINING) ஒரு உணர்வழியியல் வைத்திய நிபுணரின் வழிகாட்டலில் பெறுவார்கள். உணர் வழியியல் துறையில் நிபுணத்துவம் பெற விரும்பும் மருத்துவர்கள் 6 வருட கால பயிற்சியை உள்நாட்டிலும் வெிநாட்டிலும் பெற்றுக்கொள்வார்கள். இந்தப் பயிற்சிநெறியில் இணைந்து கொள்வதற்கு முன்பு அவர்கள் இரண்டு தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். பின்பு 3 வருடகாலஉள்நாட்டுப் பயிற் சியின் பின் இறுதிப் பரீட் சையில் சித்தியடைந்து உணர்வழியியல் கலா நிதிப்பட்டத்தைப் பெற்றுக் கொள்வார்கள். இதன் பின்பு உள்நாட்டில் ஒருவ ருடமும் வெளி நாட்டில் இரண்டு வருடமும் மேலதிக பயிற்சிகளைப் பெற்ற பின்பு உணர் வழியியல் நிபுணராக ஏற்றுக் கொள் ளப்படுவார்கள்.

இந்தப் பயிற்சி நெறி களை இலங்கையில் கொழும்புபல்கலைக் கழகத்தின் பட்டப்பின் படிப்புகளுக்கான மருத்துவ நிறுவனம் (POST GRA DUATE INSTITUTE OF MEDICINE) நடாத்துகின்றது.

உணர்வழியியல் மரு த்துவர்கள் சத்திர சிகிச்சை அறைகளில் உணர்வ ழித்தல் செயற்பா டுகளுக்கு மேலதிகமாக அதிதீவிர சிகிச்சை பிரிவு (INTEN SIVE CARE UNIT), வலி நிவாரணபிரிவு (PAIN CLINIC), அவசர சிகிச் சைபிரிவு (EMERGE NCY CARE UNIT) போன்றவற்றிலும் தமதுபங் களிப்பைவழங்கி வருகின் றார்கள்.

மேலும் அவசரசிகிச்சை பிரிவுகளில் மிகவும் நோய் வாய்ப்பட்ட அல்லது பாரதூ ரமாககாயப்பட்ட நோயாள ர்களின் பரா மரிப்பிலும் மற்றையதுறை மருத்துவ ர்களுடன் இணைந்து ஈடுபடுகின்றார்கள்.

**நோயாளர் ஒருசத்திர சிகிச்சைக்கு போகும் போதுஉணர்வழியியல் மருத்துவரின் கடமைகள் என்ன?**

1. சத்திரசிகிச்சைக்கு முன்பு நோயாளியின் உடல் உளநிலையைக் கணிப் பிட்டு (PREOPERATIVE ASSESSMENT) நோயாளிக்கும் சத்திர சிகிச் சைக்கும் பொரு த்தமான உணர்வழித்தல் முறையை பரிந்துரை செய்தல்.

2. சத்திர சிகிச்சையின் போது நோயாளிக்கு பொருத்தமான உணர் வழித் தல் மருந்துகளை கொடுத்து உணர்வை நீக்கி நோயா ளர்களின் உடற் தொழிற் பாடுகளை உறுதிசெய்தல். சத்திர சிகிச்சைமுடியும் வரை உணர்வழியியல் மருத்து வரோ அல்லது பயிற்சி பெற்ற உதவியா ளரோ நோயாளிக்கு அருகில் இருந்து நோயாளியின் உடற்தொழில் நிலமை களை அவதா னிப்பர். மேலதிகமாக உணர்வழி யியல் வைத்தியர்கள் நவீன உபகரணங்களை (MOD ERN MONITORING EQUIPMENT) பாவி த்தும் நோயாளர்களின் உடற் தொழிற்பாடுகளை அவதானிப்பார்கள்.

3.சத்திரசிகிச்சையின் பின் நோயாளியை மீள எழும் பிரிவில் (RECO VERY UNIT) வைத்தி ருந்து வலிநீக்குதல் (PAIN RELIEF), ஓங்காளம், வாந்தி (NA USEA AND VOMI TING) என்பவற்றை கட்டுப்படுத்தி நோயாளியின் சௌகரியத்தை பேணுதல்.

4.சிலநோயாளிகள் சத்திர சிகிச்சையின் பின்பு அதி தீவிர சிகிச்சை பிரி வில் பராமரிக்கப் படுவார் கள். இவர்களின் பராமரி ப்பிலும் உணர் வழியியல் மருத்துவர்கள் பங்களிப்பை வழங்குவார்கள்.

**நவீன சத்திர சிகிச் சையை சாத்தியமாக் கும் உணர்வழியியல்**

தற்போதைய உணர் வழியியல் துறை ஆரம்ப காலத்திலிருந்து நீண்ட பயணம் செய்து நவீன மயப்பட்டுள்ள ஒரு துறையாக மிளிர்கின்றது. ஆரம்பகாலங்களில் உணர்வழித்தல் துணி யில் உறிஞ்சப்பட்ட குளோரபோமை நோயா ளியின் முகத்தில் பிடிப்ப தன் மூலம் பெறப்பட்டது. இந்த முறை உணர்வழி நிலையை சரியாகஅடைய முடியாது இருந்ததுடன் பாதுகாப்பற்றதாகவும் இருந்தது. நோயாளியின் அவதானிப்புமுறைகள் (PATIENT MONITORING) நாடி பிடித்து பார்த்தல, சுவாச அசைவு என்பவற்றிலேயே தங்கியிருந்தது.

தற்கால உணர்வழியி யல் மருத்துவர்கள் ஆழமான உடற்தொ ழிலியல், உடல் இரசாயன வியல் பௌதீகவியல் புரிதலைக் கொண் டவர்களாக விளங்கு கின்றனர். அவர்கள் மருத்துவத்தில் மிகவும் நவீன மயமான உபகர ணங்களைப் பாவிப்பதற்கு பயிற்சி பெற்றவர்களாக விளங்குகின்றனர்.

இந்த நவீன இலத்திர னியல் அவதானிப்பு உபகரணங்கள் (ELECTRONIC MONITORING EQUIPMENT) நோயாளியின் இருதய தொழிற்பாடு, குருதிச்சுற் றோட்டம், சுவாசச் செயற்பாடு போன்ற தகவல்களைஅறுவைச் சிகிச்சையின் போது அறிந்து கொள்வதற்கு உதவும்

இன்று உணர்வ ழியியல் மருத்துவர்கள் பயங்கரமான, இலகுவாக எரியக் கூடிய ஈதர் போன்ற உணர்வழிக்க க்கூடிய வாயுக்களைப் பாவிப்பதில்லை. தற்கால த்தில் பலவகையான தரமானஉணர்வுநீக்கும் மருந்துகள் காணப்ப டுகின்றன. இதனால் நோயாளியின் உடல் நிலைக்கு ஏற்றவாறும் மருந்துகளை பாவிக்க கூடியதாக உள்ளது.

நவீனகாலத்தில் உணர்வுநீக்கும் மருந்துகள்,தேவையான தொழில்நுட்பம், உபகரணங்கள் இல்லாவிடில் நவீன சத்திரசிகிச்சை நுட்பங்கள் சாத்தியமற்ற தொன்றாகவே இருந்திருக்கும். இருந்தும் எல்லாவற்றிற்கும் மேலாக பாதுகாப்பான உணர்வழி மருத்துவத்திற்கு ஆதாரமாக விளங்குவது உயர்தரத்திலான பயிற்சியேயாகும்.

உணர்வழியியல் வைத்தியர்களின் கருப்பொருளாக இருப்பது நோயாளரின் பாதுகாப்பே (PATIENT SAFETY). இதனால் நோயாளர்களை பாதுகாப்புடன் மிகவும் சவால் மிக்க சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தக் கூடியதாக இருக்கின்றது.

டாக்டர்
சு. பிறேமகிருஷ்ணா
(MBBS, MD
ANESTHESIOLOGIST)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தல் எமக்கு சவால் அல்ல

## பிரதமர் தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் எமக்கு சவால அல்ல. இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றிபெறச் செய்து மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஜனாதிபதிப் பதவியில் அமர்த்துவதற்கு நாம்நடவடிக்கை எடுப்போம. வாகளித்த ஏனைய பொது மக்களின் இநத அர்ப்பணிப்பை ஒருபோதும் மறக்க மாட்டோம்.

நாட்டின் இனப் பிரச்சினையைத் தீர்த்து இனங்களுக்கிடையில் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கு ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார் என பிரதமர் தி.மு.ஜயரத்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்திருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளை தொடர்ந்து முன் னெடுத்துச் செல்ல வேண்டுமாயின் இந்த அரசாங்கத்தை நாம் பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

அண்மையில் மத்திய மாகாண முதலமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கண்டி மாவட்ட பிரதிநிதிகளுக்கான விசேட கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கட்சியின் செயற்பாட்டாளர்களான நீங்கள் வழங்கிய சக்தி மற்றும் பொது மக்கள் எமது கட்சிக்கு வாக்களித்ததன் காரணமாகவே அவரால் இந்தப் பணியை மேற்கொள்ள முடிந்தது.

உங்களது மற்றும் வாக்களித்த ஏனைய பொது மக்களின் இந்த அர்ப்பணிப்பை ஒருபோதும் மறக்க மாட்டோம். நாட்டின் இனப் பிரச்சினையைத் தீர்த்து இனங்களுக்கிடையில் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கு ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார்.

இவ்வாறான சந்தர்ப்பத்திலேயே ஜனாதிபதித் தேர்தல் பற்றிப் பேசப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் திகதி இதுவரை அறிவிக்கப்படாவிட்டாலும் எமது அரசாங்கம் இந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியை அடையும் என இங்கு கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

அதற்காக, கட்சியின் செயற்பாட்டாளர்களைத் தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கட்சியின் உயர்மட்ட செயற்பாட்டாளர்களில் இருந்து கீழ் மட்ட செயற்பாட்டாளர்கள் வரை அனை வரும் இந்த ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்கு தமது பங்களிப்பை வழங்க முனவர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## உணவு ஒவ்வாமையினால் ஊழியர்கள் 27 பேர் பாதிப்பு

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட உணவு ஒவ்வாமையினால் பாதிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் 25 பேர் உள்ளிட்ட 27 பேர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்கவிலுள்ள தொழிற்சாலையில் வழங்கப்பட்ட உணவு ஒவ்வாமை சம்பவங்களில் அண்மைகாலங்களில் இடம்பெற்ற மூன்றாவது சம்பவம் இதுவாகும்.

இதேவேளை உணவு ஒவ்வாமை சிகிச்சை காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சிலரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் தொடர்ந்து உணவு ஒவவாமை காரணமாக பலா் வைததிய சாலயில் அனுமதிக்கப்படுவது தொடர்பாக தீவிர விசாரணைகள் மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 110 | 90 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 80 | 100 | 100 |
| தக்காளி | 100 | 60 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 | 50 |
| கோவா | 100 | 80 | 80 | 80 |
| கரட் | 100 | 80 | 70 | 120 |
| பூசணி | 30 | 30 | 30 | 50 |
| புடோல் | 60 | 60 | 60 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 60 | 50 | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 | 70 |
| பாகற்காய் | 160 | 140 | 150 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 60 | 60 |
| பயற்றங்காய் | 80 | 120 | 70 | 100 |
| லீக்ஸ் | 160 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 60 | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 140 | 80 | 100 | 160 |
| முருங்கைக்காய் | 100 | 150 | 150 | 120 |
| போஞ்சி | 250 | 160 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 60 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 120 | 140 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30 | 30-35 |
| இராசவள்ளி | 120 | 100 | 90 | 160 |

## இந்து சமய பொது அறிவுப்போட்டி பரிசளிப்பு விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நாடளாவிய ரீதியில் இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கென நடத்திய இந்து சமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சையில் மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் முதலிடம் பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவுக்கு புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் பிரதி அமைச்சர் எம்.கே. ஏ.டி.எஸ்.குணவர்த்தன பிரதம விருந்தினராகவும் அமைச்சின் செயலாளர் எம்.கே.பி திசாநாயக்க கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

திணைக்களத்தின் மூலம் கடந்த ஜூன் மாதம் 28 ஆம் திகதி அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்ற அறநெறிப் போட்டிப் பரீட்சையில் மாவட்ட ரீதியில் முதல் மூன்று இடங்களைப் பெறுகின்ற 435 மாணவர்களும் தேசிய ரீதியில் முதல் இடங்களைப் பெறுகின்ற 46 மாணவர்களும் விருதுகளையும் சான்றிதழ்களையும் பணப்பரிசில்களையும் பெறவுள்ளனர்.

இந் நிகழ்வின் போது மட்டக்களப்பு நாவற்குடா இந்து கலாசார நிலைய நடனமாணவிகளின் கோலாட்டமும் கொழும்பு சங்கத்தமிழ் அறநெறிப்பாடசாலை மாணவிகளின் நடனமும் மட்டக்களப்பு விபுலானந்த அறநெறிப் பாடசாலை மாணவிகளின் நடனமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 166

### ராகுலன் பாலா




### ரத்ன சபாபதி பாலராஜ்



### தமிழ்மதி மானசா




### சுயேன் மகேந்திரன்




### கஜன் வினோ




### டொறின்



வண்டியோடு உருண்டோடுகிறது
வாழ்க்கையும் ஒரு சாண் வயிற்றுக்காக

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014
# மாதிரி வினாத்தாள்- மேல்மாகாணம்

**கணிதம்** **இரண்டு மணித்தியாலங்கள்**

## பகுதி A
### ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

1. ரூ.60000 பரிசாகப் பெற்ற ஒருவர் அப்பணத்தை ரூ 10 ஆகவுள்ள 5000 பங்குகளை வாங்குவதற்கு முதலீடு செய்கிறார். வருட முடிவில் அவர் ரூ 4000 வருமானமாகப் பெறுகின்றார்.
   i. வாங்கிய பங்குகளின் பெயர் மாத்திரைப் பெறுமானம் எவ்வளவு?
   ii. வழங்கிய பங்கிலாப சதவீதத்தைக் காண்க.
   iii. பங்கொன்றின் சந்தைப் பெறுமதி யாது?
   iv. ஒரு வருட முடிவில் இப் பங்குகளை சமத்திற்கு விற்றுப் பெற்ற பணத்தையும் ஆண்டுக்குரிய வருமானத்தையும் வங்கி ஒன்றில் 2 வருட நிலையான வைப்பிலிடு கின்றார். இற்காக வங்கி 20 % வருட கூட்டு வட்டி வழங்குகின்றது. வங்கியிலிருந்து இரண்டு வருட முடிவில் மீளப் பெறும் தொகை எவ்வளவு?
   v. மூன்று வருடங்களின் முடிவில் இவர் இலாபமாகப் பெற்ற மொத்தப் பணம் எவ்வளவு?

2. $y = (x + 1)^2 - 4$ என்னும் சார்பின் வரைபை வரைவதற்குப் பூரணப்படுத்தப்படாத அட்டவணை ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 |
| y | 5 | 0 | ...... | -4 | -3 | 0 | 5 |

a. i. $x = -2$ ஆகும் போது $y$ இன் பெறுமானத்தைக் காண்க.

ii. பொருத்தமான அளவிடையைத் தெரிந்தெடுத்து மேற்குறித்த வரைபை உமது வரைபுத் தாளில் வரைக.


b. உமது வரைபை உபயோகித்து,

i. சார்பின் இழிவுப் பெறுமானத்தைக் காண்க.
ii. $y = -2$ ஆகவுள்ள போது $x$ இன் பெறுமானங்களைக் காண்க.
iii. சார்பு மறையாக அதிகரிக்கும் $x$ இன் பெறுமான வீச்சு யாது?
iv. வரைபானது இரு அலகுகள் $y$ இன் நேர்த்திசையில் மேல் நோக்கி நகர்த்தப் பட்டால் அவ் வரைபின் சமன்பாடு யாது?

3. i. தரப்பட்ட செங்கோண முக்கோணியின் பரப்பளவு $8cm^2$ ஆகும். இத்தரவுகளுக் கேற்ப இருபடிச்சமன்பாடு ஒன்று அமைக்க.

ii. அதனைத் தீர்த்து இரு பக்க நீளங்களையும் காண்க.

iii. வர்க்க பூர்த்தியாக்கல் முறை மூலம் அல்லது வேறு முறை மூலம் $x^2 + 8x - 2 = 0$ என்னும் இருபடிச் சமன்பாட்டைத் தீர்த்து விடையை இரு தசம இலக்கங்களில் எழுதுக ($\sqrt{2} = 1.41$ எனக் கொள்க)




4. a. i. காரணி காண்க. $x^2 - 11x - 80$

ii. சுருக்கி எழுதுக. $\frac{2}{x-1} + \frac{1}{1-x}$

b. பின்வரும் ஒருங்கமை சமன்பாடுகளைத் தீர்க்க.

$\frac{x}{2} = 3y$


$4x - 5y = 19$

c. சுருக்கி எழுதுக.

i. $\sqrt{27} + 8\sqrt{3} - \sqrt{75}$

ii. $\frac{1}{2}(\lg 100 + \lg 64 - \lg 16 + 2\lg 5)$

5. a. AB என்னும் 12 m நீளமுடைய ஏணியானது நிலைக்குத்துச் சுவர் BC இன் மீது சாய்த்து வைக்கப்பட்டுள்ளது. ஏணிக்கும் கிடைத்தளம் AC க்கும் இடப்பட்ட கோணம் $60^0$ ஆகும்.
   i. திரிகோண கணித விகிதங்களைப் பயன்படுத்தி BC யின் உயரத்தைக் காண்க. (விடையை சேடுகளில் தருக)
   ii. சுவரின் அடியிலிருந்து ஏணியின் அடிக்குள்ள தூரத்தைக் காண்க.




($\cos 60^0 = \frac{1}{2}$, $\sin 60^0 = \frac{\sqrt{3}}{2}$, $\tan 60^0 = \sqrt{3}$)

b. P என்னும் துறைமுகத்திலிருந்து $060^0$ திசைகோளில் பயணம் செய்த கப்பல் ஒன்று 15 km தூரத்திலுள்ள Q என்னும் துறைமுகத்தை அடைகின்றது. பின்னர் 15 km கிழக்கு நோக்கிப் பயணம் செய்து துறைமுகம் R ஐ அடைகின்றது.

i. 1:300000 என்னும் அளவிடையில் அளவிடைப் படம் ஒன்று வரைக.
ii. P,R இற்கு இடைப்பட்ட தூரத்தைக் காண்க.
iii. படத்திலுள்ள பொருத்தமான கோணங்களை அளப்பதன் மூலம் R இலிருந்து P யின் திசைகோளைக் காண்க.


6. a. அடியின் ஆரை a ஆகவும் உயரம் 3 a ஆகவும் உள்ள திண்மச் செங்கூம்பு ஒன்றுபடத்தில் காட்டியவாறு a ஆரையும் 6a உயரமுமுடைய நீர் நிரம்பிய உருளைப் பாத்திரத்தினுள் முற்றாக அமிழ்த்தப்பட்டுள்ளது.

i. கூம்பின் கனவளவை π, a இல் தருக.

ii. நீர் வெளியே சிந்தாதவாறு கூம்பு வெளியே எடுக்கப்பட்டபின் உருளையிலுள்ள நீரின் உயரத்தை a இல் காண்க.

b. மடக்கை வாய்ப்பாடுகளை உபயோகித்து சுருக்கி எழுதுக.

$$\frac{756.1 \times \sqrt{0.475}}{5.432^2}$$




## பகுதி B
### ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

7. a. மைதானம் ஒன்றின் ஆரம்ப எல்லையிலிருந்து முதலாவது கொடிக்கம்பம் 8m தூரத்திலும் அதன் பின் இரு கம்பங்களுக்கிடையே இடைத்தூரம் 6m ஆக இருக்கு மாறும் கொடிக்கம்பங்கள் நாட்டப்படுகின்றன.
   i. ஆரம்ப எல்லையிலிருந்து முதல் நான்கு கம்பங்களுக்குமுள்ள தூரங்களை முறையே எழுதுக.
   ii. இவ் எண் தொடரி எவ்வகையைச் சாந்தது.
   iii. முதலாம் கம்பத்திற்கும் பதினொராம் கம்பத்திற்கும் இடையேயான தூரத்தைக் காண்க.
   iv. ஆரம்ப எல்லையிலிருந்து கடைசியாக நடப்பட்ட கம்பமானது 100m இலும் குறைவான தூரமாக இருப்பின் நாட்டக் கூடிய கம்பங்களின் உயர் எண்ணிக்கை யாது?

b. பெருக்கல் விருத்தி ஒன்றின் முதல் மூன்று உறுப்புக்களும் முறையே $x$, $x^3$, $x^5$ ஆயின், $\frac{T_{10}}{T_7}$ ஐக் காண்க.

8. cm/mm அளவுடைய நேர்விளிம்பையும் கவராயத்தையும் பாவித்து அமைப்புக் கோடுகளை தெளிவாகக் காட்டியும் பின்வருவனவற்றை அமைக்க.


i. $PQ = 8cm$, $QR = 7cm$, $P\hat{Q}R = 90^0$ ஆகவுள்ள முக்கோணி PQR ஐ அமைக்க.
ii. RS // QP ஆகவும் RS=10cm ஆகவுமுள்ள நாற்பக்கல் இணைப் பூர்த்தி செய்க.
iii. PQRS என்பது எவ்வகையான நாற்பக்கலாகும்.
iv. PS இன் நீளத்தை அளந்து எழுதுக.
v. P,Q,R இனூடாகச் செல்லும் வட்டத்தை அமைக்க.
vi. PSR என்னும் முக்கோணியின் சுற்றுவட்டத்தின் மையத்தின் அமைவை விபரிக்க.

9. கிரிக்கெட் போட்டி ஒன்றிற்காக மாதம் ஒன்றில் விற்பனையான அனுமதிச்சீட்டுக்கள் பற்றிய விபரம் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. (50 - 100 என்பது 50 அல்லது அதனிலும் அதிகம் ஆனால் 100 இலும் குறைவாகும்.)

| சீட்டுக்களின் எண்ணிக்கை | 50 - 100 | 100 - 150 | 150 - 200 | 200 - 250 | 250 - 300 | 300 - 350 |
|---|---|---|---|---|---|---|
| நாட்களின் எண்ணிக்கை ( மீடிறன் ) | 1 | 3 | 9 | 10 | 5 | 2 |


i. நாளொன்றில் விற்பனையான அதிக எண்ணிக்கையான சீட்டுக்கள் எத்தனை?
ii. ஆகார வகுப்பு யாது?
iii. ஆகார வகுப்பின் நடுப்பெறுமானத்தை எடுகொண்ட இடையாக் கொண்டு நாளொன்றில் விற்பனையான சீட்டுக்களின் இடை எண்ணிக்கையைக் காண்க.
iv. அடுத்த 15 நாட்களுக்கு விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படும் சீட்டுக்களின் எண்ணிக்கை எவ்வளவு?

10. சமூகமொன்றிலுள்ள 75 உறுப்பினர்களின் வேலைகள் தொடர்பான விபரத்தை வென் உரு காட்டுகின்றது. சுய தொழில் புரியும் 35 பேரில் 14 பேர் வருமான வரி செலுத்து வதில்லை. அரசாங்க ஊழியர்கள் வரி செலுத்துவதில்லை. தனியார் நிறுவன ஊழியர்கள் வரிசெலுத்துகின்றனர்.




i. தரவுகளை வென் உருவில் குறிக்க.
ii. சுயதொழில் புரிவோரில் எத்தனை பேர்வரி செலுத்துகின்றனர்.
iii. X ஆல் குறிக்கப்பட்ட பகுதியில் உள்ளவர்களை விபரிக்க.
iv. X இன் பெறுமானம் யாது?
v. 11 என்னும் எண் குறிக்கும் பிரதேசத்தை தொடைக் குறியீட்டில் எழுதுக.

11. A,B,C,D என்பன O ஐ மையாகவுடைய வட்டத்தில் உள்ள புள்ளிகளாகும். பின்வரும் கோணங்களை x,y சார்பாக காரணங்களுடன் எழுதுக.




i. $O\hat{B}D$

ii $A\hat{O}D$

iii. $A\hat{C}B$

iv. $A\hat{O}B$

v. $B\hat{A}C$

12. a. நடுப்புள்ளித்தேற்றத்தை படம் மூலம் விளக்குக

b. Δ ABC யின் பக்கங்கள் BC,CA,AB யின் நடுப்புள்ளிகள் முறையே D,E.F ஆகும். AD,EF ஐ இணைக்க.


i. தரவுகளைப் படத்தில் குறிக்க
ii ADயும் EFவும் ஒன்றை ஒன்று இரு கூறிடும் என நிறுவுக
iii. ED இற்கு சமாந்தரமாக C யினூடாக வரையப்பட்ட கோடு நீட்டிய AD ஐ X இல் சந்திக்கிறது.
Δ CDX= 2 Δ CDE என நிறுவுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

954




சுறா மீன்களால் ஒரு மைல் அப்பால் இருந்தும் ரத்த வாடையைக் கண்டு பிடிக்க முடியும்.



சுட்டி

# அட அப்படியா?



உலகின் மிக நீளமானகால்வாய், சீனாவில் உள்ளபீஜிங் ஹாங்ஹோ கிராண்ட் கேனல் Beijing Hangzhou Grnd Canal) இதன் நீளம் 1, 794 கி.மீ.

10.2014
16

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்




❖1775 - ஐக்கிய அமெரிக்காவில் மேய்ன் மாநிலத்தின் போர்ட்லண்ட் நகரம் பிரித்தானியரால் எரிக்கப்பட்டது.
❖1781 - ஜோர்ஜ் வோஷிங்டன் வேர்ஜீனியாவின் யோர்க்டவுன் நகரைக் கைப்பற்றினார்.
❖1793 - பிரெஞ்சுப் புரட்சி: பிரான்சின் பதினாறாம் லூயி மனனனின் மனைவி மரீ அண்டொனெட் கழுத்து வெட்டி மரணதண்டனைக்குட்படுத்தப்பட்டாள்.
❖1813 - ஆறாவது கூட்டணி நாடுகள் நெப்போலியன் பொனபர்ட் மீது லீப்சிக் நகரில் தாக்குதலை ஆரம்பித்தன.
❖1834 - லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையின் தொன்மைப் பொருட்கள் பல எரிந்து சேதமடைந்தன.
❖1905 - பிரித்தானிய இந்தியாவில் வங்காளப் பிரிப்பு இடம பெற்றது.
❖1923 - வால்ட் டிஸ்னி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
❖1934 - குவோமின்டாங்குகளுக்கு எதிரான சீனக் கம்யூனிஸ்டுக்களின் தாக்குதல் ஆரம்பமானது.
❖1939 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியா மீதான ஜேர்மனிய வான்படையின் முதலாவது தாக்குதல இடம்பெற்றது.
❖1949 - கிரேக்க கம்யூனிசத் தலைவர் நிக்கலாஸ் சக்காரியாடிஸ் தற்காலிக போர்நிறுத்தத்தை அறிவித்தார். கிரேக்க உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
❖1964 - மக்கள் சீனக் குடியரசு தனது முதலாவது அணுவாயுதச் சோதனையை மேற்கொண்டது.
❖1973 - ஹென்றீ கிசிங்கர், லே டுக் தோ அமைதிக்கான நோபல் பரிசு பெற்றனர்.
❖1984 - தென்னாபிரிக்காவின் டெஸ்மண்ட் டுடு அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார்.
❖1998 - சிலியின் முன்னாள் சர்வாதிகாரி ஆகுஸ்டோ பினொச்சே லண்டனில் கைது செய்யப்பட்டார்.
❖2003 - தமிழ் விக்கிப்பீடியாவில் முதலாவது கட்டுரை சிரினஎபாடி பற்றி எழுதப்பட்டது.
❖2006 - இலங்கையில் 1987 இல் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை அடுத்து இணைக்கப்பட்டிருந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்பு செல்லுபடியற்றது என்று இலங்கை உயர் நீதிமன்றம் அறிவித்தது.

பிறப்புகள்

❖1854 - ஆஸ்கார் வைல்டு, ஐரிய எழுத்தாளர் (இ. 1900)
❖1975 - ஜாக் காலிஸ், தென்னாபிரிக்கத் துடுப்பாட்டக்காரர்

இறப்புகள்

❖1799 - கட்டபொம்மன், பாஞ்சாலங்குறிச்சி மன்னன் (பி. 1760)
❖1951 - லியாகட் அலிகான், பாகிஸ்தானின் முதலாவது பிரதமர் (பி. 1896)



வெட்டுக்கிளியின் காதுகள், அதன் வயிற்றுப் பகுதி இறகுகளின் கீழ் இருக்கும். இதற்கு tympanum என்று பெயர்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்

96

### அந்த நான்கு நிபந்தனைகள்!

..முதுகு வலி ஒரு புறம் சச்சினை அவ்வப்போது பயமுறுத்திக் கொண்டிருக்க இன்னொரு புறம் சச்சின் மீண்டும் கேப்டன் ஆக வேண்டும் என்று வற்புறுத்தல் பல்வேறு நபர்களிடம் இருந்து வந்து கொண்டிருந்தது. தெனாலிராமன் கதையில் வரும் சூடு கண்ட பூனைபோல் ஒரு முறை கேப்டனாக இருந்து பட்டது போதும். அந்த வம்பே வேண்டாம். பேட்டிங்கில் கவனம் செலுத்துவது தான் எதிர்காலத்திற்கு நல்லது என்ற முடிவிற்கு வந்து கேப்டன் பதவியில் இருந்து ஒதுங்கி உள்ள நிலையில் மீண்டும் எழுந்துள்ள சர்ச்சை சச்சினைக் கவலைப்படுத்தியது. தொடர்ந்து பல போட்டிகளில் தோல்வி, தனிப்பட்ட முறையில் குடும்பப் பிரச்சினை மற்றும் ஃபார்மில் இல்லாத சூழல் ஆகிய அனைத்தும் அசாருக்கு எதிரான நடவடிக்கை எடுக்கத் தோதுவாக இருந்தன. செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சி மீடியாக்களில் அசார் பட்டிமன்றப் பொருளாகி அவர் எப்போது விலகுவார் என்று ஆரூடம் கூற ஆரம்பத்திருந்தார்கள். எனவே, கிரிக்கெட் வாரியம் அசாரை மாற்றிவிட்டு வேறு ஒருவரை நியமிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானது.

அஜீத் வடேகர், மதன்லால், ஷிவ்லால் யாதவ், தேஷ் பாண்டே ஆகியோரைக் கொண்ட கிரிக்கெட் வாரியம் இரண்டே நிமிடத்தில் பரிசீலித்த பெயர்களின் பட்டியலில் இருந்த முதல் நபர் சச்சின்தான். மீண்டும் கேப்டன் பதவி ஏற்க சச்சினை வற்புறுத்துவோம். சச்சின் வேண்டாம் என்று சொன்னால், பிறகு அடுத்த பெயர்களைப் பரிசீலிப்போம் என்று முடிவு செய்தனர். வடேகரின் முழுமையான ஆதரவு அசாருக்கு என்றாலும் ஒரே ஊர்க்காரர் என்ற முறையில் சச்சினை விடவும் மனசில்லை. என்றாலும், மீண்டும் கேப்டன் பதவி வந்தால் அதை மறுக்கக்கூடாது என்று அவர் கூறினார். சச்சினைக் கேப்டனாகத் தேர்வு செய்து அந்த செய்தியை அவருக்கு தெரிவிக்க வீட்டிற்கு ஃபோன் செய்தால், சச்சின் அங்கு இல்லை. அவர் எங்கு சென்றார் என்ற தகவலும் இல்லை. ஒருவேளை இந்த இக்கட்டான சூழலில் இருந்து தப்பிக்க சச்சின் தெரிந்தே வெளியூர் சென்றிருக்கக் கூடும் என்றும் யூகிக்கப்பட்டது. கிட்டத்தட்ட 24 மணி நேரம் கிரிக்கெட் வாரியம் அவரை சல்லடை போட்டித் தேடியும் சச்சின் அகப்படவே இல்லை.

ஒருநாள் முழுக்கத் தலைமறைவாக இருந்த சச்சின் அடுத்தநாள் பத்திரிகையாளர்களைச் சந்தித்து தனது முடிவை அறிவிப்பதாகக் கூறினார். கிரிக்கெட் அணிக்குத் தலைமை என்பது கௌரவமான விடயம். நீயாக எதையும் தேடிப் போகாதே. அதே சமயம் நல்ல வாய்ப்புகள் வரும்போது அதை மறுப்பதும் நல்லது இல்லை என்றுதன் குருநாதர் அச்ரேகர் கூறியிருந்தது சச்சின் நினைவிற்கு வந்தது. பத்திரிகையாளர் சந்திப்பில் சச்சின் இவ்வாறு கூறினார். கிரிக்கெட் வாரியம் எனக்கு மீண்டும் கேப்டன் பதவி வழங்கியதை பத்திரிகை, தொலைக்காட்சி, நண்பர்கள் மூலம் தெரிந்து கொண்டேன். மனதளவிலும், உடலளவிலும் கேப்டன் பதவி ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை. வழக்கமாகத் துணை கேப்பன்தான் கேப்டனாக வேண்டும். நான் துணைக் கேப்டன் இல்லை. இருப்பினும் என்னைக் கேப்டனாக தேர்வு செய்தமைக்கு நன்றி. ஆனால், நான்கு விடயங்களை நிபந்தனைகளாக நான் கூற விரும்புகிறேன். கேப்டனாக இருப்பது கௌரவமான விடயம் என்பதால் எனக்குப் பெருமைதான்.



வாலு போச்சு கத்தி வந்தது என்ற பழமொழிக்கு ஏற்ப முதுகுவலிகொஞ்சம் குறைந்தது என்று சச்சின் மகிழந்த வேளையில் வேறு ஒரு ரூபத்தில் வேறு ஒரு வலி அவருடன் சரசமாட கதவைத் தட்டிக்கொண்டிருந்தது.

(தொடரும்)

கே. ரமேஷ்

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 46

...உறக்கத்திலேயே குற்றம் கூறிக்கொண்டிருக்கிறோம். நாம் விழித்துக் கொண்டிருப்பதாக நினைத்து விமர்சனம் செய்கிறோம். நமக்கு எல்லாவற்றைப் பற்றியும் எல்லாமும் தெரியும்- அன்பையும் சேர்த்து என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். நமக்குத் தெரிந்தது உண்மையான அன்புதான் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

### கவனத்தேவையை விட்டுவிடுதல்

ஒரு சின்னக் கதை....

ஒருவனுக்கு ஒரு பணக்கார அத்தை இருந்தாள். அவன் அவளை அடிக்கடி பார்க்கச் செல்வான். அவனுக்கு அவளது சொத்தின் மீது ஒரு கண் இருந்ததால், அவளைச் சந்தோஷப் படுத்த எதையும் செய்யத் தயாராக இருந்தான். அவளிடம் இரண்டு பூனைகள் இருந்தன. அவற்றிடம் அவள் மிகவும் அன்புடன் இருந்தாள். அவனுக்கு அது தெரியும். அதனால் அவனும், அவளிடம் எப்படியாவது நல்ல பெயரை எடுப்பதற்காக, அவற்றை நன்றாகப் பார்த்துக்கொண்டான். அவள் உயில் எழுதும்போது அவனுக்கும் ஏதாவது கொஞ்சம் கொடுப்பாள் என்பது அவனது இரகசியமான ஆசை, தினமும் அவன் வந்து, பூனைகளுக்கு பால் கொடுத்துவிட்டு அவற்றுடன் விளையாடி விட்டு அங்கு வெகுநேரம் இருந்து விட்டே திரும்பி செல்வான். அவன் பூனைகளைப் பார்த்துக் கொண்ட விதம் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.



எல்லாவற்றையும் பார்த்து அவள் மிகவும் சந்தோஷமடைந்தாள். கொஞ்ச காலத்தில் அவள் இறந்துவிட்டாள். அவள் அவனுக்கு இரண்டு பூனைகளை விட்டு விட்டுச் சென்றான்.

(சிரிப்பு)

அவன் அந்த இரண்டு பூனைகளிடம் மிகவும் அன்பாக இருந்ததைக் கண்டு, அவள் அந்தப் பூனைகளை அவனிடம் விட்டுவிட்டு இறந்துவிட்டாள்! அவனுடைய ஏமாற்றத்தைக் கற்பனை பண்ணிப்பாருங்கள்! அவன் இத்தனை மாதங்களாக அன்பினால் பாதிக்கப்பட்டு செய்தவற்றிற்காக எவ்வளவு நொந்து போயிருப்பான்! அவன் மிகவும் ஏமாற்றப்பட்டதாக உணர்ந்திருப்பான்! அவன் கோபத்திலும் ஏமாற்றத்திலும் எரிந்திருப்பான்!


சாதாரண அன்பில், நீங்கள் ஏமாற்றப்பட்டதாக உணர்வதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. மக்கள் சொத்துக்காகவும் சலுகைகளுக்காகவும் ஏதாவது பிரச்சினைகளில் இருக்கும்பொழுது கிடைக்கும் ஆலோசனை வார்த்தைகளுக்காகவும் சுரண்டுவதற்கு ஏதுவாக உள்ள மக்களின் மறதிக்காகவும் அன்பு செலுத்துகிறார்கள். அன்பு எப்பொழுதும் ஒரு காரணத்துடனேயே வருகிறது. அன்பு எப்பொழுதும் ஒரு எதிர்பார்ப்புடனேயே வருகிறது. ஆனால், மக்கள் இந்த உண்மையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஏனெனில், அவர்கள் தங்கள் சொந்த சாதாரண அன்பினால் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அன்பு இவ்வாறுதான் நிகழும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பை நேசியுங்கள்



நவீன கல்விச் சிந்தனைகளில் பிரதானமான விடயம் யாதெனில் கல்வி ஒரு குறிப்பிட்ட வயதுடனோ அல்லது ஒருகுறிப்பிட்ட நிறுவனத்துடனோ முடிவடைந்து விடுவதில்லையென்பதாகும். அறிவு வெள்ளம் பல்கிப் பெருகும் இன்றைய நாட்களில் புதிய அறிவுத் தளங்களுடன் எம்மைத் தொடர்புபடுத்திக் கொள்ள கல்வி அறிவைப்பெறும் முயற்சி வாழ்நாள் முழுவதும் நீடிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக் குறிக்கோளை அடைவதற்கு உறுதுணையாக அமையும் வழிமுறை வாசிப்புப் பழக்கமாகும். வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வருடத்திற்கான தேசிய வாசிப்பு மாதத்தினை பிரதான கருப்பொருள் வாசிப் போம் அறிவை வளர்ப்போம் என்பதாகும். அந்த வகையில் வாசிப்பு தொடர்பான ஒரு விழிப்புணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்தும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

மனிதனின் கண்டு பிடிப்புக்களில் மிகச் சிறந்தது புத்தகங்களே என 20 ஆம் நூற்றாண்டின் தலை சிறந்த விஞ்ஞானியாக விளங்கிய ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் குறிப்பிடுகிறார்.

புத்தகங்களுக்கும் நமக்குமான உறவு சிறு வயது பாடசாலைக் காலத்துடன் ஆரம்பிக்கிற போதிலும் அவற்றுக்கான உறவு பாடசாலைப் பருவத்தோடு மட்டும் முடிவடைந்து விடுவதில்லை. எம் ஆயுள் வரை தொடர்ந்து இடம்பெறுகின்ற ஓர் தொடர் செயற்பாடேயாகும். எனவே புத்தகங்களே வாசிக் கும் பழக்கத்தை மாணவர் மத்தியில் பாடசாலைப் பருவத்திலிருந்தே படிப்படியாக வளர்த்தெடுப்பது பற்றி நாம் அனைவரும் சிந்திக்க வேண்டியுள்ளது.


தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்று தமிழிலே ஓர் பழமொழி உண்டு. நாம் சிறு வயது முதல் பழகும் பழக்கமானது நாம் வளர்ந்து பெரியவராகிய பின்னர் எமது இறுதிக் காலம் வரையிலும் கூட நிலைத்திருக்கும் என்பதே அதுவாகும். அதுபோன்று மாணவர்களை சிறுவயது முதலே வாசிக்கும் பழக்கத்திற்கு வழிகாட்டுவோமேயானால் அவர்கள் தாமாகவே எதிர்காலத்தில் சுய வாசிப்பில் ஈடுபடுவார்கள். அவ்வாறானால் பாடசாலை மாணவர்கள் முழுமையாக வாசிப்பில் ஈடுபடுவதில்லையா? எனும் சந்தேகம் பலரிடையே ஏற்படக் கூடும். பாடசாலை மாணவர்கள் வாசிப்பதில் ஈடுபடுகின்றார்கள் என்பது உண்மை.

இன்று அந்தவாசிப்பானது பாட நூல்களுடனும் ஆசிரி யர் கொடுக்கும் குறிப்புக்களுடனும் மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்படுகிறது. அது மட்டுமல்லாது வீட்டிலும் வாசிப்பு செயற்பாடு இடம்பெறுகிறது. அதுவும் பாடப்பு த்தகத்துடனும் பாடசாலை மற் றும் தனியார் கல்வி நிறுவன பாடக் குறிப்புக்களுடனும் மட்டும் முடிவடைந்து விடுகிறது. இது மாணவர் கற்றலுடன் நெருங்கிய தொடர்புடைய கட்டாய வாசிப்பு எனக் கருத முடியும். வாசிப்பு என்பது இதனைக் கருதவில்லை.

பாடசாலையில் கல்வி பயிலும் காலத்தில் மாணவர்களின் சமநிலையான ஆளுமை விருத்திக்கு பல்துறை சார்ந்த விடயங்களை கற்க வேண்டிய தேவையுள்ளது. அவற்றுள் மிகவும் முக்கியமானது புத்தகங்கள், சஞ்சிகைகள், புதினத் தாள்களில் வெளிவரும் பல்தரப்பட்ட விடயங்களை வாசிக்கும் பழக்கத்தை தம்மிடையே ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதேயாகும். பாடசாலை செல்லும் காலத்தில் வாசிப்பு பழக்கத்தினை விருத்தி செய்யாத பிள்ளை பிற்காலத்தில் அதனை விருத்தி செய்து கொள்வான் என பெரிதும் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் அதற்கானபோதியசந்தர்ப்பம்வேறோர் இடத்தில் கிடைப்பது அரிதான விடயமாகும். ஒருவருக்கு வாசிப்பின் முக்கியத்துவம் பாடசாலை மட்டத்தில் எடுத்துக்காட்டப்படுவதுடன் அது வாழ்க்கைக் காலம் முழுவதும் தொடர்ந்து இடம்பெறும் செயற்பாடாகவும் காணப்பட வேண்டும். இதனை பாடசாலை மட்டத்தில் வளர்த்தெடுப்பது ஆசிரியரின் முக்கிய பணிகளிலொன்றாகக் காணப்படுகிறது.

உலகில் பல்வேறு துறைகளில் தமக்கென ஓர் தனியிடத்தை பதித்து மக்கள் முன் முன்னோடியாக திகழ்ந்த, திகழ்ந்து கொண்டிருக்கின்ற பல தலைவர்கள் புத்தக வாசிப்பு தங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்திய பல மாற்றங்களை வெளிப் படையாகவே உலக மக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளனர். அது பற்றி மாணவர்கள் சற்று சிந்திக்க வேண்டும் அவர்களில் சிலரின் கருத்துகள் பின் வருமாறு,

- ஹெகலின் சமூகவியல் சிந்தாந்தக் குறிப்புக்கள் நூல் என்சிந்தையைத்தூண்டிபாதையமைத்தது- கார்ல் மார்க்ஸ்.
- மாக்சீம் கார்கியின் தாய் என்ற நாவல் என்னை சிறுவனாய் இருக்கும் போதே சமூகவியல் போராளி ஆக்கியது- பிடல் காஸ்ரோ
- யுக்லிடின் எலிமென்ட்ஸ் நூலை வாசித்து அதன் மகத்துவம் பற்றி அறிந்து கடுமையாக உழைத்தேன் - ஆபிரஹாம் லிங்கன்
- மார்ட்டின் லூதரின் சுயசரிதை நூல் ஒன்று வாசித்ததால் போராளியானேன் - நெல்சன் மண்டேலா
- நியூட்டனின் பிரின்சிபியா வாசித்தேன் மீண்டும் பிறந்தேன் - ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்
- ஜீ.எஸ்.கார் என்பவர் எழுதிய எலிமன்டரி ரீசல்ட்ஸ் இன் பியூர் மாத்ஸ் புத்தகம் வாசித்தேன் அன்று முதல் கணக்கே என் வாழ்வானது - ராமானுஜன்
- வில்டூராண்டின் என்பவரது தத்துவ ஞானத்தின் கதை வாசித்தேன் எனது உலகை ஆழ்மனம் ஆட்கொண்டது - சிக்மன் பிராய்ட்
- ஹென்றி தோரோ எழுதிய தனிமனித அறம் என்ற நூல் தான் என் போராட்ட உத்திகளை தூண்டியது - பாக்ர் அம்பேத்கார்



கல்வித் தரிசனம்

இவ்வாறாக ஏதாவது ஒரு தொழிலில் அல்லது துறையில் வெற்றி கண்ட நூற்றுக் கணக்கான தலைவர்களிடம் காணப்படும் குணாதிசயங்கள் பலவற்றில் வாசிப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக காணப்படுகின்றது என்பதை மாணவர்கள் மறந்து விடக் கூடாது.

வாசிப்பு நாட்டம் கொண்ட எதிர்கால சமூகம் ஒன்றை உருவாக்கும் பொறுப்பு பாடசாலை மட்டத்திலிருந்து வழி காட்டப்பட வேண்டிய விடயம் எனும் அடிப்படையில் வாசிப்பதன் முக்கியத்துவமும் பாடசாலை நூலகங்களின்முக்கியத்துவமும் மாணவர்களுக்கு ஆரம்பப் பாடசாலைப் பருவம் முதல் தெளிவுபடுத்தப்பட வேண்டும். வாரத்தில் ஆகக் குறைந்தது ஒரு பாட வேளையாவது மாணவர்கள்நூலகத்திற்கு சென்று அங்கு பல்துறை சார்ந்த நூல்கள் சஞ்சிகைகள், செய்தித்தாள்கள் போன் [illegible] வழிகாட்ட வேண்டும். அதுமட்டுமல்லாது வகுப்பறை மட்டத்திலும் சிறு நூலகங்களை அமைத்துக் கொண்டு வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்த முனைய வேண்டும்.

மாணவர்கள் ஒவ்வொருவரும் தமது பிறந்த தினத்தில் பாடசாலை நூலகத்திற்கென ஒவ்வொரு நூலையாவது இலவசமாக கையளிப்பதன் மூலம் பாடசாலை நூலகத்தின் நூல்களின் எண்ணிக்கையை மேலும் பெருக்கி கொள்ள முடியும். இதனால் பல நூல்களை வாசிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. பாடசாலைகளில் வருடாந்த பரிசளிப்பு விழாக்களின் போது மாணவர்களுக்கு பாடம் சார்ந்த பயிற்சிப் புத்தகங்களை பரிசாக கொடுப்பதை விடுத்து பல்துறை சார்ந்த அறிவியல் நூல்களை மாணவர்களுக்கு கையளிப்பதன்மூலம் அவர்களை வாழ்வில் வெற்றி பெற்ற மனிதர்களாக்க முடியும்.

பாடசாலை மட்டத்தை விடுத்து மாணவர்கள் வசிக்கும் சூழலில் காணப்படும் பொது நூலகத்தில் சிறுவயது முதலே அங்கத்தவராவதன் மூலம் வாழ்நாள் முழுவதும் ஒருவர் வாசிப்பு பழக்கமுடையவராக தம்மை மாற்றிக்கொள்ள முடியும். அது மட்டுமல்லாது தற்காலத்தில் இணையத்தளங்களினூடாக ஏராளமான மின்னியல் நூல்களையும் சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் வீட்டிலிருந்தே வாசித்துக் கொள்ளமுடியும். அல்லது நாம் வசிக்கவேண்டிய பகுதிகளை இலகுவில் இணையத்தளங்களூடாக அடையாளம் கண்டு விட்டு நூலகத்திற்கு சென்று வாசித்துவிட முடியும்.

இவை யாவற்றையும் விட பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்காக வீட்டில் ஓர் குடும்ப நூலகத்தையே அமைத்து விடமுடியும். வீட்டை அலங்கரிக்க புத்தகங்களை விட அழகான பொருட்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது ஹென்றி வார்ட் பீச்சர் என்பவரது கருத்தாகும். இவரது கருத்தினடிப்படையில் புத்தகங்கள் ஓர்வீட்டை அறிவாலும் அழகாலும் அழகுபடுத்துகின்றது எனக் கூறலாம்.

பெற்றோர்கள் வெளியிடங்களுக்குச் சென்று வரும்போதும் பிறந்தநாள் பரிசாகவும் திருமண நாள் அடையாளமாகவும் குழந்தைகளின் விளையாட்டுப் பொருளாகவும் நட்பின் பகிர்தலாகவும் புத்தகங்களை இளையவர்களுக்கு கையளிப்பதன்மூலம் இலகுவில் குடும்ப நூலகத்தை வீட்டில் உருவாக்கி வாசிப்புப் பழக்கத்தை பிள்ளைகள் மத்தியில் ஏற்படுத்திவிடமுடியும்.

மனித வாழ்வியலில் புத்தக வாசிப்பிற்கு தனிச் சிறப்பு காணப்படுகிறது. உலகில் எத்தனையோ சாதனையாளர்கள் உருவானதற்கும் உருவாகிக் கொண்டிருப்பதற்கும் புத்தக வாசிப்பே காலாக அமைந்துள்ளது. அமெரிக்க எழுத்தாளரான கில்பர் ஹையாத் என்பவர் புத்தகங்கள் வெறும் உயிரற்ற காகிதங்களின் குவியல் அல்ல. அவை அலுமாரியில் இருந்து நம்மை வழிநடத்திச் செல்லும் உயிரோடு இருக்கும் மனிதங்கள் என்றார். ஒரு நூலகத்தின் கதவு திறக்கப்படும் போது ஒரு சிறைச்சாலையின் கதவு மூடப்படுகிறது என திருமறையான பைபிளிலே கூறப்படுகிறது. மார்டின் லூதர் கிங் துப்பாக்கிகளை விட பயங்கரமான ஆயுதங்கள் புத்தகங்கள் என்றார். உலக நாயகனான சார்லி சாப்ளின் ஒவ்வொரு புதிய படம் நடிக்க ஒப்புக்கொள்ளும் போதும் அதன் முற்பணத்தில் முதல் நூறு டொலருக்கு புத்தகம் வாங்குவாராம். இங்கே ஒரு புத்தகம் உறங்குகிறது என மறக்காமல் என் கல்லறையில் எழுதுங்கள் என்று பெட்ரண்ட் ரஸ்ஸல் குறிப்பிடுகிறார். இக்கருத்துக்களை அடிப் படையில் நோக்கும்போது புத்தகங்களும் அவற்றை வாசிப்பதன் முக்கியத்துவமும் எமக்குப் புலப்படுகிறது.

வாசிப்பு இல்லாத மனிதனின் வாழ்க்கை கிணற்றுத் தவளை போன்றது எனலாம். வாசிக்கும் பழக்கம் இல்லாதவர்கள் வாழ்க்கையின் பாதி சுகத்தை இழந்து விடுகிறார் கள். ஓர் நல்ல விடயத்தை வாசிப்பதன்மூலம் நாம் பெற் றுக் கொள்ளும் அன்பும் ஆதரவும்மிகமிகஅதிகமாகும்.

வாசிக்கும் நல்ல பழக்கமில் லாத தற்கால சமூகத்து மாணவர்களோ சரி, வளர்ந்தவர்களோசரிகூறும்நொண்டிச்சாட்டு வாசிப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை என்பதேயாகும். இது ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தாகும். மாணவர்களாகிய நீங்கள் உங்கள் நேரத்தின் ஒரு பகுதியை வாசிப்பதற்கு கட்டாயம் ஒதுக்கிக்கொள்ள வேண்டும்.

வளர்ந்தவர்கள் போட்டித் தன்மை மிகுந்த உலகில் பணத்தைச் சேகரிக்க எடுக்கும் நேரத்தின் ஒரு சிறு பகுதி நேரத்தையாவது வாசிப்பதற்காக செலவிட முடியும். நீங்கள் சேமிக்கும் அல்லது சேமிக்க நினைக்கும் பெருந் தொகை பணத்தில் ஓர் சிறு தொகையையாவது வாசிப்பிற்கு உகந்த நல்ல புத்தகங்களை வாங்கச் செலவி டுங்கள்ஒவ்வொருவரும்உங்கள் வாழ்க்கைக்கு அவசியம் தேவைப்படுவதும் மூளையை நன்கு உரசிப் பார்க்கும் விதத்திலான புத்தகங்களையே வாசிப்பதில் கவனம் செலுத்துங்கள். குழந்தைகள், சிறுவர்கள்நண்பர்கள்உறவினர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நல்ல புத்தகங்களை இத் தேசிய வாசிப்பு மாதத்தில் பரிசளித்து வாசிப்பின் மகத்துவத்தை உணர்த்துங்கள். வாசிப்பு என்பது ஓர் கலையாகும். உலகில் யாரும் பல விடயங்களை வாசிக்காமல் சிறந்த அறிவாளியாகி விட முடியாது. மாணவர்களாகிய நீங்கள் வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து இன்றிலிருந்தே ஒவ்வொருவரும் உங்களுக்கு பொருத்தமான விடயங்களை வாசிக்க ஆரம்பியுங்கள்.

மகிழ்ச்சியாக தேசிய வாசிப்பு மாதத்தினை கொண்டாடுங்கள். எந்நாளும் வாசிப்பு பழக்கம் கொண்டவர்களாக உங் களை மாற்றிக் கொள்ளுங்கள். வாழ்வில் வளம் பெறுங்கள்.

கா.நிமலநாதன்
ஆசிரியர்
யா/நெல்லியடி மத்திய கல்லூரி
(தேசிய பாடசாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ வங்கியில் அடகு வைத்தோர் ஆதாரங்களுடன் விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

புலிகளிடம் இருந்து மீட்கப்பட்ட வடபகுதி மக்களின் நகைகளை உரிமையாளர்களிடம் கையளிக்கும் நடவக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை 2377 சட்ட பூர்வ உரிமையாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதோடு புலிகளின் வங்கிகளிலும் அடகு நிலையங்களிலும் தமது நகைகளை அடகு வைத்த ஏனைய மக்களும் உரிய ஆதாரங்களுடன் விண்ணப்பிக்குமாறு பாதுகாப்பு படையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வட பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சம்பிரதாயபூர்வமாக 25 உரிமையாளர்களுக்கு அவர்களது தங்க நகைகளை அண்மையில் கிளிநொச்சியில் வைத்து கையளித்தார்.

புலிகள் இயக்கத்தினால் நிர்வகிக்கப்பட்ட தமிழீழ வங்கி மற்றும் ஈழ அடகு நிலையங்கள் என்பவற்றில் யுத்த காலத்தில் வடபகுதி மக்கள் தமது தங்க நகைகளை அடகு வைத்திருந்தனர்.

மனிதாபிமான நடவடிக்கையின் பின்னர் தமிழ் மக்களின் இந்த பெறுமதி வாய்ந்த தங்க நகைகள் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய பாதுகாப்புப் படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டன.

அவை அடகு வைக்கப்பட்ட ஆவணங்களுடன் அட்டவணைப்படுத்தப்பட்டு பாதுகாப்புப் படையினரால் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன. மனிதாபிமான நடவடிக்கை முடிவடைந்த பின் குறித்த தங்க நகைகளை உரிமையாளர்களிடம் ஒப்படைப்பதற்காக சரியான உரிமையாளர்களை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்படி புலிகளின் வங்கிகளில் அடகு வைத்த ஆவணங்கள் மற்றும் ஆதாரங்களை முன்வைத்த 2377 உரிமையாளர்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர். எஞ்சிய தங்க நகைகளை உரிய உரிமையாளர்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புலிகளின் வங்கிகள் மற்றும் அடகு நிலையங்களில் தமது நகைகளை அடகு வைபதற்காக பயன்படுத்திய ஆவணங்கள் அல்லது வேறு ஆவணங்கள் என்பவற்றுடன் வன்னி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் யாழ்ப்பாண சிவில் இணைப்பு அலுவலகங்களில் ஒப்படைக்குமாறு பொது மக்கள் கோரப்பட்டுள்ளனர்.

சரியான உரிமையாளர்களால் அடையாளம் காண முடியாத தங்க நகைகள் யாவும் அரச சட்ட ஒழுங்குகளுக்கு அமைய மத்திய வங்கியிடம் கையளிக்கப்பட உள்ளதாக பாதுகாப்பு தரப்பு தெரிவித்துள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது மீட்கப்பட்ட தங்க நகைகள் தொடர்பாக புலிகள் சார்பான அமைப்புகள் மற்றும் மேற்குலக ஆதரவு குழுக்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தன. (இ)

# தமிழீழத்தை தீவிரமாக ஆதரித்தவராம் சுவாமி

பா.ஜ.க.வின் சிரேஷ்ட தலைவரான சுப்பிரமணியன்சுவாமி இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வாக தமிழீழம் கிடைக்க வேண்டுமென்று காரசாரமான கருத்தாடல்களை மேற்கொண்டவர்.

இப்போது மகிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய தோழனாக இருககிறார். இது குறித்து தமிழ மக்கள ஆழ்ந்த கவலை கொண்டுள்ளனர் என லங்காசிறி வானொலியின் நிஜத்தின் தேடல் நிகழ்ச்சியில் ஆய்வாளர் சுதர்மா கருத்து வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

1985 இல் தமிழ்நாட்டில் இடம்பெற்ற டெசோ என்கிற தமிழீழ ஆதரவாளர் அமைப்பின் முதல் மாநாட்டிற்கான ஏற்பாட்டாளரகளில் ஒருவராக சுவாமி செயலாற்றினார். அந்த மாநாட்டில் சுப்பிரமணியன் சுவாமியின் பங்கு இருந்தது. வாஜ்பாயை அந்த மாநாட்டிற்கு அழைத்து வந்தவரே அவர்தான்.

1984ம் ஆண்டு நியூயோர்க் நகரில் மற்றும் 1988ல் கனடா மொன்றியலிலும் இடம்பெற்ற கூட்டமொன்றில், ராஜீவின் வெளிநாட்டுக் கொள்கைகள் பிழை, இந்திய இராணுவம் அனுப்பப்பட்டது தவறு, தமிழீழமே தீர்வாக அமைய வேண்டுமெனக் கோரியிருந்தார்.

இப்போது ஈழத்தமிழரின் ஜனநாயகத் தலைமை தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மகிந்தாவை ஆதரிப்பதையிட்டு ஈழ மக்கள் கவலையுடன் பார்க்கின்றனர்.

இதவேளை, சுப்பிரமணியன் சுவாமி அவசரகால நிலையின் கீழ் இந்திய அரசு கைது செய்ய முயன்ற போது சீக்கியர் போல மாறுவேடமிட்டு இலங்கையூடாக அமெரிக்காவுக்குத்தப்பிச் சென்றார் என்பது உள்ளிட்ட பல அரிய தகவல்களைப்பகிர்ந்து கொணடார். (இ)

# நான் கட்சி மாறுபவனல்ல

“ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து விலகி, ஐக்கிய தேசிய கட்சிக்கு கட்சிமாறப்போவதாக வெளியான செய்தியை நான் மறுக்கின்றேன்“ என்று அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

நுவரேலியா மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு, நேற்று முன்தினம் விதை கிழங்கு வழங்கி வைக்கும் நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)



24 வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணத்திற்கு தபால் புகையிரதம் நேற்று முற்பகல் 7.15 மணியளவில் யாழ். புகையிரத நிலையத்தை வந்தடைந்தது. இதன்போது கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்த தபால் மா அதிபர் அபேரத்ணத்தை வட மாகாண பிரதி அஞ்சல்மா அதிபதி என்.ரட்ணசிங்கம் வரவேற்பதையும், தபால்மா அதிபர், தபால் பொதிகளை தபால் பொதி சுமப்பாளரிடம் கையளிப்பதையும், யாழ்.அஞ்சல் அத்தியட்ஷகர் கே.புஸ்பநாதன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

# தீபாவளித் தினத்தன்று மதுசாலையை மூடவும்

தீபாவளிபண்டிகையினை முன்னிட்டு நாடு முழுவதிலுமுள்ள அனைத்து மதுபானசாலைகளையும் எதிர்வரும் 22 ஆம், 23 ஆம் திகதிகளில மூடுவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்து மக்களின் திருநாளான தீபாவளிபண்டிகையை முன்னிட்டு அனைத்து மதுபானசாலைகளையும் மூடுவதற்கான ஏற்பாடுகளை செய்வீர்களென பொது மக்கள் சார்பாக வேண்டிக்கொள்கின்றோம்

மேலும், தாங்கள் அனைத்து மதங்களின் நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும ஏற்படுத்துவதற்கு செய்து வரும சேவைகள் அனைத்து மக்கள் சார்பாகவும் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளோம்.

தீபாவ்ளி தினத்தன்று அனைத்து மதுபானசாலைகளும் திறந்திருக்குமாயின் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்திக்க நேரிடும். இதனால் மத அனுஷ்டானங்கள ஆலய வழிபாடுகள் போக்குவரத்து என்பனவற்றில் இடையூறுகள் ஏற்படுகின்றன.

எனவே, பொதுமக்கள் நலன்விரும்பிகள் சார்பாக அனைத்து மதுபானசாலைகளும் குறித்த தினத்தில் மூடுவதற்கான ஏற்பாடுகளை செய்வீர்களென மிகவும் தாழ்மையான பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம் என்று அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# இலங்கையரை நாடுகடத்துவதற்கு மலேசிய அரசு தீர்மானித்துள்ளது

மலேசியாவில் கைது செய்யப்பட்ட இலங்கையரை நாடுகடத்த அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அல்கொய்தா பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையதாக கூறப்படும்மொஹமட்ஹுசைன என்ற நபரே இவ்வாறு நாடுகடத்தப்படவுள்ளார்.

தமிழ் நாட்டிலுள்ள அமெரிக்க மற்றும் இஸ்ரேல் தூதரகங்கள் மீது தற்கொலைத் தாக்குதல் நடாத்த முயற்சித்துள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்திய அரசாங்கம் இவரை தன்னிடம் ஒப்படைக்குமாறு மலேசியாவிடம் ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருந்தது.

இருப்பினும், அக்கோரிக்கையைப் புறக்கணித்த மலேசிய அரசாங்கம் இவரை இலங்கைக்கு நாடுகடத்த தீர்மானித்துள்ளது. இலங்கைப் பொலிஸ் அதிகாரிகளின் பாதுகாப்புடன் அழைத்துவரப்படும் இவரை விமான நிலையத்தில் வைத்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் பொறுப்பேற்கவுள்ளனர்.

மொஹமட் ஹுசைனை மீட்பதற்கு மலேசிய மனித உரிமைகள் அமைப்பொன்று முன்னெடுத்த நடவடிககைகள் தோல்வியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச புலனாய்வுத் தகவல்களின் படி ஹுசைன் என்பவர் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்றுதெரிவித்துள்ளது. (இ)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகள் மூன்று மாதங்களில் நிறைவேற்றப்படும்

ஐரோப்பிய ஒன்றியத்தால் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மூன்று மாதங்களில் நிறைவேற்றப்படும் என மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மீன் வகைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்துள்ளது. ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கு இலங்கை மீன் வகைகள் பிரவேசிப்பதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஐரோப்பிய ஒன்றிய மீன்பிடி மற்றும் கடற்றொழில் விவகார ஆணையாளர் மாரியா தமனாகாய் தெரிவித்துள்ளார்.

இன்னும் மூன்று மாத காலங்களின் பின்னர் இலங்கையிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு மீன் வகைகளை ஏற்றுமதி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகக்குறிப்பிட்டுள்ளார் (இ)

# கிராம மக்கள் மீது அதிக அக்கறையுண்டு

## நெடுந்தீவில் ஜனாதிபதி உரை

கிராமத்தில் பிறந்தவன் என்ற வகையில் கொழும்பில் இருப்பவர்களைப் போலன்றி கிராம மக்கள் மீதும் கிராமங்களின் முன்னேற்றத்திலும் எனக்கு அதிக அக்கறையுண்டு என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நெடுந்தீவிற்கு நேற்று முன்தினம் விஜயம்செய்த ஜனாதிபதி நெடுந்தீவு மகா வித்தியாலயத்தற்கான மகிந்தோதய ஆய்வுகூடத்தினை திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி தமதுரையில் மேலும் தெரிவிக்கையில் கிராமப்புறங்களை அபிவிருத்தி செய்வதில் அதிக கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்த அவர். கிராமப்புற மாணவரகள் உலகளவில் சாதனை படைகக வேண்டு மென்பதே தனதும் தமது அரசாங்கத்தினதும் எதிர்பார்ப்பாகும் என்றும் தெரிவித்தார்.

கிராமப்புறங்களை அபிவிருத்தி செய்வதில் அதிக கவனம்செலுத்திவருவதாக தெரிவித்த அவர் கிராமப்புற மாணவர்கள உலகளவில் சாதனை படைக்கவேண்டுமென்பதேதனதும் தமது அரசாங்கத்தினதும் எதிர்பார்ப்பாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.


நாட்டின்தலைவர்என்றவகையில் நெடுந்தீவுக்கு முதன்முறையாக வருகை தந்து இங்கு பிரதேச செயலகக் கட்டடத்தையும் நெடுந்தீவு மகா வித்தியாலயத்துக்கான மகிந்தோதய விஞ்ஞான ஆய்வுகூடத்தையும் திறந்து வைத்து மக்கள் உபயோகத்துக்குக் கையளிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த 77 காலங்களில் இப்பிரதேசத்திற்கு வருகை தந்துள்ளேன். எனினும் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் இங்கு விஜயம் செய்யும் முதல் தடவை இது. அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவின் அழைப்பினை ஏற்றே இந்த பிரதேசங்களிற்கு நாம் வந்துள்ளோம். வட மாகாணத்திற்கு மாத்திரம் நாம் 96 மகிந்தோதய விஞ்ஞான ஆய்வு கூடங்களை பெற்றுக் கொடுத்துள்ளோம்.

அறிவொன்றைத் தான் நாம் நெடுந்தீவு கிராமத்திற்குப் பெற்றுக்கொடுத்துள்ளோம் நீங்கள் வடக்கில் இந்தப்புறத்தில் இருப்பது போல் எனது ஊர் தெற்கின் அந்தப்புறத்தில் உள்ளது. அம்பாந்தோட்டை மாவட்டத்திலேயே ஒரேயொரு பாடசாலை மட்டுமே விஞ்ஞான ஆய்வுகூடம் உள்ள பாடசாலையாக அன்றிருந்தது. நாம் கிராமத்தில் பிறந்தவன் என்பதால் கொழும்பிலுள்ளவர்களைப் போலன்றி கிராமங்களின் மீது எனக்கு அதிகளவு பற்றும் அக்கறையுமுள்ளது. அதனால் தான் கொழும்பில் அல்லது நகர்களில் உள்ள மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் சகல வசதிகளையும் கிராமப்புற மாணவர்களுக்குப்பெற்றுக்கொடுத்து வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சரின் புது ஞானம்!



தேர்தல் அரசியல் நிலையான கொள்கைகளையும், சமூகத்துக்கு அவசியமான கருத்தியல்களையும் அதிகம் கொண்டிருப்பதில்லை. அது, அதிகாரத்தை எவ்வாறு அடையலாம் என்பதை மட்டுமே இலக்காகக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட அரசியலினால் சமூக முன்னேற்றம் பெரிதாக சாத்தியமாவதில்லை.

இவ்வாறானதொரு பிரதிபலிப்பை கடந்த வாரத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வெளியிட்டிருக்கின்றார். அது, அடிப்படையற்ற கொள்கை முரண்களுடன் கூடியதாக இருக்கின்றது. அதுவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோற்றத்தையும், முன்னோக்கிய அரசியல் பயணத்தையும் வேறொரு திசையில் கொண்டு சேர்ப்பதாக இருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் முன்னாள் ஆயுத போராட்ட இயக்கங்களோடு தன்னால் இணைந்து இயக்க முடியாது என்று கடந்த வாரம் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் கூட்டமொன்றில் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார்.

அதாவது, இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்த்த (தமிழர் விடுதலைக் கூட்டணி இப்போது கூட்டமைப்புக்குள் இல்லை என்று கொள்ளலாம்) ரொலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய கட்சிகளோடு தன்னால் இணைந்து இயங்க முடியாது என்பதையே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்குப் பின் சி.வி.விக்னேஸ்வரன் தன்னுடைய அரசியல் பயணத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியில் முழுமையாக இணைந்து கொண்டு முன்னெடுத்திருக்கிறார். அதற்கு அவர் அஹிம்சா வழி அரசியல் என்ற தோரணையிலான கருத்தையும் முன்வைத்திருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டாலும் கொழும்பின் புதுக்கடையில் பிறந்த சி.வி.விக்னேஸ்வரன், இலங்கை அரச சேவையில் இணைந்து நீதியரசராக பதவி வகித்தவர். ஓய்வின் பின், கொழும்பில் தமிழ் மற்றும் சைவ வளர்ச்சி பற்றிய மாநாடுகள், கருத்தரங்குகள், கூட்டங்களில் பிரதான அழைப்பாளராக மேடைகளை அலங்கரித்தவர். அப்போதும், அவர் தன்னுடைய அரசியல் நிலைப்பாட்டினை முன்வைத்து வந்திருக்கின்றார். ஆனால், அப்போது, அவருக்கு தேர்தல் அரசியலை தேர்தெடுப்பதற்கான வாய்ப்புக்கள் இருந்திருக்கவில்லை.

அதுபோக, வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவு பெற்ற தமிழ்த் தேசிய அரசியலுக்கு வருவதற்கு அவரினால் சாத்தியமான வழிகள்இருக்கவில்லை.

ஏனெனில், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆசிர்வாதம் பெற்றவர்களையே மக்கள் ஆதரித்து வந்திருந்தனர். இவ்வாறானதொரு நிலையில், சி.வி.விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நுழைவதற்கான வாய்ப்புக்கள் 2009 இற்கு முன்னர் இருந்திருக்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஆனது. அதனை, இப்போது தங்களின் அஹிம்சை அரசியல் பற்றிய அறிக்கைகளை முன்வைக்கும் எவராலும் மறுக்க முடியாது. இலங்கை நாடாளுமன்றத்துக்குள் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னிறுத்தப்பட்டது.

இது, எல்லோரும் அறிந்த வரலாறு. அதன் நீட்சிதான் இப்போதுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அதனை தமிழ் மக்கள் தொடர்ச்சியாக தமது பிரதிநிதிகளாக காட்டிக் கொண்டிருப்பதும். அதனை, இரா.சமபந்தனோ, எம்.ஏ.சுமந்திரனோ, சி.வி.விக்னேஸ்வரனோ மறுக்க முடியாது. அப்படி மறுத்தாலும் அது முழுக்க முழுக்க அபத்தங்களினால் ஆனது.

தமிழ்த் தேசிய அரசியல், தந்தை செல்வாவுக்குப் பின் தலைமைத்துவ சிக்கலுக்குள் இருந்து வந்திருக்கின்றது. அது, அ.அமிர்தலிங்கம், மு.சிவசிதம்பரம், வீ.ஆனந்தசங்கரி, இரா.சம்பந்தன் என்று தளம்பலான நிலையிலேயே தமது தலைவர்களை வைத்துக் கொண்டிருந்தது.

இதில், இன்னொரு விடயமும் முக்கியத்துவம் பெறுகின்றது. தந்தை செல்வாவின் காலத்துக்குப் பின் தமிழ்த் தேசியத்தினை ஆயுதப் போராட்ட இயக்கங்கள் தமது கைகளுக்குள் எடுத்துக் கொண்டுவிட்டன. அவற்றுக்கு முன்னால், அரசியல் கட்சிகளினால் நிலையான இடத்தினைப் பிடிக்கவும் முடியவில்லை. அதற்கான சூழ்நிலைகளும் இருக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒட்டு மொத்தமான வீழ்ச்சி என்பது புதிய அரசியல் தலைமை ஒன்றின் தேவையை தமிழ் மக்களிடம் விதைத்து. அதற்கான தேடல் என்பது திரும்பத் திரும்ப தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளே முன்னெடுக்கப்பட்டது.

அது, இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன் உள்ளிட்டவர்களின் பெயர்களையே முன்னிறுத்தியது. இவ்வாறானதொரு நிலையில்தான் வட மாகாண சபைத் தேர்தலுக்காக கவர்ச்சிமிக்க வேட்பாளரின் தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்பட்டது. இதுதான், பல சர்ச்சைகளைத் தாண்டி சி.வி.விக்னேஸ்வரனை தேர்தல் அரசியலுக்குள் கொண்டு வந்து சேர்த்தது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட வேண்டும் என்று இரா.சம்பந்தனினால் உத்தியோக பூர்வமாக சி.வி.விக்னேஸ்வரன் அழைக்கப்பட்டார்.

அப்போது, அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் ஒருமித்து அழைத்தால்தான் போட்டியிடுவதாக அறிவித்தார்.

அது, ஊடகங்களிலும் வெளியானது. அப்போது, அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுவேட்பாளரே அன்றி, அதில் அங்கம் வகிக்கும் கட்சியொன்றினைச் சார்ந்தவராக இருக்கவில்லை. இதுதான் கடந்த வருட வரலாறு. வடக்கு மாகாண சபைத தேர்தல் பிரச்சார காலங்களிலும் சி.வி.விக்னேஸ்வரன் தன்னை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சராகவே முன்னிறுத்தினார்.

மற்றபடி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதி என்ற ரீதியில் எதையுமே மொழியவில்லை. அதுபோக, தமிழ் ஆயுத போராட்ட இயக்கங்களின் பெருமைகளினையும், புகழினையும் அற்புதமாக அவர் ஆளுமை பெற்ற தமிழில் பாடினார். அதுவும், அவர் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பற்றி பாடிய புகழ் உலகம் அறிந்தது.

தேர்தல் வெற்றி சி.வி.விக்னேஸ்வரனுக்கு புதிய ஞானத்தைப் பெற்றுக் கொடுத்தது. அதுவும், தன்னை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதி போலவே செயற்பட வைத்தது.

அதுவும், வடக்கு மாகாண அமைச்சர்கள் நியமனத்தின்போது பங்காளிக் கட்சிகளின் வேண்டுகோள்களை மீறி, குறிப்பாக ஈ.பி.ஆர.எல்.எப்.இன் எதிர்ப்பினை மீறி அந்தக் கட்சிக்குள் இருந்து பொன்னுத்துரை ஐங்கரநேசனை அமைச்சராக நியமிக்கும் அளவுக்கு மாறியது.

அது, நிர்வாகத் திறமையுள்ளவர்களை தன்னோடு வைத்துக் கொள்ள வேண்டிய தன் அவசியம் என்று எடுத்துக் கொண்டுவிடலாம். ஆனால், சி.வி.விக்னேஸ்வரனின் தற்போதைய நடவடிக்கைளில் காணப்படும் பொறுப்பின்மை அல்லது கருத்து வெளிப்படுத்தல்களின் போது வெளிப்படும் அதிகார தோரணை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை சிதறடிக்கும் வல்லமை கொண்டவையாக இருக்கின்றன.

இன்னொரு புறத்தில், சி.வி.விக்னேஸ்வரன் தன்னை ஒரு கட்சியில் இணைத்துக் கொள்வது அவரது உரிமை என்ற விடயம் இருக்கின்றது. ஆனால், அவரது அரசியல் வருகை என்பது தனிக்கட்சி சார்பில் எப்போதும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதுவும், 12 வருடங்களைத் தாண்டிய வரலாறினைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கும் பங்காளிக் கட்சிகளை, அதற்குள் வந்த ஒரு வருடத்துக்குள்ளேயே எரிச்சற்படுத்துமளவுக்கு அவரின் நடவடிக்கைகள் இருப்பதுதான் பெரும் சோகம்.

தமிழ் அரசியல் சூழலில் முன்னாள் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் மாத்திரமல்ல, அஹிம்சை வழிக்கட்சிகள் என்று தங்களை முன்மொழியும் கட்சிகளும் இரத்தக்கறை தோய்ந்த கரங்களுடனேயே இருக்கின்றன. ஏனெனில், அதிக தருணங்களில் ஆயுத போராட்டத்தினை அந்தக் கட்சிகளே ஊக்குவித்தும் வந்திருக்கின்றன.

அது, அந்தக் கட்சிகளின் கைகளை மீறிச் சென்றது என்பது உண்மையே. மற்றப்படி, அஹிம்சைவாதிகள் என்று தங்களை முன்னிறுத்துபவர்களின் கைகளின் அடியிலும் இரத்தக்கறை உண்டு. இதுதான், நாம் கடந்து வந்த பாதை. அந்தப் பழைய வரலாற்றை, (அவருக்கு மிகவும் தெளிவாகத் தெரிந்த வரலாற்றை) சி.வி.விக்னேஸ்வரன் மீண்டும் பேச வைத்திருக்கின்றார்.

## தமிழரசுக் கட்சியின் ஆதிக்கம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நீட்சியை வேறுவழிகள் எதுவும் இல்லாத நிலையில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றார்கள். அதுதான், தமிழ்த் தேசியக் கூட்டமைபபினை அரசியல் கட்சியாக பதிவு செய்யுமாறு முன்வைக்கப்படும் கோரிக்கைகளின் பின்னால் இருப்பது. ஆனால், அதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி உடன்பட தொடர்ந்தும் மறுத்து வருகின்றது. அது, தன்னுடைய அதிகார எல்லைகளை குறைத்துவிடும் என்று கருதுகிறது. அதுதான், இரா.சம்பந்தனாக இருந்தாலும், மாவை சேனாதிராஜாவாக இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பதிவு செய்வதை தவிர்க்க வைக்கின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த மற்றைய பங்காளிக் கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்ய வேண்டும் என்று கோரிக்கைகளை வைத்து ஓய்ந்து போய்விட்டன. கடந்த வாரத்திலும் அந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது.

அதனை, சாதகமான முறையில் பரிசீலிப்பதாக இரா.சம்பந்தன், பங்காளிக் கட்சிகளிடையே பதிலளித்துக் கொண்டிருக்க, தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரான மாவை சேனாதிராஜா லண்டனில் நடைபெற்ற நிகழ்வொன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பதிவு செய்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றிருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சியின் அதிக ஆளுகை என்பது பெருமெடுப்பில் மேலெழுந்து வருகின்றது. அது, பங்காளிக் கட்சிகளை சரியாக மதிக்கும் நிலையை இல்லாமற் செய்துவிடுமோ என்கிற நிலைகளை தோற்றுவித்திருக்கிறது. இது, எதிர்கால நிலைபெறுகைக்கு நல்லதல்ல.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கொள்கை, கோட்பாட்டியல் ரீதியாக ஒன்றிணைந்தவை அல்ல. அது, தமிழீழ விடுதலைப் புலிகளின் நாடாளுமன்ற அரசியல் பிரிவு. இன்றைக்கு விடுதலைப் புலிகள் இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கின்றது. அதனை, மக்கள் இறுதித் தெரிவாகக் கொண்டிருக்கிறார்கள்.

அதனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிளவு சடுதியாக சாத்தியமாகாது. ஏனெனில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கும் வரையில்தான் வாக்குகளைப் பெற முடியும் என்ற வெளிப்படையான உண்மை அதற்குள் இருக்கும் அனைத்துப் பங்காளிக் கட்சிகளுக்கும் தெரியும். அதுதான், அவர்களை இப்போது இணைத்து வைத்துக் கொண்டிருக்கும் ஒரே புள்ளி. இல்லையென்றால், எப்போதோ பிரிந்து சென்றிருப்பார்கள்.

வாக்குகள் மட்டுமே கட்சிகளை இணைத்து வைத்துக் கொண்டிருக்கும் நிலை என்பது தூரநோக்குள்ள அரசியலுக்கு நல்லதல்ல. அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் உணர்ந்து கொள்ள வேண்டும். குறிப்பாக, ஆதிக்கம் செலுத்தும் இலங்கைத் தமிழரசுக் கட்சி உணர்ந்துகொள்ள வேண்டும். இதனையே, தமிழ் மக்களும், ஊடகங்களும், சிவில் சமூக அமைப்புக்களும் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றன.

அதை இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சி.வி.விக்னேஸ்வரன், எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மறுபுறத்தில், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் போன்றவர்கள் தங்களின் அழுத்தமான நடவடிக்கைகளின் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடுத்த கட்டத்துக்கான பங்களிப்பை வழங்க வேண்டும்.

அதுதான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உண்மையான அரசியல் முன்னேற்றத்திற்கான ஆரம்பமாக இருக்கும். அது, ஆரம்பம் ம்ட்டுமே. ஏனெனில், தமிழ்த் தேசிய அரசியல் வீரியமாகவும், சமயோசிதமாகவும் பயணிக்க வேண்டிய தேவை அதிகமாக இருக்கின்றது.


இல்லையென்றால், திரும்பவும் பாரதூரமான விளைவுகளை நாம் சந்திக்க வேண்டி ஏற்படும். புரிந்து கொள்ளுங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களே. அதுதான், எங்களுக்கும் உங்களுக்கும் நல்லது!

-தமிழ்மிரர்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக உரிமைகளை தடுக்கும் செயற்பாடே

# பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல்



ஜனநாயகம் பற்றி பேசும் நாட்டில் தமது ஜனநாயக உரிமைகளை தடுக்கும் வகையிலான செயற்பாடே பல்கலைக்கழக மாணவர் மீதான தாக்குதல் எனவும் சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களின் சத்தியாக்கிரக போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தியமை கண்டிக்கத்தக்க விடயம் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபைத் தலைவர்களுக்கு கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களின் மீதான தாக்குதலை கண்டித்து வெளியிடப்பட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் நிலவும் பிரதான பிரச்சினையை தீர்க்க கோரி பல்கலைக்கழக மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த சத்தியாக்கிரக போராட்டத்தின் போது இனந்தெரியாத நபர்கள் சிலரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் எமது கண்டனத்தை தெரிவிக்கின்றோம். மாணவர்களின் உரிமைக்காக மேற்கொள்ளப்பட்டுவந்த சத்தியாக்கிரக போராட்டத்தினை குழப்பும் வகையில் அரசியல்பின்னணியினைக்கொண்ட ஒரு சிலரின் செயற்பாடாகவே இதை காண்கின்றோம். அதேபோல் இத் தாக்குதல் தொடர்பில் பொலிஸாரின் செயற்பாடுகளும் திருப்தியடைக் கூடிய வகையில் இல்லை. எனவே இத் தாக்குதலின் பின்னணியில் அரசாங்கத்தின் சூழ்ச்சிதான் இருக்க வேண்டும். இல்லையேல் பல்கலைக்கழக மாணவர்களின் மீதான இவ்வாறான தாக்குதலகளை கண்டித்து இப்போதைக் கேனும் நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் இருந்தே பல்கலைக்கழக மாணவர்கள் மீதான காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே இனி மேலும் இம் மாணவர்களின் உரிமைகளை தடுக்கும் வகையில் செயற்படாது மாணவர்களின் உரிமைகளை பெற்றுத்தரக்கூடிய சகல நடவடிக்கைகளையும் இந்த அரசு பெற்றுத்தர வேண்டும். அதேபோல் இம் மாணவர்களின் மீதான தாக்குதலின் பின்னணியில் யார் உள்ளார் என்பதையும் கண்டறிவது தொடர்பில் உடனடி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவரின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ)

# ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டால் ஆளும் கட்சிக்கே பாதக நிலைமை

## விதுர விக்ரமநாயக்க எச்சரிக்கை



(கொழும்பு)

தற்போது எதிர்க்கட்சிக்கு வெற்றி பெற முடியும் என்ற நிலைப்பாடு உருவாகியுள்ளதாக ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்றுககு அளித்த செவ்வியின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணசபைத் தேர்தலின் மூலம் எதிர்க்கட்சிகளினால் வெற்றியீட்ட முடியும் என்ற நிலைப்பாடு உருவாகியுள்ளது.

ஆளும் கட்சியின் காலம் முடிவடைந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலைப்பாடுகள் உறுதியாவதனை மாற்றியமைத்தே அரசாங்கம் தேர்தல்களுக்குச் செல்ல வேண்டும்.

எம்மில் காணப்படும் குறைபாடுகளை அடையாளம் கண்டு அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மக்களினால் உணரக்கூடிய மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காலம் முடிவடைந்ததன் பின்னர் எந்த நேரத்திலும் தேர்தல்களை நடத்த முடியும். எனினும், அரசியல் ரீதியான நன்மைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் மக்களினால் உணரக்கூடிய மாற்றங்களை செய்ததன் பின்னரே தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

தற்போது ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டால் ஆளும் கட்சிக்கு பாதக நிலைமை ஏற்படும் என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும்.

ஆளும் கட்சியினர் எதிர்க் கட்சிக்கும், எதிர்க்கட்சியினர் ஆளும் கட்சிக்கும் தாவ உள்ளதாக கருத்துக்கள் வெளியாகி வருகின்றன.

எனினும் ஆளும் கட்சியை விட்டு விலகிச் செல்லும் அளவிற்கு முட்டாள்கள் இல்லை என்றே நான் கருதுகின்றேன்.

பொது வேட்பாளர் அல்லது பல வேட்பாளர்கள் போட்டியிட்டால் அது எதிர்க்கட்சிகளுக்கு பாதக நிலைமைகளை ஏற்படுத்தக் கூடும்.

இந்தியா போன்று சட்டம் அமுல்படுத்தப்பட்டால் அரசியல் வாதிகளுக்கு என தனியாக சிறைச்சாலைகள் அமைக்கப்பட வேண்டியேற்படும்.

ஜெயலலிதா போன்று தண்டனை விதிக்கப்படக் கூடிய பலர் இருக்கின்றார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்களைப் போன்றே உயர்அதிகாரிகளும்சொதது விபரங்களை வெளிபடுத்த வேண்டுமென விதுர விக்ரமநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# இலங்.உறவின் பெறுமதியை பாகிஸ்தான் அறிந்துள்ளது

(கொழும்பு)

பாகிஸ்தானிய அரசாங்கமும் மக்களும் இலங்கையுடனான உறவின் பெறுமதியை அறிந்திருப்பதாக அந்த நாட்டின் தேசியசபை சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் டெய்லி டைம்ஸ் பத்திரிகை இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

தேசிய சபையின் சபாநாயகர் அயாஸ் ஷாடிக், நேற்று முன்தினம் இலங்கையின் உயர்ஸ்தானிகர்



ஜெயலத் வீரக்கொடியை அழைத்து நடத்திய பேச்சுவார்த்தையின் போது இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

பாகிஸ்தான், இலங்கையுடன் பரஸ்பர நம்பிக்கை, மரியாதை மற்றும் ஆழமான நட்பு என்ற அடிப்படையில் செயற்பட்டு வருகிறது.

இது எதிர்காலத்தில் மேன்மை பெற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(இ)

# இன்று ஒரு தகவல்

## பார்வை மாற வேண்டும்

“என்ன சேர் உலகம் இது !நடக்குற நடப்பு ஒண்ணும் சரியில்லை”என்று அலுத்துக்கொண்டார் ஒருவர்.

“என்னங்க இது...இப்படி ஒரேயடியா அலுத்துக்கிறீங்களே?”என்று கேட்டேன்.

“ பின்னே என்ன சேர்...எந்தப்பக்கம் திரும்பினாலும் நல்ல விடயமே கண்ணில் படமாட்டேங்குது...எல்லாம் மோசமா இருக்கு...”என்றார் அவர்.கொஞ்சம் இப்படி உக்காருங்க. உங்களுக்கு ஒரு கதை சொல்கிறேன்”என்று ஆரம்பித்தேன். நம் முன்னோர்கள் சொல்லியிருக்கிற கதை ஒன்றை அவரிடம் சொன்னேன்..

ஓர் ஊரில் மன்னர் ஒருவர் இருந்தார். ஒருநாள் அவருக்குத் திடீரென்று தலைவலி.

மன்னர் என்பதால் தலைவலி வராமல் இருந்து விடுமா?பெரிய தலைவலியாக வந்துவிட்டது.

அரண்மனையில் வைத்திய வசதிக்கு என்ன குறைச்சல்?

அங்கே நிறைய வைத்தியர்கள் இருந்தார்கள். ஒவ்வொருத்தராக வந்தார்கள் பார்த்தார்கள்.ஒவ்வொரு விதமான மருந்தைக் கொடுத்தார்கள்.

ஆனாலும் மன்னருக்குத் தலைவலி குறைந்தபாடில்லை.

அந்தத்தலைவலிக்கு என்ன காரணம் என்பதை அவர்களால் சரியாகக்கண்டுபிடிக்கமுடிய்வில்லை.

என்ன செய்யலாம் என்று எல்லோரும் யோசித்தார்கள்.

அமைச்சர் ஒருவர் ஓர் ஆலோசனை சொன்னார்.

“ காட்டிலே ஒரு முனிவர் இருக்கிறார் அவரை அழைத்துக் கொண்டுவந்து காட்டினால் ஏதாவது யோசனை சொல்வார்” என்றார்.

உடனே போனார்கள்.

முனிவரை அழைத்துக்கொண்டு வந்தார்கள்.

அவர் பார்த்தார்.

“மன்னா... மருந்துகள் மூலமாக உன்னுடைய தலைவலியைக் குணப்படுத்த முடியாது.நீ எங்கே போனாலும் பச்சை வண்ணம் உன் கண்களில் படுகிற மாதிரி பார்த்துக்கொள் .பச்சை நிறம் கண்ணுக்கு நல்லது. பச்சை வண்ணத்தை அதிகமாக பார்த்துக்கொண்டிருந்தால் உன் தலைவலி பறந்து போயிடும். இதுதான் அதற்கு வைத்தியம்” என்று சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.

அடுத்த நாளே அரசர் அமைச்சர்கல்ளக் கூட்டி ஆலோசனை நடத்தினார்.

அரண்மனை முழுக்கப் பச்சை வண்ணம் பூச ஏற்பாடு செய்தார்கள்.நாட்டிலே உள்ள மக்கள் அனைவரும் பச்சை வண்ண உடைதான் உடுத்தவேண்டும் வீடுகளுக்கெல்லாம் பச்சை வண்ணம் பூசப்பட வேண்டும் என்று உத்தரவிட்டார்கள்.

பச்சை நிறம் தவிர வேறு எந்த நிறமும் மன்னர் கண்ணில் பட்டு விடக்கூடாது என்பதில் அனைவரும் மிகுந்த எச்சரிக்கையோடு இருந்தார்கள்.

அவ்வளவுதான்.

கொஞ்ச நாளில் அந்த நாடு பூராகவும் பசுமைப்புரட்சி.

ஆமாம் எந்தப்பக்கம் திரும்பினாலும் பச்சை வண்ணம்!

காட்டுக்குப்போன முனிவர் கொஞ்ச காலம் கழித்து மன்னனைப் பார்க்க வந்தார்.அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.எங்கும் எதிலும் பசுமை.

அரண்மனை வாயிலுக்கு வந்து சேர்ந்தார்.அவரைக் கண்ட காவலாளிகள் இருவர் கையில் வாளியோடு ஓடி வந்தார்கள்.அந்த வாளியில் பச்சை வண்ணக் குழம்பு.

“ முனிவரே...கொஞ்சம் நில்லுங்கள் உங்க உடம்பு பூராகவும்பச்சை வண்ணத்தைப்பூசிய பின்பு நீங்கள் உள்ளே போகலாம்”

முனிவர் திகைத்துப்போனார்.

என்ன இது... நம்ப யோசனை் இந்த அளவுக்கு ஆகிவிட்டதே என்று கவலைப்பட்டார்.

அதன் பின்னர் அந்தக்காவலாளிகளைப் பார்த்து “ ஐயா... கொஞ்சம் பொறுங்கள்” என்று சொல்லி ஒருவாறாகச் சமாளித்து உள்ளே போனார் மன்னனைப்பார்த்தார்.

“மன்னா உனக்கு யார் இந்த வண்ணம் பூசுகிற யோசனையைச் சொன்னது?”

“பச்சை நிறத்தைப்பார் என்று நீங்கள் தானே சொன்னீர்கள்...”

“அதற்காக இப்படியா அரசாங்கப்பணத்தை வீணாக்குவது? உன்னுடைய பார்வையை மாற்றிக்கொண்டால் போதாதா?”

“என்ன சொல்கிறீர்கள்... பார்வையை மாற்றிக்கொள்வதா? அது எப்படி?”

“ஒரு பச்சை நிறக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டால் பார்க்கிறது பூராகவும் பச்சையாகத்தெரியுமே அதைவிட்டுவிட்டு இதற்காக இத்தனை பணத்தை வீணாக்கியிருக்கிறாயே...”,

முனிவர் சொன்ன பின்புதான் அந்த அரசன் யோசித்துப் பார்த்திருக்கிறான்.

இப்போது இந்தக் கதையை நாமும் கொஞ்சம் யோசித்துப் பார்ப்போம். சிறகை விரிக்க விரும்புபவர்கள் இந்த உலகத்தைப் பார்க்கிற பார்வையையும் மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும்.

இந்த உலகம் பூராகவுமே நமது உள்ளுணர்வின் வெளிப்பாடுகள் தான் என்கின்ற உண்மையைப்புரிந்து கொள்ள வேண்டும். அப்படி ப்புரிந்து கொண்டால்... எல்லாமே மோசம் என்று அலுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்காய் கல்விளான் காட்டில் சட்டவிரோதமாக கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்படுகின்றன

## நோய்வாய்ப்பட்ட மற்றும் களவாடப்பட்ட கால்நடைகளே வெட்டப்படுவதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச சபையின் கீழுள்ள மல்லாவி சந்தை உட்பட இறைச்சி விற்பனை நிலையங்களில் சுகாதார பரிசோதகரின் அனுமதியின்றி நோய்வாய்ப்பட்ட கால்நடைகளையும் மற்றும் பொதுமக்களிடமிருந்து களவாடப்பட்ட கால்நடைகளையும் கல்வி ளான் கிராமத்தின் காட்டுப்பகுதியில் வைத்து இறைச்சிக்காக வெட்டி பொதுமக்களுக்கு விற்பனை செய்துள்ளதாக துணுக்காய்




பிரதேச சபைக்குட்பட்ட பொது மக்களும் மற்றும் இப்பிரதேச சபையின்ஆளுங்கட்சி உறுப்பினர் சந்திரனும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

கடந்ததிங்கட்கிழமைதொடக்கம் துணுக்காய் பிரதேச சபையின் கீழுள்ள கொள்கலத்தில் கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதில்லை.

பிரதேசசபைக்கும் இறைச்சிக்கடைகளை ஏலத்தில் எடுத்தவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல் பிரச்சினை காரணமாக கொள்கலன் தற்காலிகமாக மூடப்பட்டது.

இச்சந்தர்ப்பத்திலேயே இறைச்சி கடைகளை ஏலத்தில் எடுத்தவர்களால் கல்விளான் கிராமத்தின் காட்டுப்பகுதியில் வைத்து சுகாதார பரிசோதகரின் அனுமதி பெறப்படாத கால்நடைகளும் மற்றும் மக்களிடமிருந்து களவாடப்பட்ட கால்நடைகளும் இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளன.

இக் கால்நடைகளின் இறைச்சிகள் மல்லாவி சந்தையிலுள்ள இறைச்சி கடைகளிலும் மற்றும் இப்பிரதேச ஏனைய இறைச்சி கடைகள் உட்பட ஏ-9 வீதியிலுள்ள கனகராயன் குளம்பகுதியில்அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கும் தினசரி 20 கிலோ மாட்டிறைச்சி மல்லாவியிலுள்ள முச்சக்கர வண்டியூடாக வழங்கப்பட்டுள் ளது.

இதேவேளை மல்லாவி சந்தைப்பகுதியில்விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த அனுமதி பெறப்படாத 80 கிலோ கிராம் இறைச்சியினை நேற்று முன்தினம் துணுக்காய் பிரதேச சபையினர் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் அக் கடையினையும் மறு அறிவித்தல் வரை மூடியுள்ளனர்.

எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களில் பாதிக்கப்படுவது பொதுமக்கள் எனவும் இதனை கண்காணிக்க வேண்டிய சுகாதார பரிசோதகர் கடந்த மூன்று தினங்களும் வெளி மாவட்ட நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்த நிலையிலேயே இச்சட்டவிரோதமாக கால்நடைகள் வெட்டப்பட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (2-15)

## கல்விச் செழுமை செயற்றிட்டத்தில் துணுக்காய் வலய பாடசாலைகள்



(குருமன்காடு)

வன்னி இறுதி யுத்தத்தில்அழிவுற்ற பாடசாலைகளில் நூல் வளத்தை பெருக்கும் நோக்கோடு கல்வி செழுமை செயற்றிட்டத்தில் துணுக்காய் வலயப் பாடசாலைகள் நான்கு உள்வாங்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் குறித்த நான்கு பாடசாலைகளுக்கு நேற்று முன்தினம் காலை சென்ற வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன், பெறு மதியான பயிற்சிப் புத்தகங் களை வழங்கியதோடு பாட சாலைகளில் நிலவும் குறைகள் தொடர்பிலும் கேட் டறிந்து கொண்டார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சாதாரணதரம்மற்றும் உயர்தரத்தி னைக்கொண்ட பாடசாலைகளைகருத்திற் கொண்டுமுன்னெடுக்கப்பட்டு வரும் இச்செயற்றிட்டத்தின் மூலம் முல்லை. கல்வி வலயத்திலுள்ள அனைத்து சாதாரணதர உயர்தர பாடசாலைகளும் (26 பாடசாலைகள்) உள்வாங்கப்பட்ட நிலையில் இதன் இரண்டாம் கட்டத்தில் இதுவரை இருபது பாடசாலைகள் துணுககாய் கல்வி வலயத்தின் ஊடாக உள்வாங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கற் சிலை மடு அ.த.க.பாடசாலை, கரிப் பட்ட முறிப்பு அ.த.க. பாட சாலை, பெரியகுளம் அ.த.க. பாடசாலை மற்றும் ஒலுமடு தமிழ் வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளுக்கும் பயிற்சிப் புத்தகங்களை வழங் கிய ரவிகரன் பாடசாலையில் நிலவும் குறைகள் தொடர்பிலும் கேட்டறிந்துள்ளார். இதன்போதுகற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு சவாலாக உள்ள கட்டட குறைபாடுகள், விளையாட்டு மைதான புனரமைப்புத் தேவைகள் மற்றும் குடிநீர் தட்டுப்பாடு போன்றவை தொடர் பிலான முறைப் பாடுகள்ரவிகரனிடம்முன்வைக்க ப்பட்டிருந்தன. (2-250)





வவுனியா வரோட் நிறுவனத்தின் அனுசரணையுடன் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தின ஊர்வலம் நேற்றுக்காலை கிளிநொச்சி கந்தசுவாமி

(படங்கள்:-கிளிநொச்சி-I செய்தியாளர்)

## கோணாவில் கிராம அலுவலர் பிரிவை 3 பிரிவாக்குமாறு மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கோணாவில் கிராம அலுவலர் பிரிவானது ஒரு கிராம சேவையாளரின் கீழ் இயங்கி வருவதால் தேவைகளை பூர்த்தி செய்யவரும் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

குறித்த கிராமசேவையாளர் பிரிவில் ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இக்கிராம சேவையாளர் பிரிவானது கோணாவில் மத்தி, கோணாவில் கிழக்கு, யூனியன் குளம், காந்தி கிராமம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கி ஒரு கிராம அலுவலரின் கீழ் இயங்கி வருவதால் தமக்கான தேவைகளை சிறந்த முறையில் பெற முடியவில்லையென கிராம மக்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் அண்மையில் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் கிளிநொச்சி கிளையில் தேவைகள் மதிப்பீடு மற்றும் இயலுமை இயலாமை மதிப்பீட்டின் போது மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்களால் புதிதாக மூன்று கிராம அலுவலகங்களை உருவாக்கி தருமாறு கோரிக்கை விடப்பட்டது.

அத்துடன் இக்கிராமங்களுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கிடைக்கப் பெறும் போது அவற்றினை பங்கீடு செய்வதில் கிராம அலுவலர் பிரச்சினைகளை எதிர்கொள்வதாகவும் இதன்போது மக்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கிராம அலுவலரை நீண்ட தூரம் பயணம் சென்றே சந்திக்க வேண்டியுள்ளதாக தெரிவித்தனர்.

250 இற்கு மேற்பட்ட குடும்பங்களை உள்ளடக்கி ஒரு கிராமம் அமையப்பெற்றால், அது ஒரு கிராம அலுவலர் பிரிவாக அமைப்பதற்கு நடைமுறை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (2-277)

## 2,130 பயனாளிகளுக்கு பயன்தரும் மரக்கன்றுகள்

(தர்மபுரம்)

திவிநெகும வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் ஆறாம் கட்ட நடவடிக்கை நாடு பூராகவும் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.11 மணிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது

இதன் ஓர் அங்கமாக புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள கிராமங்களில் 2 ஆயிரத்து 130 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான பயன் தரும் மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

இதில் மரக்கறிகன்று வகைகள், பழமரக்கன்றுவகைகள், ஏற்றுமதி பயிர்க்கன்று ஒன்றும் மூலிகை வகை கன்றுகள் என்பன வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் புளியம் பொக்கணை கமநலசேவை நிலையத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம் நாகேந்திரபுரத்தில் 350 குடும்பங்களுக்கும் கட்டைக்காட்டில் 300 குடும்பங்களுக்கும் கண்டாவளையில் 230 குடும்பங்களுக்கும் புளியம்பொக்கணையில் 350 குடும்பங்களுக்கும் தர்மபுரம் மேற்கில் 200 குடும்பங்களுக்கும் தர்மபுரம் கிழக்கில் 250 குடும்பங்களுக்கும் பிரமந்தனாற்றில் 450குடும்பங்களுக்குமாக மொத்தம் 2 ஆயிரத்து 130 குடும்பங்களுக்கு மேற்படி மரக்கன்றுகள் அனைத்தும் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் கிடைக்கப்பெறும் வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது போன்று ஒவ்வொரு கிராமத்திலும் இவ் உதவிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது. (2-282)

## 'மக்களை நோக்கிய சேவை'

(வவுனியா)

வடமாகாண சபையும் வவுனியா மாவட்ட செயலகமும் இணைந்து நடத்தும் மக்களை நோக்கிய சேவை எனும் தொனிப் பொருளில் மக்கள் குறை நிவர்த்தி நடமாடும் சேவை நாளை வெள்ளிக்கிழமையும் நாளை மறுதினம் சனிக்கிழமையும் காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள புளியங்குளத்தில் நடைபெறுமென வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தா.

இதன்பிரகாரம் வவுனியா வடக்கு கல்விப் பணிமனையில், மாகாண கல்வி கலாசார பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் நடமாடும் சேவை யும் மீன்பிடி, கைத்தொழில், கிராம அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சின் நடமாடும் சேவையும் நடைபெறும்.

புளியங்குளம் இந்துக் கல்லூரியில் உள்ளூராட்சி அமைச்சு, தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, காவல்துறை, சமுர்த்தி, பிறப்பு இறப்பு பதிவாளர், காணி அமைச்சு ஆகியவற்றின் சேவைகளையும் புளியங்குளம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சுகாதாரத் திணைக்களம் மற்றும் சுதேச வைத்தியத் திணைக்களத்தின் சேவைகளையும் பெறமுடியும் எனவும் அவர் கூறினார்.

இதன்போது, மக்களின் போக்குவரத்து சேவைகளையும் இலவசமாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (2)

## உலக உணவு தின நிகழ்வு

(திருவையாறு)

உலக உணவு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.


இதனையொட்டி உலக உணவு நிறுவனத்தின் ஏற்பாட்டில் உலக உணவு தின நிகழ்வு இன்று காலை 30 மணிக்கு கிளிநொச்சி ப.நொ.கூட்டுறவுச்சங்க மண்டபதில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண விவ சாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டு சிறப் பிக்கவுள்ளார்.

அத்துடன் உலக உணவு நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி இஸ்மாயில் ஓமர் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்குவார். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (273-277)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்ப்பு






இது சுதாகரனின் திருமணம் நடந்து முடிந்த பின்பு பத்திரிகையில் ஜெயலலிதா கொடுத்த நன்றி அறிவிப்பு விளம்பரம். அரசுத் தரப்பு சாட்சியான தினத்தந்தி நாளிதழின் மூத்த விளம்பர மேலாளர் சுந்தரேசன் மூலம் நிரூபணம் ஆகியுள்ளது. தினத்தந்தி நாளிதழின் அனைத்துப் பதிப்புகளிலும் 11.09.1995 அன்று இந்த விளம்பரம் வெளியானது என்பதையும் சுந்தரேசனின் சாட்சி உறுதிப்படுத்தியுள்ளது. அவருடைய கூற்றை அரசுத் தரப்பு அந்த நாளில் வெளியான தினத்தந்தி நாளிதழ்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து உறுதிப்படுத்தியுள்ளது. இதற்கான கட்டணமாக இரண்டு இலட்சத்து 47 ஆயிரத்து 660 ரூபாய் ராக் ஆர்ட்ஸ் என்ற விளம்பர நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. குறுக்கு விசாரணையில், இது அரசாங்கம் சார்பில் கொடுக்கப்பட்ட விளம்பரம் இல்லை என்பது தெளிவாகியுள்ளது. இந்த விளம்பரம் ஆளும் கட்சி சார்பில் கொடுக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளது நல்ல நகைச்சுவை. இது தொடர்பாக பொலிஸாருக்கு சுந்தரேசன் கொடுத்த பில்லில் தமிழ்நாடு முதலமைச்சர் என்பதற்குக் கீழே, அ.இ.அ.தி.மு.க பொதுச் செயலாளர் என்று அச்சடிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதே சமயம் அரசாங்கம் சார்பில் கொடுக்கப்படும் விளம்பரங்களில் கட்சியின் பெயரோ, கட்சியில் அவர் வகிக்கும் பொறுப்போ இடம்பெறாது என்றும் ஒப்புக்கொண்டுள்ளார்.

## என் இதயபூர்வமான நன்றிகள்

"என் வளர்ப்பு மகன் வி.என். சுதாகரனுக்கும் சத்தியலட்சுமிக்கும் 7.5.1995 அன்று நடைபெற்ற திருமணம் மற்றும் 06.05.1995 அன்று நடைபெற்ற மாப்பிள்ளை அழைப்பு நிகழ்ச்சியில் நேரிலும் வாழ்த்துகள் அனுப்பியும் சிறப்பித்த ஒவ்வொருவருக்கும் என் இதயபூர்வமான நன்றிகள்...

உங்கள் மீது கொண்டுள்ள அன்பு மற்றும் பாசத்தால் உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரிவிக்கும் நன்றியாக ஏற்கவும்."

ஜெ.ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்,
அ.இ.அ.தி.மு.க பொதுச் செயலாளர்.



### கையும் கணக்குகளுமாகச் சிக்கிய ஆடிட்டர்!

அரசுத் தரப்பு சாட்சி ஆடிட்டர் ராஜசேகரன், இந்த வழக்கில் மிக முக்கியமான சாட்சி. இவர் ஜெயலலிதாவுக்கு 84-85, 96-97 ஆண்டுகளில் வருமானவரி, சொத்து வரிக் கணக்குகளைத் தாக்கல் செய்தவர். ஊழல் தடுப்பு பொலிஸார் ராஜசேகரனின் வீடு மற்றும்அலுவலகங்களில்சோதனை நடத்தியபோது ஏராளமான ஆவணங்களைக் கைப்பற்றினர்.

அப்போது, என்னென்ன கைப்பற்றப்பட்டன என்ற அறிக்கையில் ராஜசேகரன் கையெழுத்துப் போட்டுக்கொடுத்துள்ள பகுதி முக்கியமானது. அதில், 1996 ஒக்டோபர் 17 ஆம் திகததி காலை 11.30 மணியில் இருந்து மதியம் 4.00 மணி வரை இலஞ்ச ஒழிப்புத் துறை பொலிஸார் என்னு டைய வீடு, அலுவலகங்களில் சோதனை நடத்தினர். நல்லம்மநாயுடு தலைமையில் வந்த பொலிஸ்காரர்கள் ராயப்பேட்டையில் உள்ள எனது வீட்டிலும் எண்:57, சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை என்ற முகவரியில் உள்ள எனது வீட்டிலும்சோதனை மேற்கொண்டனர். அப்போது அபிராமபுரம் வீட்டில் இருந்து 48 ஆவண்ணங்களைக் கைப்பற்றினார்கள்.

அதில் 928 பக்கங்களைக் கொண்ட 38 ஆவது ஆவணம் முழுக்க முழுக்க சுதாகரனின் திருமணச் செலவுகள் தொடர்பான ரசீதுகள், செலவுகள் பற்றிய விபரங்களைக் கொண்டவை' என்று குறிப்பிட்டுக் கையெழுத்துப் போட்டுள்ளார். ஆனால், துரதிர்ஷ்டவசமாக ஆடிடடர் ராஜசேகரனை அரசுத் தரப்பு, எதிர்த்தரப்பு... என இருவராலும் குறுக்குவிசாரணை செய்ய முடியவில்லை. அவரை இந்த நீதிமன்றத்துக்குக் கொண்டு வருவதில் இருவருமே தோல்வியடைந்து உள்ளனர். அதன் காரணமாக ராஜசேகரனிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் அனைத்தையும் நாம் ஒதுக்கிவிட முடியாது. ஏனென்றால் இந்தச் சாட்சியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் அரசுத் தரப்பு, எதிர்த்தரப்பு என இருவருக்குமே பல வகையில் பயனுள்ளவையாகவுள்ளன.

அதில் கிடைத்த முக்கியமான ஆவணங்கள் என்னவென்றால், சுதாகரனின் திருமணம்பற்றி, விபரங்கள் கேட்டு ஜெயலலிதா, சசிகலாவுக்கு வருமான வரித் துறை அனுப்பிய நோட்டீஸ், கோவிந்த் கேப்ஸ், கிரீஸ் மியூசியம் பர்னிச்சர்ஸ், பந்தல் காண்ட்ராக்டர் குமரேசன் நாடார் கொடுத்த ரசீது, பாலு கலர் லேப், குமரன் சில்க்ஸ், நெல் மற்றும் அரிசி விற்பனையாளர் அப்பாஸ், மௌலிஸ் அட்வர்டைசிங் கம்பனி, ஏ.ஜி.கே. டிராவலஸ், ஆங்கர் கேப்ஸ், வின்செண்ட் டிராவலஸ், வருமானவரித் துறை ரசீதுகள், அடையார் கேட் ஹோட்டல் ரசீது போன்றவை கைப்பற்றப்பட்டு உள்ளன.

சுதாகரனின் திருமணம் மற்றும் வரவேற்பு இசைக் கச்சேரிக்காக மெண்டலின் ஸ்ரீநிவாஸ், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானைத் தொடர்புகொண்டு பேசியதையும் ஜவஹர் பாபு ஒப்புக்கொணடு உள்ளார். அதோடு முதல் அமைச்சர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், ஐ.பி.எஸ் அதிகாரிகள், ஆளுநர்கள் உள்ளிட்ட 400 வி.ஐ.பிக்களுக்கு அழைப்பிதழ்கள் அனுப்பியதையும் ஒப்புக்கொண்டுள்ளார்.

# தவறிப்போன சிவாஜியின் 'தீர்ப்பு'

### போயஸ் கார்டனில் சுதாகரன்!

மற்றொரு முக்கிய சாட்சி, ஐ.ஏ.எஸ அதிகாரி ஜவஹர் பாபு. இவர் 1992 முதல் 1996 வரை போயஸ் கார்டன் இல்லத்தில் முதலமைச்சரின் உதவிச் செயலாளராகப் பணியாற்றியவர். இவருடைய அலுவலகம் தலைமைச் செயலகத்திலும் முகாம் அலுவலகம்ஜெயலலிதாவின்போயஸ் கார்டன் இல்லத்திலும் இருந்து செயற்பட்டுள்ளன. அந்தக் காலத்தில் சசிகலாவும் சுதாகரனும் போயஸ் கார்டனில்தான் வசித்தனர் என்பதையும் சுதாகரனின் திரு மண நிச்சயதார்த்தம், நடிகர் சிவாஜி கணேசன் வீட்டில் நடைபெற்றதையும்மணமகன் வட்டில் இருந்து விலை உயர்ந்த பொருட்கள் பல தட்டுகளில் அங்கு எடுத்துச சென்றதையும் ஜெயலலிதா அதில் கலந்து கொண்டார் என்பதையும் தனது சாட்சியில் உறுதிப்படுத்தி உள்ளார்.

### வெள்ளித் தட்டுகளில் அழைப்பிதழ்!

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் தனது சாட்சியில், முதலமைச்சரின் உதவிச் செயலாளர் ஜவஹர்பாபு தன்னை தொலைபேசியில் அழைத்து, முதலமைச்சரைச் சந்திக்கும்படி சொன்னதாகவும் இதையடுத்து மறுநாள் தலைமைச் செயலகத்தில் தன்னுடைய தாயாருடன் போய் ஜெயலலிதாவைச் சந்தித்ததாகவும் தெரிவித்தார். அப்போது, ஜெயலலிதா தன்னுடைய வளர்ப்பு மகன் திருமணத்துக்கு இசைக் கச்சேரி நடத்த வேண்டும் என்று கேட்டதாகவும் அதற்கு, தான் சம்மதித்ததாகவும் தெரிவித்துள்ளார். இதையடுத்து மறுநாள்பாஸ்கரன் அவரது மனைவியுடன் ஏ.ஆர். ரஹ்மான் வீட்டுக்கு வந்து, இரண்டு தட்டுகளில் அழைப்பிதழ் வைத்ததாகவும் ஒவ்வொன்றிலும் ஒரு பட்டுச் சேலை, ஒரு பட்டு வேட்டி, அங்கவஸ்திரம், குங்குமச் சிமிழ் இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். பொறியாளர் முத்துச்சாமியும் தான் பந்தல் வேலைகளை மேற்பார்வை பார்த்துக்கொண்டு இருந்தபோது, தனக்கு வெள்ளித்தட்டில் பட்டுச் சேலை, பட்டு அங்கவஸ்திரம் வேட்டியுடன் அழைப்பிதழ் கொடுக்கப்பட்டதாகக் கூறியுள்ளார். அதன் மூலம் வி.ஐ.பிக்களுக்கு வெள்ளித தட்டுகளில் பத்திரிகை கொடுக்கப பட்டது நிரூபணமாகியுள்ளது. முத்துச்சாமியிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டு இந்த வழக்கில் இணைக்கப்பட்டுள்ள வெள்ளித் தட்டு மற்றும் பட்டுச்சேலை ஆகியவற்றை வைத்து அவற்றின் விலை இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு என்ன என்பதைக் கண்டறிந்து அதைக் கணக்கிட்டு, இந்த மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளது.

இந்தச் சாட்சியங்களை எதிர்த் தரப்பு குறுக்குவிசாரணையில் உடைக்க முடியவில்லை. மாறாக, கிடைதத ஆவணங்கள் அனைத்தும் குற்றவாளிகள் தரப்புக்கு எதிராக மிக சக்திவாய்ந்த ஆதாரங்களாக உள்ளன.

### பதில் சொல்ல முடியாத ஜெயலலிதா!

சுதாகரனின் திருமணம் பற்றி ஜெயலலிதா நேரில் ஆஜராகி, சாட்சி சொன்னபோது, நான் திருமணத்துக்கு எந்தப் பணமும் செலவழிக்கவில்லை. இதை நான 1995 மற்றும் 1999ஆம் ஆண்டுகளில் வருமானவரித் துறைக்கு அளித்த பதிலிலும் தெளிவு படுத்தியுள்ளேன். மேலும், திருமணம் நடைபெற்றது 1995ஆம் ஆண்டு. ஆனால், அதற்கான செலவுகள்பற்றி மதிப்பீடு, செய்துள்ள தங்கராஜ், அதை 1997ஆம் ஆண்டு.தயாரித்துள்ளார். அவர் இதுபோன்ற மதிப்பீடுகளைச் செய்வதில் திறமையற்றவர் என்பது அவரது மதிப்பீட்டில் இருந்து தெரியவருகிறது என்று நீதிமன்றத்தில் ஜெயலலிதா சொன்னார். ஆனால், அதே ஜெயலலிதா, 1996,97ஆம் வருடம் தாக்கல் செய்த வருமானவரி கணக்கில் திருமணச் செலவுகள் என்று குறிப்பிட்டு 25 இலட்சத்து 98 ஆயிரத்து 521 ரூபாய் என்றும் ரொக்கமாக 3 இலட்சத்து 94 ஆயிரத்து 240 ரூபாய் செலவு செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

(தீர்ப்பு நாளை தாடரும்...)

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எபோலாவால் ஐ.நா பணியாளர் மரணம்

(கானா)

மேற்கு ஆபிரிக்காவில் எபோலா நோய் தாக்கிய ஐ.நா. பணியாளர் கடந்த வாரம் முதல் ஜேர்மனியில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் நேற்று முன்தினமிரவு அவர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த 56 வயதான ஐ.நா பணியாளரை காப்பாற்ற தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் நேற்றுமுன்தினம் நள்ளிரவில் அவர் மரணமடைந்தார் என அவருக்கு சிகிச்சை அளித்த செயிண்ட் ஜார்ஜ் கிளினிக் வைத்தியர்கள் வெளியிட்டுள்ள விரிவான அறிக்கை தெரிவித்துள்ளது. அவருக்கு தீவிரமான நோய் தாக்கம் காணப்பட்ட நிலையில், அவரை காப்பாற்ற எவ்வளவோ முயற்சித்தபோதும் அது முடியாமல் போனதாக வைத்திய சாலை நிர்வாகம் கூறியுள்ளது.

நோய் தாக்கி மரணமடைந்த ஐ.நா பணியாளரும், சூடான் நாட்டை சேர்ந்த வைத்தியர் ஆவார். கடந்த வியாழனன்று தான் அவர் லைபீரியாவில் இருந்து ஜேர்மனி வந்தார். முன்னதாக சியாராலியோனில் எபோலா தாக்கிய இருவர் ஜேர்மனி வைத்தியர்களால் காப்பற்றப்பட்டனர். இந்நோய் தாக்கி இந்த வருடம் மட்டும் 4ஆயிரம் பேர் மரணமடைந்தது குறிப்பிடத்தக்கது. (இ)

# கன்னியாகுமரி மீனவர்கள் 20பேருக்கு ஈரானில் சிறை

கத்தார் நாட்டில் தங்கி மீன் பிடிக்கச் சென்ற கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் 4 பேர் ஈரான் கடலோர காவற்படையின் பிடியில் சமீபத்தில் சிக்கி அந்நாட்டு சிறையில் வாடுகின்றனர்.

இதற்குள், சவுதி அரேபியாவில் தங்கி மீன்பிடித்த குமரி மீனவர்கள் 20 பேர், ஈரான் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட அதிர்ச்சி தகவல், தெற்காசிய மீனவ தோழமை அமைப்புக்கு நேற்று முன்தினம் வந்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 20 மீனவர்கள் சவுதி அரேபியாவில் தங்கி மீன்பிடித் தொழில் செய்துவந்தனர். கடந்த 20ஆம் திகதி சவுதிஅரேபியாவில் கரீம், கத்தக் ஆகிய பகுதிகளில் மீன்பிடிப்பதற்காக 4 விசைப்படகுகளில் சென்றனர். அன்று இரவு தங்கள் கடல் எல்லைக்குள் புகுந்ததாக ஈரான் கடற்படையினர் அவர்களை சிறைபிடித்தனர்.

சிறைபிடிக்கப்பட்ட மீனவர்கள் அனைவரையும் நடுக்கடலிலேயே 24 நாட்களாக விசைப்படகுகளில் சிறை வைத்துள்ளனர். அவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளது இக்தீப் என்ற தீவு பகுதி என்பதால், அவர்களை சந்திக்க சவுதி அரேபியாவைச் சேர்ந்த படகு உரிமையாளர்களும் தயக்கம் காட்டுகின்றனர்.

தெற்காசிய மீனவ தோழமை அமைப்பின் பொதுச்செயலாளர் பாதர் சர்ச்சில் கூறும்போது, "ஈரானின் இக்தீப் தீவில் குமரி மீனவர்கள் 20 பேரும் 24 நாட்களாக உயிருக்கு போராடி வருகின்றனர். ஈரான் அரசு சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்க அக்கறை காட்டவில்லை. எனவே மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்குமாறு, தமிழக முதல்வர் ஓ.பன்னீர் செல்வம், ஈரானில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளுக்கு கோரிக்கை அனுப்பி யுள்ளோம்" என்றார் அவர். (இ)

# ஏமனில் முக்கிய துறைமுக நகரை கைப்பற்றினர் கிளர்ச்சியாளர்கள்

(சானா)

அரபு நாடுகளில் ஒன்றான ஏமன நாட்டில் உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. தலைநகர் சானாவை கடந்த மாதம் ஷியா கிளர்ச்சியாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தனர். அதே நாளில் அரசுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையேயான ஐ.நா.வின் சமாதான ஒப்பந்தமும் கையெழுத்தானது. அதைத் தொடர்ந்து ஆட்சி மாற்றத்துடன், அதிகாரத்திலும் பங்கு வேண்டும் என்ற ஷியா கிளர்ச்சியாளர்களின் கோரிக்கை, கனிந்து நனவாகும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டது.

ஆட்சிக்கு புதிய தலைவரை (பிரதமரை) நியமித்தவுடன், கிளர்ச்சியாளர்கள் சானா நகரை ஆக்கிரமிப்பில் இருந்து விட்டு விட வேண்டும் என்பதே ஒப்பந்தம்.

இந்த நிலையில், புதிய பிரதமராக, தொழில் அதிபராக இருந்து அரசியல்வாதியாக மாறிய அகமது அவாத் பின் முபாரக் (வயது 46) என்பவரை ஜனாதிபதி அபத் ரப்போ மன்சூர் ஹாதி நியமித்தார். இந்த நியமனத்தை ஷியா கிளர்ச்சியாளர்கள் ஏற்கவில்லை.

இதையடுத்து தன்னை இந்தப் பொறுப்பில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ஹாதியிடம் முபாரக் கேட்டுக் கொண்டார். அதை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார்.இதற்கிடையே புதிய பிரதமர் நியமனத்தை நிராகரித்து, கிளர்ச்சியாளர்கள் போராட்டம் தொடங்கினர்.

இந்த நிலையில் ஜனாதிபதி நேற்று முன்தினம் புதிய பிரதமராக ஐ.நா.தூதர் காலீத் பகாக்கை நியமித்தார்.இவரது நியமனம் நாட்டின் சிக்கல்களை தீர்க்க உதவும் என ஜனாதிபதி தெரிவித்தார்

இந்த நிலையில் ஷியா கிளர்ச்சியாளர்கள் செங்கடல் பகுதியில் உள்ள ஹூடிடா துறைமுக நகரை கைப்பற்றினர்.

இது நாட்டின் 2 ஆவது முக்கிய நகரமாகும்.சானா நகரில் இருந்து ஹூடிடா 226 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது.ஹூடிடா நகரில் வான் மற்றும் கடல் பகுதிகள் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் வந்தது. ஹூடிடா நகரில் 20 இலட்சம் மக்கள் வசித்து வருகிறார்கள். நகரில் உள்ள நீதிமன்றத்தின் பாதுகாவலரை கொன்று நீதிமன்றத்தையும் கைப்பற்றினர். நகரின் முக்கிய வீதிகளில் கிளர்ச்சியாளர்கள் பாதுகாப்பை அதிகரித்து உள்ளதாக இராணுவ தரப்பிலும் கிளர்ச்சியாளர்கள் தரப்பிலும் உறுதிப்படுத்தியுள்ளனர். (இ)



கலிபோர்னியாவில் பூசணிக்காய் போட்டியில் 934 கிலோ எடையுள்ள பூசணிக்காய் வென்று சாதனை படைத்தது.

## பேஸ்புக் நிறுவுநர் 150 கோடி நிதியுதவி



கொடிய உயிர்க்கொல்லி நோயான எபோலாவை கட்டுப்படுத்த போராடும நாடுகளுக்கு பேஸ்புக் நிறுவுநர் மார்க் ஷூக்கர் பெர்க் ரூ.150 கோடி நிதி உதவி அளிக்க போவதாக அறிவித்துள்ளார். எபோலா நோய் தாக்கி மேற்கு ஆபிரிக்க நாடுகளில் நான்காயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 9 ஆயிரம் பேர் அந்நோய் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். எபோலா பரவாமல் தடுக்க உலக சுகாதார நிறுவனம் பல வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. (இ)

## வேகமாக உயரும் கடலின் மட்டம்

### விஞ்ஞானிகள் தகவல்

கடல் மட்டம் கடந்த 150 ஆண்டுகளில் மிக மிக வேகமாக உயர்ந்து உள்ளது என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.இது குறித்து அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினர்.உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் அடிப்படையில் கடந்த 35 ஆண்டுகளில் கடலின் ஏற்ற இறக்கம் குறித்து ஆய்வு நடத்தினர்.இது குறித்து ஆய்வு நடத்திய அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழக பேராசிரியர் குர்லாம்பேக் கூறியதாவது,

சுமார் 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன். கடல் மட்டம் எந்த மாற்றமும் இல்லாமல் நிலையாக இருந்தது. இப்போதுதான் கடல் மட்டம் உயரத் தொடங்கியுள்ளது. உலகத் தொழில் மயமாக்கலுடன் இணைந்த ஒரு விரைவான மேல் நோக்கிய போக்கு உள்ளது. கடந்த 150 ஆண்டுகளாக கடல் மட்டம் ஆண்டுக்கு பல மீற்றர்கள் அதிகரிப்பதை பார்க்க முடிகிறது. கடல் அலை அளவைகளின் முந்தைய தகவல்களை வைத்து ஒப்பிட்டு பார்க்கும் போது சமீப காலங்களில் கடலின் மட்டம் உயர்வு அதிகரித்து உள்ளதை காட்டுகிறது. அதிகரித்துவரும் வெப்பநிலை கடல்மட்ட விளைவுகளை தெளிவாக பதிவு செய்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார் . (இ)




# பக்தாத் கார் குண்டுத் தாக்குதலில் சிக்கி முன்னாள் அமைச்சர் உட்பட 25 பேர் பலி

சிரியா- ஈராக்கில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் பெரும்பாலான நகரங்களை பிடித்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். தற்போது அன்பார் மாகாணத்தில் முற்றுகையிட்டு நகரங்களை கைப்பற்றி வருகின்றனர். சமீபத்தில் இயூபிரேட்ஸ் ஆற்றின் கரையில் உள்ள ஹீத் என்ற நகரத்தை தீவிரவாதிகள் கைப்பற்றினர்.

தீவிரவாதிகளுக்கு ஈராக் இராணுவம் பதிலடி கொடுக்கும் வகையில் அங்குள்ள ஆசாத் முகாமில் தங்கியிருந்து தாக்குதல் நடத்தியது. ஆனால் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இராணுவத்தால் ஈடு கொடுக்க முடியவில்லை.

இதற்கிடையே ஹீத் நகரின் மைய பகுதியை தீவிரவாதிகள் ஆக்கிரமித்தனர். எனவே ஹீத் நகரை தீவிரவாதிகளுக்கு ஈராக் இராணுவம் விட்டுக் கொடுத்து தாரை வார்த்தது.ஆசாத் முகாமில்



இருந்து வெளியேறி வேறு இடத்துக்கு சென்று விட்டது. ஆசாத் முகாம் வடமேற்கு ஹீத் பகுதியில் உள்ள மிகப் பெரிய முகாம் ஆகும்.

ஈராக்கில் மேற்கு அன்பார் மாகாணத்தை பிடிப்பதற்காக ஐ.எஸ். ஐ.எஸ. தீவிரவாதிகள் அரசு படைகளுடன் தீவிரமாக சண்டையிட்டு வருகின்றனர். இதனால் அங்கிருந்து ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

கடந்த 3 நாட்களுக்கு முன் ஈராக்கின் ஷியா பிரிவினர் அதிகமாக வாழும் காதிமியா மாவட்ட பகுதியில் நடந்த 3 மனித வெடிகுண்டு தாக்குதல்களில் 77 பேர் கொல்லப்பட்டனர்.இந்த நிலையில் நேற்று பக்தாத்தில் ஷியா பிரிவினர் அதிக அளவு வாழும் பகுதியில் கார் வெடிகுண்டு தாக்குதல் நடைபெற்றது. இதில் ஈராக் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட 25 பேர் பலியானார்கள். ஷியா முஸ்லிம்களின் புனித ஸ்தலமாக கருதப்படும் இமாம் காதிம் பகுதியில் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது.

இதில் முன்னாள் துணை உள்துறை அமைச்சரும் ஷியா பத்ர் அரசியல் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான அஹ்மத் -அல்-ஹபாஜியும் பலியானார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் இந்த தாக்குதலில் 5 பொலிஸாரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இரண்டாவது தாக்குதல் வடக்கு பக்தாத் அல்குகிரா மாவட்டத்தில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியில் வீதியோரம் குண்டு வெடித்தது. இதில் 3 பேர் பலியானார்கள். (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குறைகளை விட அதை திருத்தி அமைக்க என்ன வழி என்று கண்டுபிடியுங்கள்.
- ஹென்றி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜனாதிபதியின் வருகையின் போது பதறி அடிக்கும் உயர் அதிகாரிகளுக்கு...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வட பகுதிக்கு விஜயம் செய்த போது, செல்கின்ற இடங்கள் அனைத்தும் அசுர வேகத்தில் அலங்கரிக்கப்பட்டன.

குறிப்பாக யாழ்.வீரசிங்கம் மண்டபம் மிக நீண்ட காலத்துக்குப் பின் நல்ல முறையில் அழகுபடுத்தப் பட்டுள்ளது. வீரசிங்கம் மண்டபத்தின் மேற்சுவரைக்கு வெள்ளை நிறப் பூச்சு இடம்பெற்றதெனில் ஏனைய அலங்கரிப்புகள் பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை.

ஜனாதிபதியின் வருகை என்றால் இப்படி எல்லாம் நடக்குமா? அல்லது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வருகைக்கு மட்டுமே இப்படியான ஏற்பாடா? என்று யாரேனும் கேள்வி எழுப்பினால்,

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி என்பதால் இத்தகைய ஏற்பாடு என்று உறுதிடக் கூறமுடியும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிர்வாகத்திலும் செயற்பாட்டு விடயங்களிலும் மிகவும் இறுக்கமானவர். ஒருமுறை தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்குச் சென்றிருந்த அவர், அந்தப்பாடசாலையில் சேதமடைந்த கட்டிடங்கள் திருத்தப்படாமை கண்டு கடும் கோபம் கொண்டதுடன் மாலை மரியாதைகளையும் புறக்கணித்து விட்டார்.

ஒரு நாட்டின் ஜனாதிபதி இத்தகைய இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்கும் போதே; அரசியல் பிரதிநிதிகள், உயர் அதிகாரிகள் நிதானமாகச் செயற்படுவர். இல்லையேல் மாலை மரியாதை என்பதோடு எல்லாம் பிசுபிசுத்துப் போகும்.

ஜனாதிபதி அல்லது அமைச்சர்கள் அல்லது ஆளுநர்கள் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது உயர் அதிகாரிகள் ஒரு பிரதேசத்திற்கு வருகை தருகிறார்கள் என்றால், அவர்களுக்கு மாலைகளால் சாத்துப்படி செய்யவேண்டும்; மங்கல இசை வாத்தியங்களால் வரவேற்க வேண்டும்; பள்ளி மாணவிகள் நடனமாடி அழைத்துச் செல்ல வேண்டும் என்றெல்லாம் நினைக்காதீர்கள்.

இவற்றை ஒரு நல்ல நிர்வாகி; மக்கள் நலன் சார்ந்த அரசியல்வாதி ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்.

அதேநேரம் நடனக் கலை என்பது அரங்கில் ஆடப்பட வேண்டும். இதை விடுத்து வீதியின் இரு மருங்கிலும் பெண் பிள்ளைகள் நடனமாடிக் கொண்டு செல்வது தமிழர்களின் கலாசாரத்துக்கு உடன்பாடானதல்ல.

தென்பகுதியில் கண்டி நடனம் இத்தகையதொரு போக்கைக் கொண்டிருக்கலாம். அதற்காக அதே பாங்கை நாமும் கடைப்பிடிக்க வேண்டும் என்ற தேவையில்லை.

நம் பிரதேசத்திற்கு வருகின்ற பிரமுகர்களை வரவேற்க வேண்டுமாயின் மேடையில் ஒரு வரவேற்பு நடனத்தை அரங்கேற்றினால் அது போதுமானதாகும்.

இதை விடுத்து வீதிகளிலும் மண்டப நடைபாதைகளிலும் மாணவிகள் நடனமாடிச் செல்கின்ற ஏற்பாட்டை ஒழுங்கு செய்வதைக் கைவிட வேண்டும்.

ஜனாதிபதியின் வடக்கு விஜயத்தின்போது இத்தகைய நடன ஏற்பாடுகள் தாராளமாகச் செய்யப்பட்டிருந்த போதிலும் அதனை ஜனாதிபதி ஏற்றுக் கொள்ளவில்லை.

வடக்கு கிழக்கு மாகாணம் சேர்ந்திருந்த காலங்களில் ஆளுநரின் விஜயத்தின் போதும், அமைச்சுச் செயலாளர்களின் வருகையின் போதும் இத்தகைய நடன ஏற்பாடுகளைச் செய்து பழக்கப்பட்ட எங்கள் உயர் அதிகாரிகள் ஜனாதிபதியின் வருகையின் போதும் பதறி அடித்து நடன ஏற்பாடுகளைச் செய்ய; அந்தச் சின்னப் பிள்ளைகள் களைத்துச் சோர்ந்து போகின்ற பரிதாபம்.

எனவே மாலை மரியாதை, நடனம், மங்கள வாத்தியம் என்பதை விடுத்து செயற்திறன் வாய்ந்த சட்டங்களும் நிகழ்ச்சிகளும் நடைபெறுவதற்கு எங்களை நாங்கள் தயார் செய்வோம்.

# பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வதை பெற்றோர் ஊக்குவிக்க வேண்டும்

## அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளி/ இந்துக் கல்லூரியில் அமையப் பெற்ற மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடக் கட்டடத்தை திறந்து வைப்பதற்கு கடந்த 12ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வருகைக்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன அங்கு விஜயம் செய்தார்.

இதன்போது இத் தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை பார்வையிட்டதுடன் அங்கு கணனிப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மாணவர்களுடனும் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வின் வருகையையொட்டிய நினைவாக சந்தன மரக்கன்று ஒன்றையும் நாட்டிவைத்து உரையாற்றினார்.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது,

5 வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப்பட்ட பிள்ளைகள் கட்டாயமாக பாடசாலைக்குச் செல்வதை ஊக்குவிக்க வேண்டும். இந்த வயதெல்லை 16 வயது வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது 15 வீதமான சிறுவர்கள் பாடசாலை செல்வதில்லை.

குறிப்பிட்ட வயது பிள்ளைகள் பாடசாலை செல்லாது இருந்தால் அயலவர்கள் இதனைக் கிராம அலுவலருக்கு தெரியப்படுத்தி உரிய ஒழுங்குகளை மேற்கொள்ளவேண்டும்.

இங்கு ஆயிரத்து 200 மாணவர்கள் கல்வி கற்கின்ற நிலையில் 3 கணனிகள் மட்டுமே இருந்த நிலையில் இன்றிலிருந்து 64 கணனிகளாக மாற்றம் அடைந்துள்ளது.

இதைவிட 600 இலட்சம் ரூபா செலவில் தொழில்நுட்ப கல்வியைக் கற்பதற்கான கட்டடம் அமைப்பதற்கான ஒழுங்குகள் நடைபெற்று வருகிறது என்றார். (2-254)

# இளமருதங்குளம் புனரமைக்கப்படாமையால் விவசாயிகளின் 75 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு

(குருமன்காடு)

வவுனியா, செக்கட்டிப்புலவு, இளமருதங்குளம் புனரமைக்கப்படாமையால் அக் குளத்தை நம்பி விவசாயம் செய்து வந்த இயங்கராவூர், செக்கட்டிப்புலவு விவசாயிகளின் 75 ஏக்கர் நெற்செய்கை பாதிப்படைந்துள்ளதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இக்குளத்தை நம்பி 35 பங்காளர்கள் 75 ஏக்கர் நிலப்பரப்பில் நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்தனர்.

இக்குளம் 2010 ஆம் ஆண்டு பெய்த கடும் மழை காரணமாக உடைப்பெடுத்தது.

அப்போது அப்பகுதி கமக்கார அமைப்பினரும் விவசாயிகளும் இணைந்து உரப்பைகளில் மண்போட்டு தற்காலிகமாக நீரை தடுத்து நிறுத்தினர். உடைப்பெடுத்த பகுதி கடந்த நான்கு வருடங்களாக திருத்தப்படாது அப்படியே உள்ளமையால் குளத்தில் நீரை தேக்க முடியவில்லை. இதனால் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது தவிர, இக்குளத்துடன் தொடர்புபட்டதாக சாளம்பைக்குளம் கிராம அலுவலர் பிரிவில் காணப்படும் ஆற்றம் புலவு அணைக்கட்டும் திருத்தப்படாமையால் அதனைப் பயன்படுத்தி விவசாயம் செய்யும் 15 பங்காளர்களும் அவர்களின் 40 ஏக்கர் நிலப்பரப்பும் பாதிப்படைந்துள்ளதாகவும் இயங்கராவூர் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இது தொடர்பில் தெரியப்படுத்தியும் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இக் குளத்தையும் அணைக்கட்டையும் புனரமைத்து தருமாறு அப்பகுதி விவசாயிகள் சம்பந்தப்பட்டவர்களிடம கோரிக்கை விடுக்கின்றனர். (2-250)

# விவசாயிகள் காலதாமதமின்றி உரவகைகளை பெற்றுக்கொள்ளுங்கள்

## ஒலுமடு கமநல சேவை நிலையம் வேண்டுகோள்

(மல்லாவி)

ஒலுமடு கமநலசேவை நிலையத்தின் நடப்பாண்டில் காலபோக நெற்செய்கையில்ஈடுபட்டுள்ளவிவசாயிகளுக்கான மானிய உரவகைகள் விநியோகம் இடம்பெறுவதாகவும் அதனை காலதாமதமின்றி விரைந்து பெற்றுக்கொள்ளுமாறும் ஒலுமடு கமநலசேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சிவப்பிரகாசம் கேட்டுள்ளார்.

இதன் பிரகாரம் குறித்த நிலையத்தின் கீழ் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தங்கள் பகுதி கமக்கார அமைப்பின் ஊடாக பதிவுகளை மேற்கொண்டு மானாவாரியாக நெல்விதைப்போர் ஒரு ஏக்கருக்கு அடிக்கட்டு உரம் 14 கிலோகிராமும் யூரியா 66 கிலோகிராமும் பொட்டாசியம் 18 கிலோ கிராமும் பெற்றுக்கொள்ள முடியும்.

சிறு குளங்களின் கீழ் நெல்விதைப்பை மேற்கொண்டுள்ளவர்களுக்கு அடிக்கட்டு உரம் 20 கிலோகிராமும் யூரியா 76 கிலோகிராமும் பொட்டாசியம் 22 கிலோ கிராமும் வழங்கப்படும்.

இதேவேளை பெரிய குளங்களின் கீழ் நெற்செய்கையில் ஈடுபடுவோருக்கு அடிக்கட்டு உரம் 20 கிலோகிராமும் யூரியா 86 கிலோகிராமும் பொட்டாசியம் 22 கிலோ கிராமும் வழங்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## தனியார் விடுதியில் ஆணின் சடலம் மீட்பு

வவுனியா, முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தனியார் விடுதியில் ஒன்றின் கழிப்பறையில் இருந்து நேற்று முற்பகல் 11 மணியளவில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. வவுனியா, சிதம்பரபுரத்தைச் சேர்ந்த பொன்னுச்சாமி மனோகரன் (வயது 33) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். இச்சம்பவம் குறித்து குறித்த தனியார் விடுதி முகாமையாளர் தெரிவிக்கையில்,

விடுதியில் தங்கியிருந்த நண்பரை பார்க்க குறித்த நபர் அடிக்கடி தமது விடுதிக்கு வந்து சென்றார். சம்பவம் நடைபெற்ற இன்றும் (நேற்றும்) நண்பரைப் பார்க்க அவர் வந்திருந்தார். வழக்கம்போன்று நேற்று முற்பகல் கழிப்பறை சுத்தம் செய்யப்பட்ட சமயம் குறித்த நபர் அங்கு விழுந்து கிடந்தார் என்று சுத்திகரிப்பாளர் தெரிவித்தார்.

நாம் அவரை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் இறந்துவிட்டார் என்று வைத்தியசாலையில் தெரிவித்தனர் எனக் கூறினார். இதுதொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)



## சத்திய தரிசனம்

### மன அமைதிக்கு வழி


❖ மனித உடலே கடவுள் வாழும் கோயில். அதன் தூய்மையை காப்பது நம் கடமை.

❖ கடவுளுக்கு அர்ப்பணிக்கும் உணர்வுடன் கடமையாறுங்கள். இதனால் விருப்பு, வெறுப்பு உண்டாகாது.

❖ ஆசைக்கு ஒரு வரம்பை நிர்ணயித்துக் கொள்ளுங்கள். மனம் போன போக்கில் சென்றால் துன்பமே உண்டாகும்.

❖ புறவுலகில் இருந்து உள்முகமாக மனதை திருப்புங்கள். இதனால் மனஅமைதி நிலைத்திருக்கும்.

❖ பிறருக்கு உதவி செய்ய முடியாவிட்டாலும், மனதிற்கு இதம் தரும் வார்த்தைகளையாவது சொல்லுங்கள்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### மஞ்சள், மருதாணி ஆகியவற்றின் சிறப்பு

✦ மஞ்சளும் மருதாணியும் கலந்து உள்ளங்கையிற் பூசுவதால் கருச்சிதைவு ஏற்படாது.

✦ கை, கால்களில் மஞ்சள் பூசுவதால் பெண்களுக்கு மலட்டுத் தன்மை வராது.

✦ குளிக்கும் பொழுது தாலிச்சரட்டில் மஞ்சள் பூசுவதால் கழுத்து மற்றும் மார்புப் பகுதிகளில் அந்த மஞ்சள் பட்டு நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுக்கும்.

✦ மஞ்சள் சிறந்த கிருமிநாசினி. எனவே பெண்கள் மஞ்சள் பூசிக் குளித்தல் உடலுக்கு நல்லது.


✦ மஞ்சள் பெண்களின் முகத்தில் உரோமம் வளராமல் தடுக்கிறது.

✦ மருதாணி மூளையின் செயற்றிறத்தை மேம்படுத்தும். எனவே அடிக்கடி மருதாணி இட்டுக்கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்மர் அதிரடி

# ஜப்பானை வீழ்த்தி பிரேசில் அபார வெற்றி



ஜப்பானுக்கும் பிரேசிலுக்கும் இடையிலான நட்பு காற்பந்து போட்டியில் பிரேசில் அணி 4-0 என்ற கோல்க்கணக்கில் வெற்றி பெற்றது.

உலகக்கிண்ண போட்டியின் போது உபாதைக்கு உள்ளான பிரேசில் அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் நான்கு கோல்களை போட்டு அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இதன்மூலம் பிரேசில் காற்பந்து வரலாற்றில் தவிர்க்க முடியாத சக்தியாக நெய்மர் உருவெடுத்துள்ளார்.

ஆசியக் கண்டத்துக்கு குறுகிய கால சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரேசில் அணி, ஆசிய நாடுகளுடன் நட்பு காற்பந்து போட்டிகளில் பங்கேற்று வருகிறது.

சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெற்ற ஆட்டத்தில் ஆர்ஜென்டினாவை 2-0 என வீழ்த்திய பிரேசில், நேற்றுமுன்தினம் போட்டியில் ஜப்பானை எதிர்கொண்டது.

இந்த போட்டியில் பிரேசிலின் நம்பிக்கை நட்சத்திரமான நெய்மர் 18, 48, 77, 81 ஆகிய நிமிடங்களில் நான்கு கோல்கள் அடித்தார்.

எனினும் பிரேசிலின் அதிரடிக்கு ஜப்பான் வீரர்களால் கடைசி வரை பதிலடி கொடுக்க முடியவில்லை. (க)

# ஆக்ரோஷமான விளையாட்டையே எப்போதும் விரும்புகிறேன்

## அப்ரிடி



பாகிஸ்தான் 20 ஓவர் அணியின் கப்டன் அப்ரிடி 'இணையதளம்' ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில், கப்டன்ஷிப் அணுகுமுறையில் மிஸ்பா உல்-ஹக்கிடம் இருந்து நான் முற்றிலும் வித்தியாசமானவன். நான் ஆக்ரோஷமாக விளையாடுவதையே எப்போதும் விரும்புகிறேன்.

ஆக்ரோஷமாக செயற்படும் போது சில நேரம் இழப்பை (தோல்வி) சந்திக்க வேண்டி வரும் என்பதை அறிவேன். ஆனால் கப்டன் என்பவர் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். களத்தில் ஆவேசம், முழு முயற்சி, போராட்ட குணம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் போது சாதகமான முடிவும், சிறந்த செயற்பாடும் தானாகவே வெளிப்படும் என்ற நம்பிக்கை கொண்டவன் நான்.

பாகிஸ்தான் மக்கள் ஆக்ரோஷமான கிரிக்கெட் ஆட்டத்தையே விரும்புவார்கள். எனது வீரர்கள் ஆக்ரோஷமாக ஆடுகிறார்கள். எனக்கும் அதுதான் பிடிக்கும்.' என்றார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# சாதனை வீரனுக்கு சுகிர்தன் உதவி




நெல்லியடி மத்திய கல்லூரி மாணவனான மதுரன் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டியில் 15 வயது பிரிவின் கீழ் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் தங்கப்பதக்கத்தை வென்று பாடசாலைக்கும் வடமராட்சி மண்ணுக்கும் பெருமை சேர்த்தார்.

இவருக்கு மாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன் நேரில் சென்று வாழ்த்து தெரிவித்தார் இவரின் வெற்றிக்காக ஒரு மாங்கன்று வழங்கியதுடன் போக்குவரத்து செலவாக 2000 ரூபா வழங்கி வைத்தார்.

மேலும் மதுரனின் குடும்ப சூழ்நிலையை கருத்திற்கொண்டு கல்விக்காக மாதாந்தம் டென்மார்க் நம்பிக்கை ஒளியின் உதவியுடன் ரூபா ஆயிரம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன் முதல் மூன்று மாத செலவுக்கு மூவாயிரம் ரூபா வழங்கி வைத்தார். (க-23)

# முறையற்ற பந்துவீச்சு விவகாரம் ஆஸி நடுவர் மீது ஹர்பஜன் காட்டம்



பாகிஸ்தானின் வீரர் சயீத் அஜ்மல், உத்செயா (ஜிம்பாபவே), காஜி (வங்காளதேசம்) ஆகியோர் பந்து வீச்சு முறை சட்ட விரோதமானவை என்று கூறி அவர்களது பந்துவீச்சுக்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) சமீபத்தில் தடை விதித்தது.

இதற்கிடையே பந்துவீச்சு விதி மீறல் மீதான நடவடிக்கை காலதாமதமானவை என்றும், 20 ஆண்டுகளுக்கு முன்பே இதை நிவர்த்தி செய்து இருக்க வேண்டும் என்றும் அவுஸ்திரேலியாவை சேர்ந்த முன்னாள் ஐ.சி.சி. நடுவர் டாரல்ஹேர் கூறி இருந்தார்.

அதோடு இது மாதிரியான சந்தேகத்துக்குரிய பந்து வீச்சு முரளீதரன் (இலங்கை), சக்லைன் முஸ்தாக் (பாகிஸ்தான்), ஹர்பஜன்சிங் (இந்தியா) ஆகியோர்தான் ரோல் மாடலாக இருந்தார்கள் என்றும் கூறி இருந்தார்.

இந்த 3 பேரால் தான் பந்துவீச்சு விதிமுறை மீறல் அதிகரித்ததாகவும். அவர் குற்றம் சாட்டினார்.

இது தொடர்பாக டாரல்ஹேர் மீது இந்திய அணியின் முன்னாள் சூழற்பந்து வீரரான ஹர்பஜன்சிங் கடுமையாக பாய்ந்துள்ளார். அவர் கூறியதாவது

டாரல்ஹேர் மிகவும் அதிகமாக பேசுகிறர்ர். அவர் தனது வரம்பு முறையை மீறி விட்டார். அவரை பார்த்தால் பைத்தியம் பிடித்தவர் போல் தெரிகிறது.

நாங்கள் ஐ.சி.சி.யின் அனுமதியின் பேரில்தான் எப்போதும் பந்துவீசி வந்தோம். எனது பந்து வீச்சு பற்றி ஐ.சி.சி. ஒப்புதல் அளித்த போது அந்த நேரத்தில் டாரல் ஹேர் ஏன் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஏனென்றால் ஐ.சி.சி. நடுவர் பதவியை இழந்து விடுமோ என்ற காரணத்தில்தான் நாங்கள் ஒன்றும் ஐ.சி.சி.யின் மருமகன்கள் அல்ல.

இவ்வாறு அவர் கூறினார்.

1999 மற்றும் 2000ஆம் ஆண்டில் ஹர்பஜன்சிங் பந்து வீச்சு குறித்து சந்தேகம் கிளப்பப்பட்டு பின்னர் நிவர்த்தி செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# வவுனியாவில் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி



வவுனியாவில் நடைபெறவுள்ள மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பங்களை கோரியுள்ளது றிசாட்பதியுதீன் பவுண்டேசன்.

றிசாட்பதியுதீன் பவுண்டேசன் உறுப்பினரும் வர்த்தக கைத்தொழில் அமைச்சின் வவுனியா மாவட்ட இணைப்பாளருமான எம்.எஸ்.அப்துல்பாரி இது தொடர்பில் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் றிசாட்பதியுதீன் பவுண்டேசனால் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப் போட்டியில் வெற்றி பெறும் அணிகளுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

எனவே பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் எதிர் வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கோரியுள்ளார்.

விண்ணப்பங்களை அலுவலக நாட்களில் வவுனியா மாவட்ட செயலகத்தில் உள்ள வர்த்தக கைத்தொழில் அமைச்சின் அலுவலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (க-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவே...

கொண்டு வரவேண்டும் எனும் நோக்கில் கோட்டை நாகவிகாரையின் நகராதிபதியும், சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான மாதுலுவாவே சோபித தேரர் உள்ளிட்ட பிரதான எதிர்க் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி மற்றும் ஜனநாயகக் கட்சி ஆகியவையும், பொது அமைப்புகளும் முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றன.

இத்தகையதொரு நிலையில், பிரதான எதிர்க்கட்சிகள் மட்டுமன்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை எதிர்க்கும் ஆளும் தரப்பு கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி புதிய வேலைத்திட்டம் ஒன்றினை உருவாக்கவுள்ளதாக மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

சிங்கள, தமிழ் முஸ்லிம் கட்சிகள் என்ற வேறுபாடின்றி அதிகாரப் பகிர்வினை நேசிக்கும் ஜனநாயகத்தை விரும்பும் அனைவரையும் ஒன்று திரட்டி பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் பொது உடன்படிக்கை ஒன்றினை ஏற்படுத்த முயற்சிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் விருப்பம் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், இது தொடர்பில் பேசுவதற்கு மாதுலுவாவே சோபித தேரர் நடவடிக்கைகளை எடுத்து அதற்கமைய பேச்சுவார்த்தை நடத்த எமக்கும் அழைப்பு விடுக்கப்படுமாயின் நாம் பேச்சுவார்த்தைக்கு செல்வோம் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி மற்றும் சோசலிசக் கட்சிகள் ஆகிய கட்சிகள் அதிகாரப் பகிர்வினை ஆதரிப்பதாக முன்கூட்டியே தெரிவித்துள்ள நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயகக் கட்சி ஆகியனவும் மாதுலுவாவே சோபித தேரரின் கருத்துக்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-11)

## வடக்கிற்கு...

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, ஊடகவியலாளர் எழு ப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இலங்கையில் தீவிரவாதிகளுக்கு எதிராக நடைபெற்ற நீண்டகால போர் முடிவுக்கு கொண்டு வந்ததையடுத்து, தற்போது வடபகுதியில் சுமுகமான நிலை ஏற்பட்டு வருகின்றது. வடக்கில் மட்டுமல்ல நாட்டின் பல பிரதேசங்களிலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் மட்டுமன்றி சர்வதேச நிறுவனங்கள், உலகளாவிய அமைப்புகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு உதவிகளை வழங்கியிருந்தன.

இனங்களுக்கும், மதங்களுக்கும் இடையில் மீண்டும் பிரச்சினையை தோற்றுவிப்பதற்கு இடங்கொடுப்பதற்கான எந்தவொரு அவசியமும் எமக்கு இல்லை. அதற்கு நாம் இடமளிக்க மாட்டோம்.

இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் அல்லது பிரச்சினையை தோற்றுவிக்கும் செயற்பாடுகளில் சில வெளிநாட்டவர்கள் ஈடுபடுகின்றமை தொடர்பில் எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காகவோ அல்லது வேறு தேவைகளுக்காகவோ வெளிநாட்டவர்கள் வடக்குக்கு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டால், அது தொடர்பில் எமக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

வடபகுதிக்கு செல்லும் வெளிநாட்டவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுவதாக சொல்லப்படுவது முற்றிலும் தவறான கருத்து. உண்மையில் வடபகுதிக்கு செல்ல வெளிநாட்டவர்களுக்கு தடை எதுவும் விதிக்கப்படவில்லை.

எனினும், வடபகுதிக்கு வெளிநாட்டவர்கள் செல்லும் போது அது தொடர்பில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சிடம் அறிவித்து விட்டு செல்லும் நடைமுறை காணப்படுகின்றது. இதுமுறையாகும். சகல நாடுகளிலும் இது காணப்படுகின்றது. இலங்கையில் இது தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

வெளிநாட்டு பிரஜை ஒருவர் வடபகுதியில் தான் செல்லும் இடம், என்ன காரணங்களுக்காக செல்கின்றார்? எங்கு தங்கப் போகிறார்? போன்ற விடயங்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சிடம் அறிவித்து, அனுமதி பெற்று செல்ல வேண்டும்.

100க்கு 99 சதவீதமானவர்கள் வடபகுதிக்கு நல்ல நோக்கங்களுக்காக அல்லது மக்களுக்கு உதவும் செயற்பாடுகளுக்காக சென்றாலும் அதில் ஒரு சிலர், நாட்டில் மீண்டும் பிரச்சினையை ஏற்படுத்தவும் இலங்கை தொடர்பில் அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். அதற்கு நாம் இடமளிக்கப் போவதில்லை" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## கைதி...

டன் பேசுவதற்கு அனு மதி வழங்கப்படும் என்றும், அந்தக் கைதியின் உற வினர்கள் அந்த அழைப்புக்கான கட்டணத்தை ரெலிகொம் நிறுவனத்துக்கு செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளுக்கு சட்டவிரோத மாக கைத் தொலைபேசிகள் கொண்டு செல்லப்படுவதை தடுப்பதற்கும், கைதிகள் தமது உறவினர்களுடன் தடையின்றி தொடர்புகளைப் பேணு வதற்கும் இந்தத் திட்டம் உதவும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கைதிகளுக்கான தொலைபேசி அழைப்புகள் அனைத்தும் ஒரு சிறைக்காவலரின் மேற்பார்வை யின் கீழ் நடைபெறும் என்பதாலும், அனைத்து தொலைபேசி உரையாடல களும் பதிவு செய்யப்படும் என்பதா லும் இந்தத் திட்டத்தால் சிறைச் சாலையின் பாதுகாப்புக்கு சிக்கல் ஏதும் ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் திட்டம் நேற்று கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அது ஏனைய சிறைச்சாலைகளுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது. (எ-11)

## மகிந்த...

யில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், புதிய அரசாங்கமொன்று அமையும் பட்சத்தில் இந்த முதலீடுகளுக்குப் பாதிப்பு ஏற்படலாம் என்று சீனா அஞ்சுகின்றது.

இதன் காரணமாக மகிந்த ராஜபக்ஷவின தலைமையிலான அரசாங்கம் பதவியில் தொடர்ந்திருப்பதை விரும்பும் சீன அரசாங்கம், எதிர்வரும் தேர்தலில் அவரது வெற்றிக்கான பின்புல பங்களிப்பை வழங்கத் தயாராகியுள்ளது.

இதன் ஒரு கட்டமாக இணையத்தளங்கள், சமூக வலைத்தளங்கள் ஊடாக அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரங்களைக் கட்டுப்படுத்துவதற்கு உதவியளிக்க சீனா முன் வந்துள்ளது. (எ-11)

## வைக்கோலை...

து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

எம்மைப் பல விதங்களில் அரசாங்கம் குறை கூறி வருகின்றது. தாம் செய்யுந் தவறுகளை மூடி மறைக்க எம்மைச் சாடுகிறது.

முதன் முதலில் நேசக்கரம் நீட்டி எனது மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டு எனது உறுதியுரையை எடுக்க ஜனாதிபதியிடம் சென்றவன் நான். நாட்டில் சுமுக நிலை ஏற்பட வேண்டும். எமது மக்கள் ஒதுக்கி வைக்கப் படக்கூடாது என்ற எண்ணத்தில் இதைச் செய்தேன். அதன் பின்னர் எமக்குத் தேவையான பல விடயங்களை ஜனாதிபதி முன் வைத்தேன். அவர் தருவதாக அன்றே உறுதி மொழி கூறி இன்று இதுவரையில் தரவில்லை. அந்த ஒரு காரணமே போதும் அவரின் வருகையை நாங்கள் புறக்கணிக்க. ஆனால் அதீற்கு மேலும் பல காரணங்களைக் கூறியே எம்மால் கலந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது என்று மனவருத்தத்துடன் கூறிக் கடிதம் அனுப்பி வைத்தேன். கடிதத்தில் குறிப்பிட்டவற்றைக் குறிப்பிடாமல் அவற்றிற்குப் பதில் இறுக்காமல் வைக்கோல் பட்டடை நாய் போல வடமாகாண சபையின் செயற்பாடுகள் இருப்பதாக ஜனாதிபதி அவர்கள் கிளிநொச்சியில் வைத்துக் கூறியுள்ளார்.

### வைக்கோல் பட்டடை வடக்கு மக்கள்

வைக்கோல் பட்டடை என்று குறிப்பிட்டது எங்கள் வடமாகாண மக்களை. வட மாகாண சபையை நாய் என்று கூறியுள்ளார். எங்கள் வைக்கோல் பட்டடையின் ஒரு பகுதியை ஒரு சகோதரர் தீ வைத்துப் பொசுக்கியதால் தான் ஜெனிவாவில் விசாரணை நடக்கின்றது. மற்றைய சகோதரர் வைக்கோல் பட்டடையைப் பராமரிப்போம் பத்தும், இருபதும், முப்பதும் தாருங்கள் என்று கேட்டு வருகின்றார். இந் நிலையில் நாங்கள் நாயாக இருந்து வைக்கோல் பட்டடையின் நலம் காக்காது விட்டால் நமக்காக அவரா அல்லது அவரின் குடும்பத்தாரா நன்மை செய்யப் போகின்றார்கள்? நாயாக உழைக்கப் போகின்றார்கள்? ஒரு பிரதம செயலாளரை சட்டப்படி நியமிக்க வக்கில்லாதவர் ஒரு ஆளுநரை மக்கள் கோரிக்கைப்படி மாற்ற முடியாதவர் அதிகாரம் தன் வசம் என்ற மமதையில் வாயில் வந்ததை எல்லாம் பேசக் கூடாது.

### பெற்றுக் கொள்ளுங்கள்

2012-ல் நடந்தவற்றிற்கு 2014-ல் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் வைப்பவர், அதுவும் 2013-ல் நாம் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் எம்முடன் கலந்தாலோசியாமல் கூட்டம் வைப்பவர் எமக்கு நன்மை செய்ய வருகின்றாரா? ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு நன்மை தேட வருகின்றாரா? அவரின் நப்பாசை யாராவது ஒரு உண்மையான வடமாகாணத் தமிழ் மகனோ மகளோ தப்பித் தவறித் தமக்கு ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கக் கூடும் என்பதுதான்.

நாம் எமது மக்களுக்குக் கூறியுள்ளோம் - அவர் தருவதை ஏற்றுக் கொள்ளுங்கள். ஏனென்றால் அவர் உங்களுக்குப் பெருவாரியான நட்டஈடு வழங்க வேண்டியுள்ளது. அவர் தற்போது தரப்பார்ப்பது அதில் ஒரு மிகச் சிறு தொகை தான். அதனை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள். ஆனால் தேர்தலில் அவரை வீழ்த்த உங்களால் முடியுமானவற்றைச் செய்யுங்கள் என்று.

ஆடு நனைகின்றது என்று ஓநாய் அழுவது போலத்தான் இருக்கின்றது ஜனாதிபதியின் கூற்று. வட மாகாண மக்கள் மீது கரிசனை இருந்திருந்தால் அவர் எம் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து இங்கு வந்திருப்பார். நாங்கள் கேட்ட மிகக் குறைந்த கோரிக்கைகளை யாவது கொடுத்து விட்டு வந்திருப்பார். அப்பொழுது நாங்கள் நன்றியுடன் வரவேற்றிருப்போம். நாய்களுடன் அவர் கவனமாக இருக்கட்டும்.

### கருடா சௌக்கியமா?

அடுத்து அமைச்சர் ஒருவர் "கருடா சௌக்கியமா? என்று கேட்கத் தலைப்பட்டுள்ளார். தான் யார்? எங்கு இருக்க வேண்டியவர்? என்பதை மறந்து பேசியுள்ளார். மு.விக்னேஸ்வரனை ஜனாதிபதியின் நிகழ்வுக்கு அழைத்தோம். ஆனால் அவர் வரவில்லை. மு.விக்னேஸ்வரன் என்றால் முட்டாள் விக்னேஸ்வரன் என்று நான் கூறவில்லை. முதலமைச்சர் விக்னேஸ்வரன் என்றே கூற வந்தேன் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கிளிநொச்சியில் கிண்டல் அடித்துள்ளார்.

நண்பர் டக்ளஸ் அவர்கள் கெட்டிக்காரர் என்பதை நான் ஒத்துக் கொள்கின்றேன். தென் இந்தியாவில் பாதுகாப்பாக ஒரு தனியிடத்தில் இருத்தப்பட வேண்டியவர் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் எல்லாவற்றையும் முட்டாள்கள் ஆக்கி அவற்றில் அங்கம் வகித்து தனக்கெதிராக தென்னிந்தியாவில் விடுக்கப்பட்ட பகிரங்க பிடிவிராந்தில் இருந்து இது வரையில் அவர் தப்பி இருந்து வருவது அவரின் கெட்டித்தனத்தைக் காட்டுகிறது. அதற்காக அவர் எவரை வேண்டுமானாலும் அடிவருடி, அவர்களுக்கு அடிமையாகச் செயற்பட்டு தனது காரியத்தினைச் சாதித்து வருவதையும் நான் அறிவேன். அதுபற்றி தம்பி சிறிதரன் அவர்கள் கூறியதை பத்திரிகையில் வாசித்தறிந்தேன்.

ஆனால் சில நேரங்களில் தம்மைக் கெட்டிக்காரர்களாக அடையாளம் காண்பவர்கள் தாமே முட்டாள்கள் ஆகின்றார்கள். அப்படி ஏதாவது நண்பர் டக்ளஸுக்கு நடந்தால் இந்தியாவிற்குக் கொண்டு செல்லப்பட்டால் நான் அவரை முட்டாள் என்று அழைக்க மாட்டேன். முதலமைச்சர் என்றும் அழைக்க மாட்டேன். முற்றிலும் முடியாத பரிதாபத்துக்குரிய முன்னாள் அமைச்சர் என்று தான் குறிப்பிடுவேன். சிலரை எக்காலமும் ஏமாற்றலாம். பலரை ஒரு சில தருணங்களில் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது என்பதை நண்பர் அறிந்து வைத்திருந்தால் நல்லது என்றார். (எ-6,11)

## வழிகாட்டல் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

மனித வலு வேலைவாய்ப்பு திணைக்களம் நடத்தவுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கான தொழில் நுட்ப வழிகாட்டல் மற்றும் ஆலோசனை தொடர்பான **நீங்கள் வியக்கத்தக்கவா** எனும் தலைப்பிலான செயலமர்வு இன்றும் நாளையும் மற்றும் எதிர்வரும் 20 திகதி திங்கட்கிழமை ஆகிய மூன்று நாட்கள் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட புதிய கட்டிடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் வளவாளர்களாக யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பேராசிரியர் கு.மிகுந்தன், கலாநிதி சுதாகர் ஆகியோரும் மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்கள மனிதவள அதிகாரிகளான பா.ஸ்ரீபவன், எஸ்.சிவரஞ்சன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-11)

## பிரிட்டன் பிரதி...

டுச்சென்றனர். ஆனால் மீள்குடியேற்றம் மட்டும் இன்றுவரை இடம்பெற வில்லை. அகதிவாழ்க்கையும், அவல வாழ்க்கையும் தொடர்ந்துகொண்டு செல்கின்றது என்று இலங்கைக்கான பிரிட்டன் தூதரகத்தின் பிரதிததூதுவரிடம் தமது ஆதங்கத்தையும், அதிருப்தியையும் வெளிப்படுத்தியுள்ளனர் சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலைய மக்கள்.

இலங்கைக்கான பிரிட்டன் தூதரகத்தின் பிரதித்தூதுவர் லோரா உள்ளிட்ட குழுவினர் நேற்று பிற்பகல் 2 மணியளவில் யாழ்.சுன்னாகம் சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்திற்கு சென்று அங்கு அடிப்படைவசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்துவரும் வலிகாமம் வடக்குப்பகுதியை சொந்த இடமாகக்கொண்ட மக்களைச்சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போதே சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்தில் தங்கிவாழ்ந்துவரும் மக்கள் தமது ஆதங்கத்தையும், அதிருப்தியையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

எல்லோரையும் நாம் நம்பினோம் ஆனால் ஏமாற்றம் மட்டுமே எமக்கு மிச்சமானது. சர்வதேச நாடுகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் எங்களைவந்து பார்த்துவிட்டுச்சென்றனர். மீள்குடியேற்றத்திற்கு ஆவனசெய்வதாககூறினர். இன்றுவரை எமது சொந்த இடங்களுக்கு செல்லமுடியவில்லை. அவல வாழ்க்கை தொடர்ந்து கொண்டு இருக்கின்றது.

நலன்புரி நிலையத்தில் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் உள்ள தங்களை சொந்த இடங்களில் மீள்குடியேற்று மாறும் தமது சொந்தக்காணிகளில் நிலைகொண்டுள்ள இராணுவம் உள்ளிட்ட முப்படையினரையும் வெளியேற்றுமாறும் பல முறை கோரிக்கை விடுத்தும் கூட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதற்கு செவிசாய்க்கவில்லை. வடக்கிற்கு வருகைதந்த ஜனாதிபதி எங்களை வந்து பார்வையிடுவார். மீள்குடியேற்றத்திற்கு நடவடிக்கை எடுப்பார் என்று எண்ணியிருந்தோம். ஆனால் அவர் எங்களைக் கண்டுகொள்ளவில்லை என்றும் நலன்புரி நிலைய மக்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். (எ-6)

## பிரித்தானிய...

பின்னர் முதன் முதலாக யாழிற்கு நேற்று புதன்கிழமை வருகை தந்த உயர்ஸ்தானிகர் யாழில் பல்வேறு தரப்பினரை சந்தித்து கலந்துரையாடினார்.

அதன்போது யாழ்.மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையையும் சந்தித்தார்.

அச் சந்திப்பின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வடபகுதிக்கான விஜயம் மற்றும் இராணுவம் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31ம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய மற்றும்
ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 1922 - 09 - 20



உதிர்வு 2014 - 09 - 18

எமது அன்புத் தெய்வம்
அமரர் பரிமளம் நடராசா
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி கிருத்திய நிகழ்வுகள் எதிர் வரும் 18.10.2014 சனிக்கிழமை காலை 5.00 மணியளவில் தெணி அம்மன் கோவில் மடத்திலும் அன்று பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

'கோகுலம்'
வீ.எம்.றோட், ஆத்தியடி,
பருத்தித்துறை.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

(8047)


## இலங்...

விக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளருக்கும் தனது விஜயம் தாக்கத்தை ஏற்படுத்திவிடக்கூடாது என்பதாலேயே இந்த முடிவை தான் எடுத்தார் என்றும், எனினும் தேர்தல் முடிவடைந்ததும் தனது விஜயம் நிச்சயம் இடம்பெறும் என்றும் இந்தியப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## நிறைவே...

ஜனாதிபதித் தேர்தலை அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடத்த அரசாங்கம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற நிலையிலும், நிறைவேறறு அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையைமேலும் பலப்படுத்தும் வகையில் ஜனாதிபதிமகிந்த ராஜ பக்ஷவின் கருத்துக்கள் அமைந்திருக்கின்றன.

இச்சந்தர்ப்பத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கி, நாடாளுமன்றத்தின் பொறுப்புக் கூறல் அதிகாரத்தின கீழ் ஆட்சியினை

19 ஆம் பக்கம் பார்க்க....


பணிநிலை வேண்டுகை

புத்தகம் கட்டுநர்

மேற்குறிப்பிட்ட பணி நிலைக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன. முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

- வேண்டுகையாளர் யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- நேர்முகத் தேர்வு 2014-10-16,17,18 ஆகிய நாட்களில் நடைபெற உள்ளதால் நேரில் வருகை தரவும்.

(C-8757)

கரிகணன் (தனியார்) நிறுவனம்
இல.681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.

அதிரடி
வேலை வாய்ப்புக்கள்

கட்டர் நாட்டின் புதிய சர்வதேச Hamad விமான நிலையத்தில் 40 இற்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

இதற்கான விபரங்களை நாளைய வலம்புரி பத்திரிகையில் பார்வையிடலாம்.

(C-8760)

அமெரிக்க லொத்தர் விசா

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
55000 பேருக்கான வாய்ப்பு, இலவசமாக உங்கள் வெற்றி வாய்ப்பினை உறுதி செய்துகொள்ளுங்கள்
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம் 2015 இல் A/L எடுப்பவர்கள் கூட விண்ணப்பிக்கலாம்
உடனே விரையுங்கள் - தாமதம் வேண்டாம்
அலட்சியம் வேண்டாம் நம்பிக்கையுடன் பதியுங்கள் வெற்றிபெறுங்கள்

கிளிநொச்சி
A9 வீதி - பழைய ஆஸ்பத்திரி முன்னால்
0771516537

யாழ்ப்பாணம்
49A சப்பல் லேன் - பொது நூலகம் முன்னால்
0773867257

நெல்லியடி
முடக்காட்டுச்சந்தி
0776699892

வல்வெட்டித்துறை
யாழ்வீதி - வல்வெட்டி
0776697960

குறைந்த கட்டணத்தில் ● அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள் ● உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப்பொதிகள் சேவை
V2 Travels and Tours (Pvt) Ltd (8074)


## கைதி...

சாலைகள் ஆணையாளர் சந்திரசிறி பல்லேகம தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின கீழ் ஒரு கைதிக்கு ஒரு வாரத்துக்கு 10 நிமிடங்கள் வரை வெளியாருடன்பேசுவதற்கு அனு

19 ஆம் பக்கம் பார்க்க....


# யாழ் வரலாற்றில் நீங்கள் எப்போதும் கண்டிராத நிகழ்வு உங்கள் நகரில் கணக்கிடமுடியாத இலட்சத்துக்கு மேற்பட்ட டிசைன்களில் தொகையான ஆபரணங்கள்

யாழ் யுவதிகள் தங்க முலாம் பூசப்பட்ட மற்றும் ரேடியம் முலாம் பூசப்பட்ட, அவுஸ்திரேலிய வைர நகைகளை கொள்வனவு செய்யலாம்.

உரிய ஏற்றுமதி விலையான ரூ.1500/= - 3000/= வரையிலான நகைகளுக்கு

**ரூபாய் 200 /-, 400 /- மட்டும்**

16,17,18 & 19 (வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)
நான்கு நாட்களுக்கு மட்டும் | நேரம் : முப. 10.00 – பிப. 8.00

ரூ 200 /- உம் ரூ 400 /- க்கும் விற்பனை செய்யும் ரூ.3000 /- ஏற்றுமதி கொண்ட 10 இலட்சம் நகைகளை இன்றே கொள்வனவு செய்யுங்கள்.

இவ் விளம்பரத்தில் எல்லா டிசைன்களையும் குறிப்பிட இடமில்லை சில ஆபரணங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்

- மும்பாய் தங்க முலாமிடப்பட்ட வளையல்கள் ........ ரூ. 200/- மட்டும்
- ஹைட்ராபாய் முத்து வளையல் ........ ரூ. 200/- மட்டும்
- மேல்நாட்டு மாதிரியிலான தோடுகள் ........ ரூ. 200/- மட்டும்
- அவுஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் ........ ரூ. 200/- மட்டும்
- அவுஸ்திரேலிய டயமன்ட் டொப்ஸ் ........ ரூ. 200/- மட்டும்
- சுஹகன் தங்க முலாமிடப்பட்ட வளையல்கள் ........ ரூ. 200/- மட்டும்
- சிபரா தங்க முலாமிட்ப்பட்ட மாலை ........ ரூ. 200/- மட்டும்
- பஞ்சாப் பியூட்டி குயின் மாலை ........ ரூ. 400/- மட்டும்
- அமெரிக்க டயமன்ட் நெக்லஸ் ........ ரூ. 400/- மட்டும்
- கிரிஸ்டல் நெக்லஸ் செட் ........ ரூ. 400/- மட்டும்
- ஹைட்ராபாய் முத்து நெக்லஸ் செட் ........ ரூ. 400/- மட்டும்
- இத்தாலிய டயமன்ட் தோடுகள் ........ ரூ. 400/- மட்டும்
- ரேடியம் பிளேடிங் டயமன்ட் பிரேஸ்லெட் ........ ரூ. 400/- மட்டும்
- ஜய்பூரி குண்டன் நெக்லஸ் செட் ........ ரூ. 400/- மட்டும்
- அவுஸ்திரேலிய டயனம்ட் மோதிரம் ........ ரூ. 400/- மட்டும்

விசேட சலுகை : விவாக சடங்குகள் மற்றும் வைபவங்களுக்கு ரூ. 500 /–, ரூ. 5000 /– வரை விசேட ஆபரணங்கள்

## இடம் : நல்லூர் மயிலூரான் அரங்கம் திருமண மண்டபம்

அனுமதி இலவசம்
வாகன தரிப்பிட வசதி

இல. 590, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (நல்லூர் முருகன் ஆலய வீதி)
தொலைபேசி : 0755075675, 0212219732
விற்பனை பெண் பிரதிநிதிகள் தேவை

(8070)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.